புதினம்
5
நா. 853

# சார்ந்தகோட்டை

A.K. வேலன்

398 A/63

# சரிந்தகோட்டை

திருமிகு,
T.K.S. சகோதரர்கட்கு
அன்பளிப்பு
22.5.53

ஆசிரியர் :
ஏ. கே. வேலன்

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

எரிமலைப் பதிப்பகம்
துறையூர், திருச்சி ஜில்லா.

இதோ 'சரிந்தகோட்டையை'த் தீட்டி உங்கள் முன் வைக்கிறார். அருமை நண்பர் **ஏ. கே. வேலன்.** 'சரிந்த கோட்டை' வெறும் கற்பனை அல்ல. புள்ளி விவரங்களோடும் ஆதாரங்களோடும், காலக் கணக்கோடும், கணக்காக எடுத்தளிக்கப்பட்டிருக்கும் சரித்திரச் சான்று...! தமிழனின் ஆட்சி தஞ்சையிலே வீழ்ச்சி அடைந்தது எதனால்? மாற்றார்கள் வந்து தமிழன் மண்டலத்தில் புகுந்துவிட நேர்ந்தது எதனால்? அன்பால் ஆட்சியும், ஆற்றலால் அறமும் காத்த தமிழ் முடிவேந்தர்கள் தலைசரிக்க நேர்ந்தது எதனால்? நினைக்க நெஞ்சு கொதிக்கும் அந்தத் துயர வரலாற்றைப் படம் பிடித்துத் தருகிறார் தோழர் ஏ. கே. வேலன்.

'வேலன்' தமிழகத்திற்கு அறிமுகப்படுத்த வேண்டியவரல்ல. அவருடைய இந்தச் செயற்கரும் தொண்டிற்குத் தமிழகம் கடமைப்பட்டிருக்கிறது. அதை வெளியிட உரிமைதந்த அவருக்கு அன்புடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அவர் தம் கருத்தை மனத்துட் கொண்டு கருத்துடன் கண்கவரும் முகப்பை வரைந்த ஓவியத் தோழர் **ஈஸ்வரனுக்கும்** நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

**பதிப்பகத்தார்**

அவ்வை
தி.க.சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# சரிந்த கோட்டை

சரித்திர ஏடுகளைப் புரட்டினல் ஒவ்வோர் அத்தியாயமும் ஓர் அழிவுக் காதையாகத்தானிருக்கிறது. முற்றுகையிடப்படாத கோட்டை, ரத்தக்கரை படியாத வாள், போர் முரசு கொட்டாத மன்னர் இருந்ததில்லை! அரசியல் வானில் பகைமேகம் சஞ்சரிக்காத காலம் மிக மிகக் குறைவு! ஒன்று வெற்றி கீதம் இசைக்கப்படும் அல்லது விடுதலைப் பண் முழக்கப் படும்.

இங்கிலையில் நிகழ்ந்த மாந்தனின் ஆரம்பகாலப் போர்கள் கடவுள்களின் பேரால் கற்பனை செய்யப் பட்டிருக்கின்றன, கொஞ்சம் அறிவு வளர்ந்தநிலையில் நடந்த போராட்டங்களுக்கு தெய்வங்கள் ஆயுதங் கொடுத்து, வரங்கொடுத்து உதவியதாகக் கதைபேசப் படுகிறது. பின்னுளில் அந்த நாசவேலைகட்கு 'வீரதீரம்' என்ற மெருகிடப்பட்டு விட்டது. ஆகப் 'போர்! போர்!' என்ற வெறியாடலை அடிப்படையாக வைத்தே வரலாறு வளர்ந்துகொண்டிருக்கிறது. அவ்வரலாற்றுச் சுவட்டிலே நின்று திராவிடத்தை நோக்கினுல் இடிந்த கோட்டைகள், தூர்ந்த அகழிகள், அழிந்த அரசுகள் பலப் பல தெரியும். அவற்றின் சிதைவுச் சின்னமாக இன்னும் பல காட்சி தந்து கொண்டிருக்கின்றன.

ஒரு குன்றின் கொடுமுடியில் கொத்தளம்; அதன் சரிவுகளில் படைவீடு; அடித்தளத்தில் ஆயுதக்கிடங்கு; மற்றொன்றின் உச்சியில் மாளிகை, மகால், மாட கூடங்கள்; அடுத்ததில் உல்லாசவனம் பளிங்கு மண்டபம், சுரங்கப்பாதை என மூன்று குன்றுகளை இணைத்துப் போட்ட பாறை முடிச்சு, செஞ்சிக்கோட்டை. அதன் முழு உருவம் இன்று இல்லை. அது ஒரு சரிந்த கோட்டை!

மேல்தளத்தில் அரண்மனை அந்தப்புறம்!......... அடிவாரத்திலிருந்து உச்சிவரை சுற்றுமதில்—அதன் வளைவு தோறும் ராணுவ முகாம் என்ற அமைப்பில் சங்ககிரி துர்கம். ஆனால், இன்று அதுவும் ஒரு சரிந்த கோட்டைதான்.

இங்கிலையில், திருமயம்—திண்டுக்கல் — வேலூர் முதலிய அதிகமான இடங்களில் குன்றுகள் கோட்டைகளாக்கப்பட்டு குலைந்து கிடக்கின்றன.

சமவெளிகளில், பாறைகளை அடுக்கி காரையைப் பூசி, சுற்றிலும் பள்ளம் பறித்து வெள்ளத்தைத் தேக்கி, உள்ளூர வானையளக்கும் மாளிகைகளை எழுப்பி அமைக்கப்பட்ட கோட்டைகளின் எண்ணிக்கை மிக அதிகம். அவைகளில் அடையாளம் தெரியாமல் மண்மூடிப் போனது போக எஞ்சியுள்ள அத்தனையும் சரிந்த கோட்டைகள்தான்! நம்சரித்திரத்திற்கு சாட்சியங்கள் அவையே! அவற்றின் வீழ்ச்சிப் படலத்தைக் கொஞ்சம் துருவிப் பார்த்தால், சூது, சூழ்ச்சி—வஞ்சம்—பொறாமை ஆகியவை புரையோடி

யிருக்கும். வீம்பும் வெறியும் வெடிமருந்து உருவில் முழங்கியிருக்கும். அந்தச் சுழலில் சரிந்த கோட்டை தான் நம் தஞ்சையும்.

# I

ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகட்குமுன் (1633-1673) தஞ்சையில் வேந்தன் விஜய ராகவன் பெருமித மாக அரசு நடத்திக் கொண்டிருந்தான். அவன் ஆட்சி யில் நாடு செழித்திருந்தது. அவன் பொக்கிஷம் நிறை ந்து வழிந்தது போலும். கோடி கணக்கில் செலவிட்டு கோவில் கட்டுவதும், குளம் வெட்டுவதும் அவனது பொழுது போக்கு!

'மங்கள மங்கையராய்—மன்னவர் கன்னியராய் - மைந்தர் வயிற்றினராய் — திங்கள் நிறைந்து வரும் சேயிழையார் நடைபோல் தென்றல் அசைந்துவரும் தென்தமிழ்நாடு' என்ற இலக்கியத்திற்கு நிலைக்கள மாய் இளங்காற்று மெல்லெனத் தவழ்ந்துகொண்டி ருந்தது. மாங்கொப்புகள் பூங்கொப்புகளாக மலர்ச்சி யுற்றிருந்தன. மருதோன்றியின் மகரந்தம் காற்றில் கரைந்து மணம் பரப்பிற்று. ஆக வசந்தம் பூத்துக் குலுங்கிய பருவகாலம் அது!

அப்பொழுது மேற்றிசையில் வானத்தில் பொன் னுருக்கு வெள்ளத்தில் செம்பருதி மிதக்கும் நேரம். புருஷர் சகவாசம் தெரியாத புதுப்பருவ மங்கை யொருத்தி தஞ்சை சிவகங்கை அனுமாருக்கு நெய் விளக்கேற்றி வைத்து விட்டு சேவப்பன் குளத்தை நோக்கி நடந்தாள். 'கதம்பத்தின்' மணம் அவளை

முந்திக்கொண்டு விரைந்தது. ஆனால் அவள் குழலிலே அந்த மலர்க்கூட்டத்தைக் காணோம். அவள் இடையி லிருந்த குடத்திலிருந்துதான் அந்த வாசனை எழும்பி யது. அதுவும் அவள் சூடிக்களைந்தவையல்ல! அவள் தந்தை ஆண்டவனை அர்ச்சித்த நிர்மாலியம்! வாடி யுதிர்ந்து கருகிச் சுருண்ட பூங்குப்பை. அதன் புனிதம் கெடாமல் குளத்தில் வீசத்தான் அதனைக் கொண்டு வந்தாள். அங்கே குளத்தங்கரையில் பூத்துக்கிடந்த முல்லைக்காடு "தலைவாரிப் பூச்சூடத் தகுதியற்றவள் வருகிறாள்" என்று பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தது. அவள் நடையிலே நளினம் இல்லை. பார்வையில் பர வசத்தைக் காணோம். ஆனால் இதயத்தில் ஆயிரம் எண்ணங்கள் படமெடுத்தாடின. அந்த சோக ரேகை தான் அவள் சுந்தரவதனத்தில் படர்ந்திருந்தது. புன் னகை பூக்க அவளுக்கு உரிமையில்லை. ஒரே வார்த்தை யில், அவள் வேதனைக்கு விளக்கம் 'விதவை' என்பது தான். வாழ்க்கை இன்பத்தைத் தெரிந்து கொள்ளும் வயது வரு முன்னரே வைதிகம் அவளை மங்கலப் பாதையிலிருந்து புறக்கணித்து விட்டது! என் செய் வாள்! பருவத்தின் பதை பதைப்பிருந்தாலும் அவள் சமூகத்தின் நிபந்தனைக்குட்பட்டு நடக்கப் பழக்கப் பட்டு விட்டாள்.

அன்று அவள் நீரெடுப்பதற்காக சிவகெங்கைப் படிக்கட்டிலிறங்கினாள். தெள்ளத் தெளிந்து சலன மற்று நின்ற நீர்த்தேக்கம், நிலைக்கண்ணாடி போல் அவள் அழகு வெளிச்சத்தைப் பிரதிபலித்தது. அவள் கண்கள் கூசின. அப்படியே சொக்கி நின்றாள், தன் னழகைத் தானே ரசிக்கும் பரிதாப நிலையில். இந்த

வேதனையைக் காணச் சகியாதவன் போல் கதிரவன் தன் பொற்கிரணங்களைச் சுருட்டிக்கொண்டு மெள்ள நழுவிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது 'டக்—டக்' எனக் குதிரையின் குளம்படி ஓசை குளக்கரை நோக்கி வந்தது. திடுக் குற்ருள். அவள் மயக்கம் கலைந்தது. அவள் கைகள் விரைந்தன; நீர் நிறைந்த குடம் அவள் இடுப்பில் ஏறிற்று; மட மடவென்று படிக்கட்டுகளைத் தாண்டி கரை ஏறினாள்.

அதற்குள் குதிரையில் வந்த குமரன் குதித்திறங் கினான். குதிரை கனைத்தது.........இவள் பயத்தில் வெடவெடத்துக் குடத்தைக்காலில் போட்டுக்கொண் டாள். பெருவிரல் நசுங்கி ரத்தம் பீறிட்டடித்தது. தடதடவென்று தண்ணீரைநோக்கிக் குடமும் உருண் டோடிற்று. அவளுக்கு உள்ளம் அதிர்ந்தது; உடல் பதறிற்று; தன்னிலை கொள்ளாது தடாலெனச் சாய்ந்து விட்டாள்.

இவன் விரைந்துஅவளை வாரியெடுத்தான். வழிந் தோடிய ரத்தத்தைத் துடைத்தான். அதன் பெருக்கு நிற்கவில்லை, தன் மேலாடையைக் கிழித்து காயத்தை கட்டினான்.........இவ்வளவும், இரக்கமென்ற ஒரே உணர்ச்சியுடன்தான், அவளுக்கு உதவினான்! ஆனால் இவனுடைய உபசரிப்பு அவளுக்குப் புல்லரிப்பைத் தந்தது. அவளுக்கு அச்சமும் அயர்ச்சியும் தெளியத் தெளிய, அவள் அதுவரை கண்டிராத ஒரு ஆனந்தக் கிளர்ச்சி அவளைக் கிறுகிறுக்கச் செய்தது. அந்தப் புது உணர்ச்சியில் தன்வசம் இழந்து விட்டாள்.

அவன் மீட்டவில்லை, ஆனாலும் அவளுடைய இன்பயாழ் அதிர்ந்தது. உலகம்—வாழ்க்கை அனைத்தும் அவளுக்கு அப்பொழுதுதான் ஆரம்பமாயிற்று; அதுவும் அந்த ஆண்மகன் உருவத்தில. நேரம் பறந்து கொண்டிருந்தது; நிலவு தன் பாலொளியைச் சிந்திய வண்ணம் மேலெழுந்து விட்டது. அவளை மெல்ல எழுப்பி வழியனுப்ப முயற்சித்தான். அவளுக்கோ அவன்பிடியினின்றும் நழுவப் பிரியமில்லை. அன்று தான் புதிதாகக் கண்டறிந்த தேக சுகத்தைவிட்டுவிட எப்படித் துணிவாள்? அவளால் பேச முடியவில்லை. ஆனால் குப்பென்று சிவந்துபோன அவள் முகத்தின் புதுக்களையும், செவ்விதழ்களின் சிலிர்ப்பும், கனல் மூச்சும், கடைவிழியின் ஓரப்பார்வையும், அவளை அவனுக்குக் காட்டிக் கொடுத்து விட்டன.

அவன் என்ன புத்தனின் மறுபிறவியா? ஆசை வெள்ளத்தைக் கடந்து அவளை 'சுஜாதை' யாக நடத்த அவனோ இளவயதும் அழகும் வாய்ந்தோன். அதிலும் அரசிளங்குமரன். அவன் வலியப் பற்றினாலும் கூட, தவறென்று கண்டிக்க உலகிற்கு தைரியம் ஏது? அவள் தானே விருந்தாக- சம்மதிக்கும் போது கேட்கவா வேண்டும்? அன்று முதல் சிவகெங்கைப் பூங்கா அவர்கட்கு சரசக்கூடமாயிற்று. முன்பெல்லாம் '' நெருப்பாகக் கொப்புளித்த ' நிலவு ' என்றும் தேயாமல் ஒளி செய்தால் என்ன'' என்ற நினைவு தோன்ற ஆரம்பித்து விட்டது அவளுக்கு. நாள் தோறும் நள்ளிரவுக்குப்பின் தான் அவள் உலகம் ஆரம்பமாகும். பகலெல்லாம் அவள் பக்தை! இரவில் இன்பவானில் வட்டமிடும் காதற்சிட்டு. வைதீக வல்லூறுகளில்

விஷப்பார்வைக்கு அவள் தப்பமுடியுமா? இப்பொழுது விதவையென்ற அடைமொழியுடன் 'விபசாரி' என்ற விருதும் சேர்ந்துவிட்டது; அவள் வேதனைத் தீயில் வெந்துகொண்டிருந்தாள். வைதீகம் அவளைக் கண்டு வெறித்தது. அழுகி நாற்றமெடுத்த பொருளை அறுவறுப்போடு ஒதுக்கித் தள்ளுவதுபோல, சுற்றமும் சூழ்நிலையும் அவளைப் புறக்கணித்தன. சமூகத்தின் ஏச்சும் பேச்சும் அவளிதயத் திரையைச் சல்லி சல்லியாத் துளைத்துக் கொண்டிருந்தன. அவள் அழுதாள்......அழுதாள்......கண்களில் நீரூற்று வறண்டு போகும் அளவுக்கு. அது ஒன்றுதானே பெண் குலத்திற்குரிய—மற்றவர்களால் மறுக்கப்படாத—உரிமை! ஆனால், அவள் அழுகையைக் கண்டு யாரும் அனுதாபப்படவில்லை. வீட்டிலோ குரோதப்புயல்! வெங்கண்ணுவின் பார்வையில் படக்கூடாத 'விஷஜந்து' அவள். என்செய்வாள்? அவளுடைய ஏழை உள்ளத்தில் எத்தனையோ குமுறல்கள். அப்பொழுது அவளுக்குத் தேவைப்பட்டது அமைதி—ஆறுதல்! அதற்கு அவளுக்குத் தெரிந்த ஒரே வழி ஆண்டவனை நம்புவது தான். அதைத்தவிர அவளால் வேறு என்னதான் செய்துகொள்ள முடியும். அவள் ஒரு அபலை!

இரவுக்கு இடங்கொடுத்துவிட்டுப் பகல்பதுங்கிக் கொண்டிருந்த அந்திவேளை. இவள் அனுமார் கோவிலுக்குச் சென்றாள். அங்கே ஆலயத்திலும் இவளிதயத்தைப்போல் இருள்தான்! ஒரு மூலையில் மட்டும் அகல் விளக்கில் திரி கரிந்துகொண்டிருந்தது. அதனைத் தாண்டிவிட்டாள். அதன் துணைகொண்டு அணைந்த விளக்குகளை ஏற்றினாள். 'படமுடியாது இனித்துய

ரம்' என்ற பரிதாபம் அவள் பார்வையில் இழைந்தது. அவளிதயத்தில் கொப்பளித்த வேதனைக் குமிழிகள் துன்ப அருவியாகப் பெருகின. துயரத்தின் எல்லைக் கோட்டில் அவள் சோகச் சிலையாக நின்றாள். அந்த நேரத்தில் அர்ச்சகன் அங்கு வந்து சேர்ந்தான் அந்திப் பூசை வைக்க. விரியனை மிதித்தவன் போல் வேத வல்லியைக் கண்டு மருண்டான். "அடி பாபப்பட்ட வளே! புனிதமான இங்கு என்ன வேலை உனக்கு? கெட்டுப்போன உனக்குப் பக்திசெய்யத் தகுதியேது? தேவாலயம் உன்னால் தீட்டுப்பட்டு விட்டதடி சண் டாளி!" எனச் சீறினன். அவனுடைய சுடுசொற்கள் அவள் ரோஷத்தைச் சுண்டிவிட்டன. அவளுடைய பெண்மையுள்ளம் புலியுள்ளமாயிற்று. "பாதகனே, நான் பாபப்பட்டவள்! என் பாபத்திற்குப் பரிசு, உங்களுக்கு பால் பாயாசத்தோடு விருந்தா? கெட்டுப் போன என் பெயரால் கொட்டிக்கொள்கிறீர்களே விலாப்புடைக்க. நா, தமும்பேரத் தமும்பேரத்தின் னும தினவுதீர என்னை நிந்திக்கிறீர்களா? நினைத்துப் பாருங்கள் உங்கள் நீசத்தனத்தை!" என நெருப்பாக வார்த்தைகளை வாரி வீசிவிட்டு வெளியேறினாள்.

எவ்வளவுக்கு உலகம் அவளை நிராகரித்ததோ அவ்வளவுக்கு உலகமும் அவளுக்கு கசந்துவிட்டது. செத்துவிடுவதென்ற முடிவுக்கு வந்து விட்டாள். சாவின் பயங்கரம் அவளுக்கு சமுதாயத்தின் கொடு மையை விடக் குறைவாகத் தெரிந்தது போலும்!

உலகமும் உறக்கமும் உறவாடிக்கொண்டிருந்தன அவள் உடல் ஊஞ்சலாட ஒரு முழக்கயிறுதான் அவ

ருக்குதேவைப்பட்டது கயிற்றை எடுத்தாள். கால்கள் தோட்டத்தை நோக்கி நடந்தன. கருத்திலே, கடந்து போன வாழ்க்கைப் படச்சுருள் பிரிந்து சுழன்றது. மரணத்தை முத்தமிடப்போகும் அவள், மன அமைதிக்காக, மீண்டும் அனுபவிக்க முடியாத சுகத்தைக் கடைசியாக ஒருமுறை எண்ணி மகிழ்வதற்காக, அவள் இளவரசனோடு குலவிய இன்ப இரவை நினைவிலே நிறுத்தினாள்.

வானவிளிம்பைத் தொடும் ராஜராஜன் புகழ்க் கோபுரம்-அதனை முத்தமிட நீந்திவரும் வெண்ணிலவு —அவற்றிடையே வைரச்சிரிப்போடு குலவும் விண் மீன்கள்—பச்சைப் பட்டு விரித்தது போன்ற பசும் புல்வெளி—ஆங்கே பாற்கோலம் இட்ட நிலையில் நிழலும் ஒளியும் நெளியும் காட்சி—இயற்கையின் சித்திர வண்ணத்திற்குச் சாட்சியாய் செழித்துக் குலுங்கிய பூந்தோட்டம்—சிவகெங்கைக் கோட்டையாகத்தோன் றிற்று. அந்தக் காதற் பண்ணையிலே வாளேந்தி மன்னரு இவள் தாளேந்த-இவள் அவன் தோளேந்த-இதழ் தின்று குடித்த இன்பத்தேன்! உணர்வுவானில், அவனும் அவளும் விளைத்த அன்பு முத்தங்கள்! காதல் யாழ் மிழல, ஊன் கலந்து உயிர் கலந்து அவர்கள் கண்ட சொல்லுக்கடங்காத சொர்க்கம்!—நினைவுக்கு வந்து தித்தித்தது. அந்தப் போதைக் கிறுகிறுப்பில் தன்னை மறந்தாள். தாலிக் கயிற்றின் தழும்பேறாத கழுத்தைத் தாம்புக் கயிறு இறுக்கிற்று. சண்டாள உலகத்திலிருந்து அவள் விடுதலை பெற்றுக்கொண்டிருந்தாள். ஆனல்...தொங்கிய உடலம் தொப்பென்று விழுந்தது.

ரோந்துக்காரனின் லாந்தர் வெளிச்சம் அவள் உடலில் இன்னும் உயிர் ஒட்டிக்கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டிற்று. அவனுடைய கூப்பாடு அக்கம் பக்கத்தார்களை, சுருண்டு கிடந்த அவளைச் சுற்றி. கொண்டுவந்து நிறுத்திற்று. அவள் சாகத்துணிந்த தற்காகச் சகிப்பும், சாகவில்லையென்பதற்காகச் சலிப்பும் அங்கே நிலவியது. 'குடும்பத்தின் பெயர் கெடுக்கத் தோன்றிய கொடியவளே! விஷப்பாம்பே! என் கோத்திரப் பெருமை குலைந்து விட்டதே! அந்தஸ்தின் அஸ்திவாரத்திலே அவமானச் சரிவு நேர்ந்துவிட்டது. அரண்மனை வட்டாரத்திலே தலையிறக்கம்! அக்கிர காரத்திலே சாதிப்பிரஷ்டம்! சனியனே, இவ்வளவு கேவலமும் உன்னால் அல்லவா? ஒழிந்துபோ!' என்று எரிந்து விழுந்தான் வெங்கண்ணு! அங்கே சூழ்ந்து நின்ற கும்பல் இழிவையும் பழியையும் அவளுக்கு ஆலவட்டமாக்கிவிட்டு மெள்ள நகர்ந்தது.

பிழைத்தெழுந்த அவள், அந்த இரக்கமற்ற கூட்டத்திற்குத் தோற்றுவிடவில்லை. தன்னை வாழவும் அனுமதிக்காது, சாகவும் அனுமதிக்காத இந்த சமுதாயத்திற்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டாள், அந்த நாளில், தென்னாட்டில் இடம் பிடித்துக்கொண்டிருந்த ஏசு மதம் வேதவல்லிக்கும் புகலளித்தது.

## II

சூது, சூழ்ச்சி, வஞ்சகம்—ஆகியவற்றின் கூட்டுச் சரக்கான இதயம்! விஷ அணுக்களாலான இரத்த ஓட்டம்! தந்திரப்பார்வை! சாகசப்பேச்சு! கபட நடிப்பு! முதலியவற்ருேடு கூடிய மனிதப் பதிப்பு வெங்கண்ணு!

மகள் வேதவல்லிக்காக அவன் மனம் வெதும்ப வில்லை. அவள் கெடவுமில்லை, கெடுக்கப்படவுமில்லை! சந்தர்ப்பமே சம்பிரதாயத்தைக் கடந்து அவளைச் சல்லாபபுரிக்கு இட்டுச்சென்றது, என்பது அவனுக்கு புரிந்திருந்தது. ஆயினும் சனாதன தர்மம் பாதிக்கப் பட்டுவிட்டதென்ற சஞ்சலமே அவனிதயத்தில் சதி ராடிற்று. மாந்தாதாவின் ஏற்பாட்டிற்கு முன்னால தூசாக மதிக்கப்பட்டாள்.

அந்த விதவை நிலையிலேயே, அவளை வேறொரு வேதிய குல வாலிபன் சுவைத்திருந்தால் அதற்குப் பிராயச்சித்தம் உண்டு மனுதர்மத்தில். பௌண்டரீக யாகத்தின் பேரால், பரண் கட்டி அதிலே பகிரங்க மாகக் கூடப் படுத்துப் புரள அனுமதிக்கப்பட்டிருப் பாள். புத் என்ற நரகத்திற்குத் தப்ப புத்திரதான யோகத்தின் பேரால், மனதிற்குப் பிடித்த மைத்து னன் மாருடன் மருவியிருக்கலாம்! மாமனோடு கூடி யிருக்கலாம்-அந்த விபசாரங்கள் யாக-யோகம் என்ற திரையிட்டு அனுமதிக்கப்பட்டிருக்கும்; ஒரே நெய் முழுக்கில்.........அத்தனை தோஷங்களும் நீங்கிவிடும்! ஆனால் மேல் வருணத்தில் பிறந்த அவள் அடுத்த குலத்தில் பிறந்த அரசிளங்குமரனுடன் கொண்ட தொடர்புதான் அனுமதிக்கப்படவில்லை வர்ணாஸ்ரமத் தின் பேரால். அந்தக் குரோதமே வெங்கண்ணனிடம் கொளுந்துவிட்டெறிந்தது. வேதவல்லியின் வேதனையை விப்பிரகுல வளர்ச்சிக்குப் பகடையாக உருட் டினான்.

வேந்தன் விஜயராகவனோ விப்பிரர் குலப்பழி நேர்ந்துவிட்டதென வெதும்பினான். 'மகனே தவ

றுடையான்' என்ற முடிவில் மாந்தாதா பரம்பரை யினரிடம் மன்னிப்புக் கோரினன்.

வேந்தன் மகன்; ஆ ன லு ம் "வீதவை என்ற விலங்கை முறித்தது குற்றம்; அதிலும் வேதியர் குலக் கொழுந்தை தொட்டது மன்னிக்கமுடியாத மாபாதகம்" என சனுதனம் சீறிற்று; சாஸ்திரம் சல்லடம் கட்டிற்று.

விஜயராகவன், மனுதர்மத்தை நிலைநிறுத்துவதாக நினைத்து, மகனைத் தண்டித்து இருட் சிறையில் அடைத்தான். வேதியர்களை திருப்தி செய்வதற்காக தினம் தினம் ஆயிரம் வேதியர்கட்கு அன்னதானத்திற்கு ஆவன செய்து கொடுத்தான். அ த ற் கா க லட்சம் விப்பிர அன்னதாதா என்ற பட்டத்தைச்சூட்டி பாராட்டினர். ஆயினும் பிரம்ம குலத்தை மாசுபடுத்திய மன்னருவைக் கருவிக்கொண்டுதானிருந்தனர்.

அதனல் அரசனின் அமைதி அழிந்துவிட்டது! ஆலயம் எழுப்புவது—ஆண்டவனைக்கொண்டாடுவது என்ற நிலைமையைக் கடந்து—'அந்தண விசுவாசி' என்ற பெயரை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியவனுன். அந்த அளவுக்கு எதிர்காலம் அவனுக்குப் பயங்கரமாகத் தோன்றிற்று. மகன் மன்னரு முடி தரிப்பதும், அவனைக் கவிழ்க்க சாணக்கிய குலம் செய்யக்கூடிய சதிகளும் நினைவுக்கு வந்தன. எப்படியேனும் தன் காலத்திலேயே விப்பிரர்களைத் திருப்தி செய்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்......

ரகுநாதபுரம் என்ற புது அக்ரகாரம் உருக்கொண்டது. அங்கு குடியேறிய பூசுரர்களுக்கு 'இனம்'—

'முற்றாட்டு'—'சதுர்வேதிமங்கலம்' என்ற பெயரில் பல்லாயிரம் வேலி நிலங்கள் மான்யமாக விடப்பட்டன.

அதற்குமேலும் வெங்கண்ணு, அக்ரகாரத்திற்கு ஏதேனும் ஆகவேண்டியிருந்தால் சுண்டிய முகத்துடன் அரசனுக்கு முன் சோர்ந்து காணப்படுவான்; மன்னன் தேற்றுவான். இவன் மன உருக்கத்துடன் "மகளின் நினைவு" எனப் பகட்டுவான். மனச்சான்று வேந்தனை வெங்கண்ணுவுக்குக் கட்டுப்படுத்தும். அந்த சந்தர்ப்பத்தில் சாதித்துக்கொள்ளுவான் எதிர்பார்த்ததைவிட அதிகமாக! இது வெங்கண்ணுவின் வளர்ச்சியில் சாதாரண நடப்பு. நாளடைவில் வேந்தன் விஜயராகவன் வெங்கண்ணுவின் விருப்புவெறுப்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணுடிப் பதுமையாக நேர்ந்தது. அதுமுதல் வெங்கண்ணுவுக்கு, அவனுக்குரிய அந்தஸ்துக்குமேல் அதிக மரியாதை கிடைத்தது. அரண்மனை வட்டாரத்தில் சாதாரண கணக்கனுக இருந்தவன் அந்தரங்க ஆலோசனைகளிலும் கலந்துகொள்ளும் முதன்மைக்குரியவனுனன். ஆக நாளடைவில் ராயசம் வெங்கண்ணு, ராஜகுரு வெங்கண்ணுவாக நிலைமையில் உயர்ந்துவிட்டான்.

அவன் ராயசமாக இருந்த அனுபவத்தால் அரசாங்கத்தின் அந்தரங்கங்களைப் புரிந்துகொண்டான். ராஜகுருவாகக் கிடைத்த மரியாதை, மன்னனை அவன் பிடியில் சிக்க வைத்தது. அரசியல் நடவடிக்கைகளில் அவன் காட்டிய நரித்திறம் தஞ்சைத் தர்பாரில் அசைக்க முடியாத மேலாதிக்கத்தைத் தேடித் தந்து விட்டது. ஆக வளர்ந்துவிட்டான்......வளர்ந்து

விட்டான்.........சாஸ்திரி வெங்கண்ணா, சர்வாதிகாரி வெங்கண்ணாவாக.

அவனுடைய வளர்ச்சி அக்ரகாரத்தின் வளர்ச்சியாக பிரதிபலித்தது. அவன் பெற்ற ஆதிக்கம் ஆரிய கலாச்சாரத்தின் ஆதிக்கமாகவே அமைந்துவிட்டது. பின் கேட்க வேண்டுமா ?

காமராஜு, வேங்கடபதி சோமயாஜி, கோனேடி தீட்சதர், க்ஷேத்திரக்ஞர் முதலிய வடமொழிப்பண்டிதர்கட்கு வரிசை கொடுக்கப்பட்டது ராஜ சபையில். சசிலேகா, கஸ்தூரி, கிருஷ்ணாஜி, மோகனசுந்தரி முதலிய அலங்காரவல்லிகளும் பண்டித பூஷணங்களாக இடம் பெற்றனர் தர்பாரில். அல்லஸானி பெத்தண்ணா, ஐயந்தி ராமய்ய பந்துலு முதலிய தெலுங்குப்புலவர்கள் ஆஸ்தான கவிகளாக்கப்பட்டனர்!

வழக்கிழந்த வடமொழிக்குப் புது வாழ்வு தேடினான். இசைத்துறை அதற்கு இலக்காயிற்று! வடமொழி மரபுகளை—வடவர் சுர வரிசையை—தாளக் கட்டினை இங்கே நிரந்தரமாக்க நினைத்தான். தமிழிசை மரபு அதற்குத் தடையாகத் தெரிந்தது; தயங்கவில்லை, தனித்தியங்கும் அதன் ஆற்றலை அழிக்க......அன்று அவன் ஊன்றிய விஷவித்தினை வேங்கடமகியின் புலமை வளர்ந்துவிட்டது. அதன் பலன் இன்று நாம் தமிழிசைப்போராட்டம் நடத்தவேண்டிய அளவுக்குத் தமிழ்க்கலை வாழ்விழந்தது. தமிழ்க் கருவிகள் கைநழுவிப் போயின. தனித்தமிழ் இசை மரபுகள் அழிக்கப்பட்டுவிட்டன.

ஃ ஃ ஃ

இசை! அதன் சுவையைச் சுட்டிக் காட்டச் சொல்லேது, செவிப்புலனைக் குளிர்விக்கும்—சிந்தையைத்தொடும் — உணர்வை அள்ளும் — உள்ளத்தை உருக்கும், ஒலியுருவான மின்சார அலைவகுப்பு அது!

அந்த நுண்கலையைத் தமிழன், வழிந்தோடும் அருவியின் சலசலப்பிலிருந்து, வண்டின் ரீங்காரத்திலிருந்து, முகிலின் முழக்கததிலிருந்து, மூங்கில் துளையின் மூச்சிலிருந்து, வில்லின் அதிர்ச்சியிலிருந்து கற்றுக்கொண்டான்.

குயிலின் ஓசையில், குமரியின் சிரிப்பில், குழந்தையின்மழலையில் அந்த உணர்ச்சி மலர்ந்தது. அதனை வாழ்க்கையோடு இணைத்து அமைத்துக்கொண்டான். அவனுக்கு ‥குழந்தைப் பருவத்தில் தூங்கத்தாலாட்டு —சோறுண்ண அம்புலிப்பாட்டு, பிள்ளைப்பருவத்தில் துள்ளும் வரிப்பாடல், மணவிழாவில் மங்கலப் பண், மரண ஓலத்தில் துன்பகீதம், ஏற்றம் பிடித்தால், ஏர் உழுதால், பயிர் நட்டால், படகோட்டினால், பாரம் புரட்டினால், பாட்டு மயம்தான்! அதனால் அவன் அறிவும் திறனும் அத்துறையில் ஆழ்ந்தது. ஒளியை ஏழு நிறங்களாகப் பிரித்துக் கண்டதுபோல, ஒலியும் ஏழு சுரங்களாக, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி, தாரம் என வரையறுக்கப்பட்டது. அந்த எழிசையை இனியகுரலால் எழுப்பிக்களித்தான் தோலில்—துளையில்—நரம்பில்—கஞ்சத்தில் கருவிகளமைத்து இசையின்பங்கண்டான். ஆதியில் கொலைக் கருவியாக உருக்கொண்ட வில் உன்னத கலைக்கருவியாக வளர்ந்து பேரியாழ், செங்கோட்டியாழ், மகரயாழ்,

சகோடயாழ் என மலர்ச்சியுற்றது. ஏழிசையும் கிளைத்தெழுந்து 103 பண்களாக முழங்கின. அவர்கள் எழுப்பிய இசை அலைகளில், நம் எண்ணமும் பண்பும் இழைந்திருந்தன. இசை நயம் பேசாத இலக்கியம் இல்லை! தன்னந்தனியே இசையின் இயல்புகளை வரையறுத்துப் பேசும் இசை நுணுக்கம், வியாழமாலை. இந்திரகாளியம், குண நூல், பெருங்குருகு, பூதுநாரை முதலிய இசை இலக்கணங்களும் நிறைய உண்டு. ஆக, சமுதாய வளர்ச்சியில் மனித நாகரீகத்தின் சிகரமான இசைமரபு சங்க காலத்திலேயே நமக்கு அமைந்துவிட்டது! தமிழ்த் தென்றலில் இசையமுதம் மிதந்து கொண்டிருந்தது; தமிழர் திளைத்திருந்தனர்.

சங்க காலத்திற்குப்பின், இரண்டொரு நூற்றுண்டுகள் சமணமும் பௌத்தமும் போட்டியிட்டன, நாடெங்கும். அவற்றின் செல்வாக்கு இசையை இன்பலாகிரி என ஒதுக்கிற்று. படித்த மேதைகள் ஜீவன் முக்திக்கு அது பயன்படுவதில்லை என வாதிட்டனர். மெள்ள மெள்ள அந்த மூடுபனி பாமரரிடமும் படர்ந்துவிட்டது. அதனால் இசைக்கலை சிலகாலத்திற்குள் சலுகையிழக்க நேர்ந்தது. அதற்குப்பின், ஆறும் நூற்றுண்டிலிருந்து ஆழ்வார்களும் நாயன்மார்களும் நடமாட ஆரம்பித்தனர். அவர்கள் இசையைப் பயன்படுத்தியே மக்களை வசப்படுத்தினர். தேவார, திவ்ய பிரபந்த பக்திப்பாசுரங்கள் தித்திக்கும் தமிழில் பெருக்கெடுத்தன. அவை யனைத்தும் கற்பனையின் சுற்பனையே! அவர்கள் ஆதிக்கத்தில் இசைக்கலைக்கு தெய்வீகம் கற்பிக்கப்பட்டுவிட்டது. வாழ்க்கையை, சூழ்நிலையை, இயற்கையை எடுத்துக்காட்டும் இன்ப

அலைகளாக இசை அமைக்கப்படவில்லை, ஆண்டவனும் அதன் எல்லைகளுமே அதற்குப் பேசும் பொருள். அதனால், அந்த அருங்கலை ஆலயங்களில் முடங்க நேர்ந்தது. அங்கே, ஓதுவார், தேவாரம் இசைப்பார். வேளைதோறும், தாளமும் மேளமும் சம்பிரதாயப்படி முழங்கும். பரதமும் கீதமும் பகவத் விஷயத்தைப் பேசும்,

மற்றபடி, அந்தப்புரங்களில், அரசிளங்குமரிகளின் பொழுது போக்கிற்கும், அரசமன்றங்களில், மன்னர்களைப் போற்றிப் புகழ்வதற்கும் ஓரளவு பயன்படுத்தப்பட்டது. இந்தப்போக்குகள் இசையை மக்களின் வாழ்க்கையிலிருந்து பிரித்து விட்டன. இதனால், இசைவிளக்கங்கள் ஏடுகளில் தூங்கும் நிலைமையும், கருவிகளைக் கையாளுவார் அற்ற நிலைமையும் வளர்ந்துவிட்டது.

17 ஆம் நூற்றாண்டில், இந்தச் சூழ்நிலையே வெங்கண்ணாவின் விருப்பத்திற்குச் சாதகமாயிற்று. வேங்கடமகியைக் கொண்டு புதியதொரு இசைமுறையை வகுக்கச் செய்தான்......

தமிழிசைமரபுகள் ஆரிய உலைக்கூடத்தில் உருமாற்றப்பட்டன. வடமொழி அளவியலைக் கொண்டு, தமிழ்ச்சுரங்களை வரிசை மாற்றி புது மரபுகளைத் தோற்றுவித்தனர். தமிழ்ப் பண்முறைகளை அடிப்படையாக வைத்து, வடமொழி சம்பிரதாயங்களை அவற்றிலே கூட்டி இழைத்து, புதிய ரகங்களை எழுப்பினார். தமிழிசைக் கருவிகளின் நுட்பங்களை வடவர் கருவிகளில் வைத்துப் பொருத்தினர். இந்தக் கொலைவேலை பல நல்ல தமிழ்க் கருவிகளை அழித்தே

பல்கலைக்க
அவ்வை
நூலகம்

விட்டது! பெயரளவிலும், சித்திர உருவிலும் தெரிந்து கொள்ளவேண்டிய நிலைமைக்கு அவை வாழ்விழந்தன.

நால்வகை யாழ்களின் அளவியல்களைச் சராசரியாக்கி நாரதன் கைத் தம்பூராவில் மெட்டமைத்துப் பேச வைத்தனர். அந்தப் புதுக்கருவியே ,வீணை' என இசையுலகில் ஆட்சி பெற்றது. வீணைதான் யாழென்ற கற்பனையும் பரவிற்று. தந்திக்குத் தந்தி தனிச்சுரம் பேசிய யாழ்வேறு! மெட்டு வைக்கப்பட்ட வீணை வேறு! என்ற உண்மை இன்றுங்கூட பலருக்குப் புதிராகத்தானிருக்கிறது. அந்த அளவுக்கு வீணை ஆதிக்கம் பெற்றுவிட்டது, அந்தப் புதுக்கருவியில் இராகங்களை இசைக்கத் தலைப்பட்டனர். தமிழ்ப் பண்கள் 103ஐயும் பேச அதற்குச் சக்தியில்லை. சுரங்களை வரிசை மாற்றிப் பிறப்பித்த 72 சுரத் தொகுப்புகள்தான் அதில் இயங்கின. அவற்றையே மேளகர்த்தா ராகமென மெருகிட்டனர். இந்தப்புதுக்கணக்கிற்கு உட்படாத தமிழ்ப் பண்களெல்லாம் கைவிடப்பட்டன. கால வெள்ளத்தில் அவைகளும் கரைந்து விட்டன. ஏறத்தாழ முப்பத்தைந்து தமிழ்ப் பண்களாகஇந்தப்புதுக்கோலத்தில்,உயிர் பெற்றிருக்க முடிந்தது. அஃற்றிற்கும் வடமொழி தீட்டை!

முதுகுன்றை— விருதாச்சலமாக, மயிலாடுதுறையை—மாயூரமாக மாற்றிய 'சஞ்சகிருதம், சங்கீதத்தை மட்டும் சொந்தப் பெயரோடு வாழவிடுமா? இதோ எடுத்துக் காட்டிற்குச்சில இராகங்கள்.

செவ்வழி—யதுகுல காம்போதி, சாதாரி—காம வர்த்தினி, வியாழக்குறிச்சி—சௌராஷ்டம், மேக ராகக்குறிஞ்சி—நீலம்பாரி, புறநீர்மை—பூபாளம், பழம்பஞ்சுரம்—சங்கராபரணம், கொல்லி—பிலஹரி, குறுந்தொகை—நாதநாமக்கிரியை.

இப்படித் தமிழிசை, வடமொழித் தழுவில் திக்குத் திணறி கர்நாடக சங்கீதம் என்று புதுவேஷத்தில் வெளிப்பட்டது! இந்தப் புதிய வேஷத்திற்குத் தக்கபடி மொழியையும் மாற்றிப் பயன்படுத்தினர். அந்த சந்தர்ப்பம் தெலுங்கிற்குக் கிடைத்துவிட்டது. அதனுல் தெலுங்கக்கீர்த்தனங்கள் தென்ளுட்டில் திக் விஜயம் செய்யத் தலைப்பட்டன. செந்தமிழ், இசைக்கு ஏற்றதன்றென புறக்கணிக்கப்பட்டது புல்லர்களால்!

வேங்கிடமகி, வடமொழியில் இசைக்கு இலக்கணமும் வகுத்துக் கொடுத்து விட்டான். அதுதான் சதுர்த்தண்டியா உகாசிகா சாமவேதச் சுவக்கும் தமிழிசை ஞானமும் கூட்டிக் குழப்பப்பட்ட கலப்படம்! இந்தப் புது ஆதிபத்தியத்திற்குத் தஞ்சையில் சங்கீத மகால் கட்டப்பட்டது. வெங்கண்ணு பூரித்துப் போனுன். வேந்தன் விஜயராகவனை, சங்கீத, சாகித்ய ராயன் என்ற விருதுகளால் விலங்கிட்டனர். சதுர் தண்டுகா அரங்கேறிற்று! அன்று வீழ்ந்தது தமிழிசை! இல்லை வீழ்த்தப்பட்டது! வெங்கண்ணுவின் வடமொழிப் பாசத்தினுல்! ஆக இலக்கியத்தில் வடமொழிக்கும், இசையில் தெலுங்கிற்கும் ஆதிக்கம் தேடிக் கொடுத்துவிட்டான் வெங்கண்ணு. செந்தமிழ் எங்கெங்கோ செல்லரித்த ஏடுகளில் சரணடைய நேர்ந்தது அந்நாளில்.

பொதுவாகத் தஞ்சைத் தரணி 'தர்ப்பா சூரர்களின்' போகபுரி ஆக்கப்பட்டு வந்தது. காவிரியின் இருமருங்கும் வேதவேதியர்கள் வந்து புகுந்தனர். எல்லா கிராமங்களும் அக்ரகாரம்தான்! வாழத்தெரிந்த அவர்கள் வற்றாத நீரோட்டமும், வளமான நஞ்சையும் நிறைந்த காவேரி தீரத்தில் ஆக்ரமித்தனர். வெங்கண்ணுவின் சலுகையில். உதாரணத்திற்கு இதோ ஒன்றிரண்டு; ஒன்பத்துவேலி, பழமானேரி, வரகூர், ஈச்சங்குடி, கணபதி அக்ரஹாரம்......... அவற்றிற்குப் பக்கத்திலே அவர்கட்குக்குற்றேவல் புரிய நம்மவர்கள் குடிவைக்கப்பட்டனர். இந்தக்குப்பங்கள் 'அடுச்சேரி' என்றழைக்கப்பட்டன, அவற்றிற்கு இன்னும் அதே பெயர்தான்! எவ்வளவு அவமானம்! அதே பொழுது, வானம்பார்த்த பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டாரத்தில் தான் மூவேந்தர் பரம்பரைக்கு இடம்! எவ்வளவு ஏமாளித்தனம்! இவ்வளவும் எளிதாக நடந்துவந்தது விஜயராகவன் குடைநிழலில். வீரர்கட்கும் மேதைகட்கும் வெங்கண்ணு இடம்வைக்காதபடியால்; இருந்த ரங்கப்பன், வேங்கடாத்திரி ஆகிய இருதளபதிகளும் வெங்கண்ணு பின்னிய சிலந்திக் கூண்டில் சிக்கிவிட்ட ஈக்கள்!

ஒரு நாள் நாகைத்துறைமுகம் புகைப்படலத்தில் மறைந்தது. அங்கு பந்து பந்தாக செந்தீ பறந்தது. அனல் கொள்ளிகள் தெரித்து மரக்கலங்களைச் சுட்டெரித்தன. போர்ச்சுக்கீசியர் பண்டகசாலைகள், வர்த்தகக்கிடங்குகள் பொசுங்கிச் சாம்பலாயின. வெள்ளைப் பிணங்கள் கடலில் மிதந்தன. இந்தக் கொடிய நாசம் இயற்கையில் நிகழ்ந்ததல்ல. எதிரிகள் விளைத்ததல்ல.

தஞ்சையரசு தன்னுட்சியில் எடுத்த நடவடிக்கை! அவ்வளவு பகைமை காட்ட வேண்டிய அளவுக்கு அந்தப் பரங்கியர் படையெடுத்து வந்துவிடவில்லே. நாட்டில் பாதகமும் புரிந்து விடவில்லே. சர்க்காரின் அனுமதி பெற்ற சாதாரண வியாபாரிகளாகத்தான் தொழில் நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வாணிப உறவினுல், தஞ்சைச் சீமையிலே நெசவுத் தொழில் வளர்ந்து கொண்டிருந்தது. அய்யம்பேட்டை அம்மாப்பேட்டை, குடந்தை, தஞ்சை, கொரநாடு முதலிய இடங்களில் பட்டுச்சாலியர் கொண்டுவந்து குடியேற்றப்பட்டனர்; அந்த பரங்கியர் ஒப்பந்தம் செய்துகொண்ட அளவிற்கு உடைகளே உற்பத்தி செய்து கொடுப்பதற்காக. இந்நிலைமையில்தான் நாட்டின் நலம் பாதிக்கப்படுகிற அளவுக்கு நாகைத்துறை முகம் நாசமாக்கப்பட்டது. ஏன் தெரியுமா? விதவை வேதவல்லிக்கு வாழ்வளித்து வர்ணுஸ்ரமத்திற்கு எதிராக 'ஏசுமதத்தில்' சேர்த்துக்கொண்டனர் அந்த போர்ச்சுகீசியப் பாதிரிமார். இந்து மதத்திற்கேற்பட்ட இந்த நஷ்டத்தை எப்படி பொறுத்துக்கொள்வான் வெங்கண்ணு! வெங்கண்ணு வேந்தனிடம் வெறித்தான்—துறைமுகம் எரிந்து சாம்பலாயிற்று. பிழைத்துமிஞ்சிய போர்ச்சுகீசியர் தீவுக்கோட்டைக்கு ஓட்டம் பிடித்தனர்.

அவன் விரும்பினுல் வாழ்வு! வெறுத்தால் வீழ்ச்சி தான்! அவனுடைய அன்பு பலருக்கு அதிகாரத்தைக் கொடுத்தது, அந்தஸ்தை அளித்தது, செல்வத்தைக் கொடுத்து சீமானுக்கிற்று—ஆனுல் அந்த அன்பு—மறந்தும் பிற இனத்திற்குப் பயன்பட்டதில்லே!

அவனுடைய அருவருப்பு பலருடைய வாழ்வைக் கருக்கிற்று. ஆத்திரத்திற்கு முன்னுல் தப்பிப்பிழைத் தவர்களில்லே! இந்தப் பரிதாபம் அவன்-விருப்பத்திற்கு எதிரானவர்கட்கெல்லாம் சர்வசாதாரணமாக நேர்ந்து வந்தது. சுருக்கமாகச் சொல்வதானுல் சாணக்கியமே தஞ்சையின் ராஜீய சட்டமாயிற்று.

வேந்தன் விஜயராகவனுக்கு சில நேரங்களில் இதுகுறித்து விசாரம் தோன்றும். வெங்கண்ணு, அது வளர இடம் வைப்பதில்லே. குமாரதாத்தாச்சார்யா என்பவரைக்கொண்டு வேதாந்த விசாரணைக்கு இழுத் துச்சென்ருன். இடையிடையே அரசியல் பொறுப்பு களில் கவனம் செலுத்துவான் மன்னன். அந்த கவ னத்தைத் திருப்பி ஆஸத்தான கவிகளின் சர்ச்சையில் ஈடுபடச்செய்வான் வெங்கண்ணு.

அங்கே புலவர்களின் சொற்சித்திரங்களில் வேந் தன் சொக்கிவிடுவான். இந்த ரசிகத் தன்மையிலேயே வேந்தனே வீழ்த்திவிடத் திட்டமிட்டான் வெங் கண்ணு. விஜயராகவ சந்திரிகா! விஜயராகவகல்யா ணம்! ராஜகோபால விலாசம்! முதலிய புகழ்க்காவியங் கள் புனேயப்பட்டன வேந்தன் மீது. வெற்றி வெங் கண்ணுவுக்கு; வீழ்ச்சித் தடத்தில் வேந்தன்! வயோதி கத்தால் உடல் வளேந்த மன்னன் வர்ணுஸ்ரமத்தின் மடியில் சுருண்டுவிட்டான்.

ஆனுல் வெங்கண்ணு இந்த சூழ்நிலேயை அமைத் துக்கொண்ட பிறகும் ஆட்சியின் அழிவுக்குக் கணக்கு பார்த்தப்படிதான் தன் அரசியல் பகடையை உருட் டிக்கொண்டிருந்தான்.

# III

தஞ்ஞசயில் விஜயராகவன் தர்பார் நடந்து வந்த நாளில்......மதுரைச் சிம்மாசனம் ஒரு வாலிப வேந்தனைத் தாங்கிற்று! அந்த அடலேறும் நாயக்க மரபினன்தான். அதிலும் அவன் பிறந்த குடியே, தென்னாட்டில் தஞ்சையில்—செஞ்சியில்—மைசூரில்—அரசு நடத்திய நாயக்க மன்னர் பரம்பரைகட்கெல்லாம் மூத்தது! முன்வந்தது!

ஃ ஃ ஃ

அவ்வாறு தமிழகமெங்கும்தெலுங்கரசு மலர்ந்திருந்த காலம் அது. அன்று, தமிழர் தெலுங்கர் என்ற வேற்றுமைக்கு இடமில்லை—அதைவிட, அந்த வேற்றுமையைப் பாராட்ட நேரமில்லாதிருந்தது என்பதே சரியாகும். எந்த நேரத்திலும் தென்னாட்டையும் சேர்த்து வளைத்துக்கொள்ள, வடக்கில் வளர்ந்திருந்த இஸ்லாமிய ஏகாதிபத்தியங்கள், தங்களின் வாளின் கூர்மழுங்காமல் வைத்துக்கொண்டிருந்தன. ஆதலின், அந்தப் பொது எதிரியை முன்னிட்டுதெலிங்கானாவின் எல்லைப்புறங்களில் செந்தமிழ்த்தளபதிகளின் பாசறை தெற்குச் சீமைகளில், தெலுங்குப் பிரதானிகளுள் நிர்வாகம், என்ற ஒற்றுமை வளர்ந்திருந்தது! தென்னாட்டு அரசுகளெல்லாம் விஜயநகரத்திற்கு முதன்மை கொடுத்து வல்லரசாக வளர்த்து வைத்திருந்தன!

அந்நாளில், கி. பி. 1559ல் தஞ்சை மன்னன்—வீர சோழனால், மதுரை முற்றுகை இடப்பட்டது, பாண்டியன் சந்திரசேகரன் படுதோல்வி யடைந்தான்—அவனுக்குப்புகல் விஜயநகர்! அந்த உள்நாட்டு மோது

லேத் தீர்த்துவைக்கும் பொறுப்பும் அதே விஜயநகருக்குத் தானே! ஆதலின், வேந்தன் கிருஷ்ணதேவராயன தளபதி நாகமனை மதுரைக்கு அனுப்பிவைத்தான், மீண்டும் பாண்டியனுக்கு முடிசூட்டிவர.

நாகமன்—விஜயநகரத்தின் பிரதம தளகர்த்தன்—மகா மண்டலேசுவரன், அவனுக்கு முன் வீர சோழன் எங்கே...? நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு ஓட்டம்பிடிக்க நேர்ந்தது அவனுக்கு.

மீண்டும் சந்திரசேகரன் முடிதரித்தான். நாகமனும், ஓய்வுக்காகச் சில நாட்கள் மதுரையில் தங்கலைப் பின்......பொதிகைத் தென்றலும்—கோடைக்கானலின் குளிர்ச்சியும்—சிறு மலைப்பழத்தின் தேன் சுவையும் அவனைத் தென்பாண்டி நாட்டிலேயே நிலைத்துவிடத் தூண்டின போலும்! அந்த நைப்பாசை அவன் நெஞ்சத்தில் நெளிந்துகொண்டிருந்தது. அப்பொழுது பாண்டியன் நிர்வாகத்திலும் குழப்பம்! அந்த அரசியல் சுழலைப் பயன்படுத்திக்கொண்டான்; பாண்டியன் கைதியானன்-'பார்திபன்' என்ற அந்தஸ்தை இவன் சொந்தமாக்கிக்கொண்டான். அந்த வஞ்சகத்தைக் கண்டிக்க வாயில்லை பாமரருக்கு. மதுரைப் பூசுரரோ, வீர சோழனின் வெற்றியையும் கொண்டாடினர்—சந்திரசேகரனின் மீட்சியையும் வரவேற்றனர்—நாகமனின் புதிய தர்பாருக்கும் பூணர்கும்பம் ஏந்திவிட்டனர். வர்ழ்ந்தர்ருக்கு வால்பிடிக்கும் அவர்கட்கு, ஏற்பட்ட மாற்றங்கள் அத்தனையும் லாபமே! ஆனல், அது பாண்டிய வம்சத்திற்கே முற்றுப்புள்ளி......... அதன் கடைசி வாரிசான சுந்தர குமாரன் எப்படியோ தப்பியோடினன் விஜயநகருக்கு. அங்கே, இவ

னுடைய புகார் எவர் காதிலேயும் ஏறவில்லை. மன்னனின் பேட்டிக்காகக் காத்துக்கிடந்தான் பலநாள்...... ‘வேலியே பயிரை மேய்ந்துவிட்டது’ என்ற இவனுடைய வேதனைக்குரல் மன்னனுக்கு எட்டிற்று. அவன் மனமுடைந்தான், நாகமன். கடமையைக் கடந்து, சாம்ராஜ்யத்தின் கண்ணியத்தைக் குறைத்து விட்டதற்காகக் கவலைப்பட்டான்,

விரைந்து விஜயநகரம் திரும்ப, கட்டளை பறந்தது நாகமனுக்கு! ‘எப்படிச் சொல்வது’ என்ற திகைப்பு அவனைத் திணற வைத்தது. காலங் கடத்தினான், விஜயநகருக்கும் மதுரைக்கும் இடையில் நெடுந்தூரம் இருக்கிறது என்ற தைரியமே அவனை வாழ வைத்தது போலும். நாகமனின் காலதாமதம் வேந்தனின் கோபத்தைக் கிளறிவிட்டது. ‘விலங்கிட்டு வருக’ என வெகுண்டான் மன்னன்,

ஆணை பிறப்பித்தவன் அரசன்-அதற்கு பலியாக வேண்டியவன் ஆசான்! பற்பல களங்களிலே பாமினி சுல்தான்களை வேட்டையாடிய வேங்கையவன்! அவனை விலங்கிட்டு வரும் துணிவு எவனுக்கு ஏற்படும்...... அவையினிலே அசைவில்லை— பேச்சுமில்லை. அச்சடித்த பதுமைகளாயிருந்தனர் தளபதிகள். அது கண்டு அரசனுக்கு ஆத்திரம் மிஞ்சிற்று, அந்தச் சண்டாளன் சாம்ராஜ்யத்தின் அவமானச் சின்னம்! அவனை இன்னும் விட்டுவைத்திருப்பது வெட்கக் கேடு! தொடை நடுங்கும் கோழைகள் ஒதுங்கட்டும்! சூரர்களே! என்னைத் தொடருங்கள் எனத் தானே புறப்படத் தயாரானான்! அப்பொழுது விசுவநாதன் முன்வந்தான்— வியப்பு, வேந்தனைக் குலுக்கிற்று

வெட்கம், வீரர்களைத் தலைகுனிய வைத்தது. சதி என்ற சந்தேகமும் சிலரைச் சஞ்சலப்படுத்தியது, ஆயினும் மன்னன், அந்த வாலிப வீரனின் ஆண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்புக் கொடுத்தான். விசுவநாதனின் தலைமையில் விஜயநகரப்படை புறப்பட்டு விட்டது மதுரையை நோக்கி.

'மகன் தான் வருகிருன், அவன் மனதை மாற்றி விடலாம்' என்ற மனக்களிப்பு நாகமனுக்கு! எதிர் கொண்டு அழைக்க வேதியர்கள் வந்தனர்; அவர்கள் விலங்கிடப் பட்டனர்.

அதன்பிறகு, அவன் அன்னையே தூதாகவந்தாள். அவளுடைய ரத்தபாசம் தோற்று விட்டது. நாகமன் மகனைத் தனியே சந்திக்க முயற்சித்தான். அதற்கு ஒப்பவில்லை இளவீரன். காலமும் களமும் குறித்து விட்டான் சந்திக்க.

அந்தக் கலத்தில் வாஞ்சை, வாள்வீச்சின் வேகத்தை தணிக்கவில்லை - போர்முனைப்பில் வீரம் வெறி கொண்டது;போர்க்கலையை உறையிட்டுப்பார்த்தனர். ரத்தச்சேருயிற்று. வெற்றி விசுவநாதன் பக்கத்தில் தான்......!

பெற்ற தந்தை பிடிபட்டான் மைந்தனிடம். அவனை வாரியெடுத்து, அள்ளியணைத்த கரங்களில் விலங்கிட்டுக் கொண்டு நிறுத்திஞன் வேந்தனுக்கு முன்,

மன்னனுடைய மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அந்த மாவீரன் விசுவாசத்தை மெச்சினன். ஆற்றலை மதித்து மகாதண்டநாயகன் என்ற அந்தஸ்தையும் வழங்கினன்...... மற்றும், அந்த சாம்ராஜ்யத்திலுள்ள

அரும்பொருள் எதுவாயினும் கேட்டுப் பெற்றுக் கொள் என அவன் விருப்பத்திற்கு அனுமதித்து விட்டான்.

அப்பொழுது, குற்றக் கூண்டில் நின்ற நாகமன், குரோதப் படமெடுத்த நாகமாகத்தானிருந்தான்... தன்சதை... தன்ரத்தம்... தன்னைக் காட்டிக் கொடுத்து விட்ட்தென்ற வேதனை! பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்தது அவனிடம்.

ஆனல் மன்னன் வழங்கிய புதுவாழ்வில் விசுவநாதன் பூரித்துவிடவில்லை; நெஞ்சத்தின் குறு குறுப்பு அவன் நெற்றியில் சுருக்கமாகத்தானிருந்தது! தழு தழுத்த குரலில் தர்பாரை நோக்கி, தனக்குத் தந்தை தான் வேண்டு மென்று கேட்டுவிட்டான். அவனை, விலங்கவிழ்த்துவிடும் ஆபத்தான நிலைமையை யாரும் விரும்பவில்லை, ஆனல் வேந்தன் அவ்வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தான்,

நாகமன், இந்த நிலைமை எதிர்பார்க்கவில்லை. குமுறிக்கொண்டிருந்த அவனிதயம் குளிர்ந்து பனிக் கட்டியாய் உறைந்து விட்டது. கலத்திலே உடல் வலிமை தோற்றது! படை வலிமை தோற்றது! இப்பொழுது உறுதிபடைத்த உள்ளமும் தோற்று விட்டது, அந்த வீர மைந்தனின் பேரன்பிற்குமுன்.

ஆனல்... யாருக்காக இவ்வளவு ஆர்ப்பாட்டமும் நடந்து வந்ததோ, அந்த சுந்தரகுமாரன், பாண்டியர் வரலாற்றின் கடைசி ஏட்டை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு மாண்டுவிட்டான், இதற்கிடையில் சிறை வைக்கப்பட்டிருந்த சந்திரசேகரனும் இவ்வுலகத்திலிருந்தே விடுதலை பெற்றுக் கொண்டிருந்தான்.

அதனால், மதுரைக்கு ஒரு மன்னன் தேவைப் பட்டான். தென்னாட்டுப் பாளையக்காரர்கள் போட்டி யிட்டனர் அந்தத் தலைமைக்கு. அவர்களுடைய அரசி யலில் மக்களுக்கு நம்பிக்கையில்லை. விஜயநகரத்துக் குத் தூது நடந்தனர்... அதன் விளைவு?

விசுவநாதன், முதல் ராஜப்பிரதிநிதியாக மதுரை க்கு வந்தான். அந்தப்புலியின் பரம்பரையோமதுரைச் சிம்மாசனத்தை அலங்கரித்தது; நம் கதை நிகழ்ந்த காலத்திலும் அதற்குப் பின்னும் கூட,

அவர்களில், ஏமாற்றமும் தோற்றமும் மிக்க இளஞ்சிங்கமே அந்த வாலிப வேந்தன் சொக்கநாதன். அந்த அரசிளங் குமரனின் அந்தப்புரத்தை அலங்கரி க்க அழகுராணி ஒருத்தி தேவைப்பட்டாள்.

அப்பொழுது தஞ்சை அரண்மனையில் தளர்நடை யிட்டு வளர்ந்திருந்தாள், மன்னரூ பெற்றெடுத்த அச் சுதரங்கம்மாள்! அவள், புனையாத ஓவியம்- கலையாத வானவில்—தங்கம் உருக்கி தளிருடலாய் சமைத்த உயிர்ப் பதுமை! அந்தக் குளிர் நிலவின் புகழொளி நம் சொக்கநாதனுக்கு எட்டியது. பொன்னாய்ப் பூவாய் அவனிதயத்தில் மின்னி விட்டாள் அவள். மதுரைச் சிம்மாசனம் அந்த மங்கையைத் தாங்க ஏங்கிற்று. மங்கல வரிசைகள் தஞ்சைக்கு வந்தன 'பெண்' பேசுவதற்காக.

வெங்கண்ணாவின் சிந்தனை சுழன்றது .. மதுரை யும் தஞ்சையும், மண உறவு கொள்வதை அவன் விரும்பவில்லை. அதற்கு ஏற்ப அவனுடைய அரசியல் சதுரங்கத்தில் சொக்கட்டானாக நகர்ந்துகொண்டிருந்த தளபதி ரங்கப்பனின் சபலம் வேறு குறுக்கிட்டது.

அதற்குள் வேந்தன், வெங்கண்ணுவைக் கலந்தாலோசித்தான். 'சொக்கநாதனுக்கு எவ்வித ஒச்சமில்லை. நம்சுடர்க்கொடிக்கு தோதானவன்தான்' என சொல்லிவிட்டு 'ஆனுல்' என்ற ஆபத்தான பதத்தையும் தூவினுன்...

மன்னன் விவரங் கேட்டான். வெங்கண்ணு—விஜயராகவன் மரபு, மன்னர் மன்னன் 'அச்சுதராயனின் ரத்தக்கலப்பு' என்பதைக் கவனப்படுத்தினுன். அந்தக் குலப் பெருமையில் கிழவேந்தனுக்கு உச்சி குளிர்ந்தது.

அதோடு சோக்கநாதனின் முன்னேர்களை நினைவுக்குக் கொண்டுவந்து, அந்த சாதாரண தளபதி- நாகமன் பரம்பரை எப்படி நமக்குச் சமமாகும் என்ற விஷங்கலந்த கேள்வியை எழுப்பினுன்...... விஜயராகவன் கண்கட்கு சொக்கநாதனின் அந்தஸ்த்து, குறைவாகத் தெரிந்தது, இந்தச்சமயம் பார்த்து, 'கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு' என்ற வர்ணுஸ்ரம தர்மத்தை வற்புறுத்தி விட்டான்...

அடுத்தநாள் தர்பாரில், மதுரைத் தூதுவர் மன்னனின் நல்ல செய்தியை எதிர்பார்த்திருந்தனர். ஆனுல், விஜயராகவன் பேசவில்லை, வெங்கண்ணு மறுதளிப்பை வெளியிட்டான்... வந்தவர்கள், இரண்டு அரசும் உறவு கொண்டால் ஏற்படும் வலிவை எடுத்துக் காட்டினர்— 'தங்கள் இளவரசனின் வாழ்வும் வருங்காலமும் தஞ்சை அரசகுமாரியின் அன்பில் அமைய வேண்டியிருக்கிறது' என்ற நிலைமைகளை எடுத்து விளக்கினர் எதுவும் ஏற்கப்படவில்லை...... நிபந்தனை எதுவானுலும் ஏற்பதாக மன்

ருடினர்! வெங்கண்ணு, "எங்கள் சுந்தரி விஜயநகர ரராஜபரம்பரை— உங்கள் பிள்ளை அந்த தர்பாரின் சேவகமரபு... அதனுல் குலப்பொருத்தமில்லை' என்று குறுநகை புரிந்தான். அந்தச் சிரிப்பு சித்ரவதை செய்துவிட்டது வந்திருந்த தூதுவர்களை— அவன் சொறகள் சுடு சரமாகத் தைத்துவிட்டன..... வேல்பாய்ந்த வேங்கையானுர்கள், அதைக்கண்டு, வெங்கண்ணுவின் முகத்தில் வெற்றி ரேகைகள் படர்ந்தன...

## IV

கொதித்த ரத்தம்! குமுறும் இருதயம்! நெரித்த புருவம்! நெருப்புப் பொறி பறக்கும் கண்கள்! புடைத்த நரம்புகள்! பொறுமும் தோள்கள்! ஆக வெறிகொண்டு விட்டான் சொக்கநாதன்.

விஜயராகவன் பெண் கொடுக்க மறுத்ததை. அவன் பொருட்படுத்தவில்லை; அவன் பிரேமைக்கு விருந்தாக, மற்றும் பல இளவரசிகள் எதிர்பார்த் திருந்தபடியால். ஆனுல் அவனது பரம்பரை பழிக்கப் பட்டது என்ற மான உணர்ச்சியே மாச்சரிய மூட்டி யது. பழிவாங்கத் துடித்தான். குலப்பெருமையைப் பேசிய கிழ வேந்தனின் பேர்த்தி—அந்த அச்சுதரங்கம் மாள், தன் பணிப் பெண்ணுக்குப் பணிப் பெண்ணுக வேண்டுமென ஆத்திரப்பட்டான்.

மகர தோரணம்—மங்கலகீதம்—விருந்து—விழா ஆகியவற்றை எதிர்பார்த்திருந்த மதுரை அதிர்ந்தது! மின்னும் வாள்களும். பளபளக்கும் கட்கங்களும் பாண்டிய மறவர் கரங்களை அலங்கரித்தன, மதுரை போர்க்கோலம் பூண்டுவிட்டது.

ஆயினும், மதிமிக்க அமைச்சர்கள் வீம்புக்காக ரத்தம் சிந்துவதை எப்படியேனும் தடுக்கவிரும்பினர். அதனால், வேந்தன் விஜயராகவனுக்குச் சிந்திக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அரச பரம்பரைகள் அனைத்திற்கும் மூலம், ஆற்றலும் வீரமுமே அல்லாது குலப்பிறப்பல்ல என்ற உண்மை அவனுக்கு எடுத்துக் காட்டப்பட்டது. மண உறவினால் மதுரையும் தஞ்சையும் மோதிக்கொள்வதைத் தடுக்கலாமென வழி கூறினர்.

விஜயராகவன் முதலில் இந்தச் சிக்கல் இவ்வளவு வளரும் என எதிர்பார்த்தவனல்ல. 'பெண் அல்லது போர்'—என்ற நிபந்தனை அவனைத்திகைக்கவைத்தது. சொக்கநாதனின் மணப்பந்தலுக்கு அச்சுதரங்கம்மாள் செல்லவேண்டும், அல்லது தள்ளாத பருவத்தில், தான் சமர்களத்தில் குதிக்கவேண்டும், என்ற நிலைமை தவிர்க்க முடியாததென்பதும் புரிந்துவிட்டது. சிந்தித்தான்...! சிலநாட்களில் முடிவு சொல்வதாக மதுரைத் தூதுவர்களையும் தாமதிக்க வைத்தான்.

ஆனால், வெங்கண்ணா குறுக்கிட்டு, 'முதலில் பேசிய வீம்பினை விட்டுக்கொடுப்பது வீரத்திற்குப் பழுது. போருக்கஞ்சி மன்னருவின் மகளை கொடுப்பதா? அதைவிட உயிரை இழப்பதே மானம்!' எனத் தூபமிட்டான். அத்துடன் சோதிடத்தைத் துணைக்கழைத்து சொக்கநாதனுக்கு அழிவுக்காலம் கிட்டிவிட்டது; வெற்றி மங்கை விஜயராகவனைத் தேடி வருகிறாள், என்பதையும் வற்புறுத்தினான். 'சொக்கநாதன் படை பலத்தை நம்பி வருகிறான்—நமக்குள்ள தெய்வ பலம் அவனுக்குத் தெரியாது; அவன் அறியாத பாலகன்! தாங்கள் எழுப்பிய ஆலயங்கள்—வெட்டிய திருக்

குளங்கள் — நடத்திய தேர் திருவிழாக்கள் — செய்த தான தருமங்கள் எவ்வளவு? அத்தனைக்குமுரிய பூஜா பலன் எங்கே போய்விடும்? வறண்டவைகைக்கு வற்ருத காவேரிஅடிமையாவதா?' எனரோஷமூட்டினன். அதனல் விஜயராகவனின் வளைந்தகூனும் கொஞ்சம் நிமிர்ந்தது. வற்றியுலர்ந்த கரங்கள் வாளைப்பற்றின! வெங்கண்ணு, தன் சூது பலிக்கக்கண்டு நெஞ்சம் பூரித்தான். மதுரைத்தூது முறிந்தது! சோழ நாட்டு உலைக்களங்களில் வாளும் வேலும் வடித்துக் குவிக்கப்பட்டன......

இரண்டு அரசுகளும் எல்லைக்காவலை உடனடியாகப் பலப்படுத்தின. இரண்டிற்கும் இடையே நடந்து வந்த வியாபாரம், போக்குவரத்து முதலியனவும் தடைப்பட்டன. இரு தரப்பிலும் போர் முயற்சி பலமாக நடந்தது. இந்தப் பகைமை, முதலில் விஜயராகவனின் பக்தியையே பாதித்தது. அவனது திருவரங்க தரிசனத்திற்கு வழியில்லையாயிற்று. சனிக்கிழமை தோறும் அரங்கநாதனைச் சேவிப்பது என்ற அவனது வைராக்கியம் தோற்றது. என் செய்வான் வேந்தன்! இவ்வுலக வாழ்க்கையே பயனற்றுவிட்டதாகப்பரிதவித்தான்! அரங்கநாதர் கிடைப்பதானல் அச்சுதரங்கம்மாளைத் தியாகம் செய்யத் தயாராகிவிட்டான் மன்னன். (இந்த அந்தரங்கம் மதுரைக்கு எட்டியிருந்தால் தென்னாட்டின் பிற்கால சரித்திரம் வேறு விதமாக அமைந்திருக்கும்) அதுகண்ட வெங்கண்ணுவின் மூளை சுறு சுறுப்பாக வேலைசெய்தது;வேந்தனின் சபலத்தை மாற்ற. அதன் விளைவுதான்; தஞ்சைக் கோட்டையிலிருந்தபடியே திருவரங்க சேவைக்கு வழி! இன்றும் ஸ்டோர் கோபுரம் என்று வழங்கும் வானளாவிய கோபு

ரம் பதினுன்கு தளத்துடன், தளந்தோறும் நான்கு வாயில்களமைத்து எழுப்பப்பட்டுவிட்டது ஒரே மாதத்தில். அதன் உச்சிக்குச் சென்றுவிட்டால் அடிவானம் நிலந்தழுவும் தொலைதூரம் வரை தெளிவாகத் தென்படும்! வேந்தனின் அரங்கநாத சேவை இதனுல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. முன்னுல் வாரந் தோறும் திருவரங்க தரிசனம்செய்தவன், இப்பொழுது நாள்தோறும் சேவிக்கும் வாய்ப்புப் பெற்ருன் இக் கோபுரத்தின் உதவியால்......

அந்த ஆண்டு மாரிக்காலத்திற்குப் பின் மதுரைப் படை தஞ்சை நோக்கி வந்தது. வழியிலிருந்த வல்லம் கோட்டை மதுரைப்படையை வழிமறித்து நிறுத்தியது. அந்தக் கோட்டையின் கொத்தளங்களில் ஏற்றப்பட்டிருந்த பீரங்கிகளின் முழக்கமும், படைத் தளங்களிலிருந்து தஞ்சை வீரர்கள் வீசிய எரி ஈட்டிகளின் கூர்மையும் வல்லங்கோட்டையைக் காத்தன. ஆனுலும், மதுரைப்படையின் முற்றுகை தளரவில்லை ...இப்படியாக நாட்கள்...வாரங்கள்...நகர்ந்துகொண்டிருந்தன.

தஞ்சை மறவர்களின் வீர உணர்ச்சியும் போர்த் திறனும் பாண்டி நாட்டாருக்குக் குறைந்திருக்கவில்லை. அதனுல் வெங்கண்ணுவின் அழிவுத்திட்டம் எளிதில் கைகூடாதெனத் தோன்றியது போலும்! அவன் விரும்பிய மதுரையும் தஞ்சையும் மோதிக்கொண்டன; ஆனுல், அவன் எதிர்பார்த்த தஞ்சையின் வீழ்ச்சி?... ...அந்நியப் படை எடுப்பு ஒன்றுமட்டும் அதற்குப் போதியதாக இல்லை! உட்பகையும் வேண்டியிருந்தது ..........

தஞ்சைத் தளபதி ரங்கப்பனுக்கு ஒரு காலத்தில், தஞ்சைச் சிம்மாசனத்தில் கண்ணிருந்தது. தஞ்சை இளவரசி அச்சுதரங்கம்மாளைத் தன் மகனுக்கு மண முடித்துக்கொள்வது அதற்குச் சுலபமான மார்க்கமாகத் தெரிந்தது. அதைச் சாதித்துக் கொள்ளச் சரியான துணை வெங்கண்ணு என்றும் கருதியிருந்தான். ஆனால் மதுரைக்கே பெண் மறுக்கப்பட்டதும், தான் அந்த ஆசையைக் கைவிட்டிருந்தான். இந்தப் போராட்டத்தில், கடமையுணர்ச்சியுடனேயே மதுரைப் படையை எல்லைப்புறத்தில் தடுத்து நிறுத்தப் பேராற்றலும் காட்டி வந்தான்.

வெங்கண்ணு, அவனுக்குக் கண்ணிவைத்து "விஜயராகவன் இன்னமும் வேந்தனெனக் கொலுவிருப்பது ரங்கப்பனின் வீரத்தினாலதான்" என வியந்தான். அந்தப் புகழ்மொழி அவனைச் சொக்கவைத்தது. "போர்த்தலைவன் ரங்கப்பன்—அந்தப் புகழுக் குரியோன் விஜயராகவன்" என்றிருக்கும் அரசியல் நீதி, முறையற்றதென வாதிட்டான் சாகசமாக. அத்துடன் தளபதியின் அரிய திறமைக்கும் பெரியதகுதிக்கும் வேந்தன் கடமைப்பட்டவன் என்ற ஆசையையும் கிளறிவிட்டு அவனுடைய பழைய சபலத்தைக் கவனப்படுத்தினான். அது பலிக்காத ஒன்றென, பெருமூச்செறிந்தான் ரங்கப்பன். வெங்கண்ணுவிற்குப் பிடி கிடைத்து விட்டது. "இந்த நெருக்கடியான நேரத்தில், வேந்தன் உன்னைப் பகைத்துக் கொள்ளமாட்டான். உன் ஆசை நிறைவேற ஆவன செய்து கொடுக்க நானிருக்கிறேன். இந்த நல்ல சந்தர்பத்தை நழுவவிடாதே" எனத் தூண்டிவிட்டான்; அரசன் மறுத்துவிடுவான் என்ற அந்தரங்கம் தெரிந்திருந்தும்.

வெங்கண்ணு ஏற்றிய போதையில், வேந்தனை அணுகினன் ரங்கப்பன். களத்திலே நிகழ்த்திய வீரச்செயல்களைக் கதைகதையாகக் கூறினன். மன்னனும் மகிழ்ந்து மாவீரனெனப் புகழ்ந்தான். அதற்குப் பரிசாக இளவரசியைத் தன் மகனுக்கு மணமுடிக்க வேண்டுமெனக் கேட்டு விட்டான் ரங்கப்பன். விஜயராகவனின் ஆத்திரம் அணைகடந்துவிட்டது.

“பல தலைமுறையாகப் பட்டந்தரித்த பரம்பரையையே நிராகரித்துவிட்டான்! பகைத்துப் படையோடு வந்து முரசுகொட்டுகின்றனர்; ‘பந்தா’வை விட்டுக் கொடுக்கவில்லை! இன்னமும் எனது உப்புக்காக ஊழியம் புரியும் உனக்கு இவ்வளவு உன்மத்தமா? களத்தில் நீ காட்டும் வீரமெல்லாம் என் குலக்கொழுந்தை விலை கேட்கவா? என வெகுண்டு சீறினன்......

ரங்கப்பனுக்கு வெட்கித் திரும்புவது தவிரவேறு வழியேது. வெங்கண்ணு அவனைத் தேற்றினன். “நெருக்கடி வளர்ந்தால் நிச்சயம் வேந்தன் வழிக்கு வருவான்” என்ற உறுதியளித்தான்.

“நன்றி காட்டாத மன்னனுக்கு நாம் ஏன் நல்லெண்ணத்தோடு போராடவேண்டும். சந்தர்ப்பத்தை நமக்குச் சாதகமாக்கிக்கொள்வது அரசியல் நீதிக்கு அப்பாற்பட்டதல்ல.....” என விஷ உணர்ச்சியையும் கிளறிவிட்டான் வெங்கண்ணு......!

ஆனாலும், அவமானத்தால் முகம் வெளுத்து, ஆத்திரத்தால் படபடத்து, ஏமாற்றத்தால் இதயம் புழுங்கிக்கொண்டிருந்தான் ரங்கப்பன்! வெங்கண்ணு எழுப்பிவிட்ட பொருமைப் புகைச்சல் வேறு கரித்துக் கண்களை உறுத்தியது! “மதுரைப் படை மலைத்துப் பின்

வாங்கி நிற்பது தன் மாவீரத்தால், தஞ்சையரசு தவிடு பொடியாகாமல் தலைநிமிர்ந்து நிற்பது தன் பலத்தில் தான்'' என்ற தறுக்குணர்ச்சி பழிவாங்கத்தூண்டிற்று!

இதற்குப் பின் எதிரியை முறியடிப்பதற்கான போர்த் திட்டங்கள் அவன் எண்ணத்தில் உருவாக வில்லை. பார்த்திபனைப் பழி தீர்ப்பது-பகைவனை உற வாக்கிக்கொள்வது-மகுடம் தரிப்பது மன்னர் குலச் செல்வியை மணமுடிப்பது—ஆகியவற்றிற்கான வஞ் சனையே வளர்ந்தது. இரண்டொரு நாட்களில் வல் லம் கோட்டைத் தலைவன் வேங்கடாத்திரியும் தளபதி ரங்கப்பனும் தனிமையில் சந்தித்தனர்...தளபதியின் ஆசைக் கயிற்றில் ஆடும்பம்பரமானான் வேங்கடாத் திரி! கொத்தளங்களிலேற்றப்பட்டிருந்த பீரங்கிகள் இறக்கப்பட்டுவிட்டன—முற்றுகை தளர்ந்துவிட்ட தென்ற காரணத்தைக்கற்பித்துக்கொண்டு. வல்லங் கோட்டையைக் காத்து நின்ற முன்னணிப் படை அறந்தாங்கிக்கு அனுப்பப்பட்டது. கிழவன் சேதுபதி (ராமனாதபுரம்)யின் படை கிளம்பிக்கொண்டிருக் கிறது இரண்டாவது போர் முனையை ஏற்படுத்த— அதற்கு எச்சரிக்கையான முன்னேற்பாடு என்ற சாக் கில். வல்லங்கோட்டையின் மேல் அலங்கம் திடீ ரென இடிந்து தகர்ந்து சரிந்தது-வெடி மருந்து கிடங்கு தீப்பிடித்துக் கொண்டதால் ஏற்பட்ட எதிர்பாராத விபத்து என்ற விளக்கத்துடன். இவ்வளவையும் நம்புவது தவிர வேறு வழியில்லை, வேந்தன் விஜயராக வனுக்கு. தளபதி ரங்கப்பனின் பூரிப்புக்கோ எல்லை யில்லை தன் திட்டம் வெற்றியாவது கண்டு.

மதுரைத் தளபதி இங்கிலைமைகளைக் கண்டு திகைப்பும் வியப்புமடைந்தான். குத்து வெட்டு

குண்டு வீச்சு, ரத்தச்சேறு, பிணவாடை, ஏதுமில்லாமல் கோட்டை வசமாகுமென அவன் எதிர்பார்த்தவனல்ல. ஆதலின், இதில் ஏதோ மர்மம் இருப்பதாகத் தோன்றிற்று. தாக்குதலின்றியே சரணடையக் காத்திருந்த கோட்டையை உடனே ஆக்ரமிக்கவில்லை. ஒருவேளை எதிரிப் படையை உள்ளிழுத்துப் படுகொலை புரிவதற்கான ஏற்பாடோ! அல்லால் வெடிமருந்து கிடங்குகட்குத் தீ வைத்து அத்தனைபேரையும் ஒருசேர எரித்துச் சாம்பலாக்கி விடுவதற்கான சதித்திட்டமோ! என சந்தேகித்தான். அப்போழுது ஒற்றர்கள் செய்தி கொண்டுவந்தனர். "உள்ளே துரோகம் உருவாகிவிட்டது. இனி நாம் ஆயுதம் எடுக்காமல்—ஆள்சேதமில்லாமல்—தஞ்சைத் தரணியை வளைத்து விடலாம்." அதற்கு முதல் காவு இதோ வல்லம்! எனவும் தெளிவுபடுத்தினர்.

மானத்திலும், வீரத்திலும் நம்பிக்கையுடைய மாவீரனுக்கு இது மகிழ்ச்சிதரவில்லை. கிழவேந்தனின் இந்தப் பரிதாப நிலைமைக்காக இரக்கப்பட்டான். தஞ்சையில் வளர்ந்துள்ள உட்பகையை அவன் பயன்படுத்திக்கொள்ள ஆசைப்படவில்லை. ஆயினும் அவனுடைய கடமை! படையை மேல் நடத்தவைத்தது—எதிர்த்தாக்குதல் ஏதுமின்றியே வல்லங்கோட்டை மதுரைக் கொடி நிழலில் இடம் பெற்றுவிட்டது! அங்கே பயந்து கலவரப்பட்டுக் கொண்டிருந்த பாமரர்கட்கு பாதுகாப்பளிக்கப்பட்டது—பழுதடைந்தபகுதிகள் புதுப்பிக்கப்பட்டன. அதுவேமதுரையின்போர்த்தளமாகவும் அமைந்துவிட்டது. இந்தப் போராட்டத்தில் அடுத்த இலக்கு தஞ்சைதான்! அதற்கான முயற்சிகள் துரிதமாக நடந்து வந்தன.

இந்நெருக்கடி வளர வளர வேந்தன் விஜயராகவனுக்கு நிலைகொள்ளவில்லை. ஆலயம் தோறும் அஷ்டோத்திர சகஸ்ரநாம ஆர்ப்பரிப்பு. நவக்கிரக ஆராதனை—ரணபத்திரகாளி பூஜை—லட்ச தீபாலங்காரம்—ராமநாம—ஜபம்—அனுமத் உபவாசம் என்றபரபரப்பிலே பதறிக் கொண்டிருந்தான். வேத வேதியர் ஒருபுறம் வெற்றியக்கியம் வளர்த்துக்கொண்டிருந்தனர். வெங்கண்ணு வேந்தனின் சார்பில் தரும கைங்கரியங்களை மிகவும் தாரளமாகவே பூதேவாளுக்கு வாரிவிட்டுக் கொண்டிருந்தான்.

இந்நிலையில் ஒரு நாள் தளபதி ரங்கப்பன் மாறு வேடத்தில் வல்லத்தை நோக்கிப்புறப்பட்டான். அவன் கோட்டை வாயிலையடையுமுன் கதவுகளடைக்கப்பட்டு அகழிப் பாலங்களகற்றப்பட்டிருந்தது. அப்பொழுது அந்திமங்கும்வேளை-கோட்டைக்கு வெளியே கூப்பிடும் தூரத்தில் ஓர் வற்ருத சுனையுண்டு வஜ்ரதீர்த்தம் என்ற பெயரில் இன்றும்கூட, அந்த நெடுங் கிணற்ருரம் ஒரு பழங்கோயில். அதுவும் போர்க்கால பயங்கரத்தால் பூசனையின்றிக் கிடந்தது. அங்கே திரும்பினுன் ரங்கப்பன். ஒரு பக்தனைப்போலத் தான் பரவசத்துடன் அந்தக் கோயிலுக்குள் நுழைந்தான்—கதவையும் உட்புறம் தாழிட்டுக் கொண்டான்.

கோட்டைக்குள் அரசாங்க மாளிகையில் அமைதி குடிகொண்டிருந்தது. மதுரைத் தளபதி ஒருவனைத் தவிர வேறு ஆளரவமில்லை, மங்கிய நிலவின் ஒத்திகையாக குளோப்பர்கள் எரிந்து கொண்டிருந்தன. அப்பொழுது, தஞ்சைக் கோட்டையை எப்படித்தாக்குவது? எந்த பக்கத்தில் தகர்ப்பது? அதற்கு எத்தனை வண்டி கந்தகம் தேவை? எத்தனை ஆயிரம் வீரர்களை

பயணம் வைக்க நேரிடும்? என்ற சிந்தனையோட்டத்துடன் குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனெதிர்பாராத நிலையில் வேற்றுள் அந்தக் கூடாரத்தில் தோன்றிவிட்டான். மதுரைத் தளபதிக்கு தூக்கிவாரிப்போட்டது! தன் அந்தரங்க அலுவற் கூடத்தில் அனுமதியின்றி வந்திருப்பவன் யாராக இருக்கும்? எப்படி உள்ளே நுழைந்திருப்பான்? என்ற கேள்விகள் அவன் புருவத்தின் நெரிசலாக நெளிந்தன! அலட்சியமாக அவனை ஏற இறங்க பார்த்தபடியே மேலும் உலாவிக்கொண்டிருந்தான்.

அந்தப் பெருமிதத்திற்கு முன் ரங்கப்பன் சலனமற்று நின்றுவிட்டான் சிறிது நேரம். அவனது நெஞ்சம் குறு குறுத்தது. அங்கே நிலவிய அமைதி! அவன் மேல செலுத்தப்பட்ட அலட்சியப் பார்வை! ரங்கப்பனைத் திகைக்க வைத்தன. நேரம் ஆக ஆக அவன் நினைவு அலைகள் சுருண்டு சுழன்று பொங்கின: வியர்வை சலசலத்து அவனை நனைத்துக் கொண்டிருந்தது. அப்படியே பொறிவாய்ப்பட்ட எலியின் துடிப்போடு எவ்வளவுநேரம் நிற்கமுடியும்? முகங்கொடுத்து ஒரு வார்த்தை கூட வழங்கப்படாத இடத்தில், மெள்ள வந்த வழியே நழுவிவிடத் துடித்தான். அவனது கால்கள் தளர்ந்து பின்னின. அவனது எண்ணத்தின் கள்ளம் கண்களில் மின்னிற்று. மதுரைத் தளபதியோ வேறுபக்கம் செலுத்தும் பாவனையில்நடந்து கொண்டான் இரண்டொரு விநாடி! அந்தச் சந்தர்ப்பத்தில் ரங்கப்பன் சுரங்கவழியிலிறங்க முனைந்தான்—ஆனால் 'நில்' என்ற அதட்டல் ரங்கப்பனின் நரம்புகளை இழுத்துப்பிடித்து நிறுத்தும்காந்தக் கல்லாயிற்று

நான்...நான்...என அவன் நா குழறிற்று. 'தெரியும் தேர்ச்சிமிக்க ஒற்றன்' என்ற கம்பீரமான குரல் அந்த மாளிகையின் அமைதியைக் கலைத்து விரட்டியது. 'இல்லை' என்று கரகரத்தது ரங்கப்பனின் கெஞ்சும் குரல்.

"இடியென நகைத்து, ரங்கப்பனின் பிடரியில் விளையாடின தளபதியின் இரும்புக் கரங்கள். உண்மையைக் கண்டுபிடிக்க இதயத்தின் அடிவாரம் வரை ஊடுருவிப் பார்த்த அந்தப் பார்வையே பாதிகொன்று விட்டது ரங்கப்பனை, ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு, தான் தஞ்சைத் தளபதி ரங்கப்பனின் அந்தரங்கத் தூதுவன் என்ற நடிப்புடன், "தங்களைத் தனிமையில் சந்தித்துத் தங்கள் தயவைத்தேட வந்தவன். வல்லங்கோட்டை உங்கள் வசமாகவழிசெய்து கொடுத்ததுபோல் தஞ்சைத் தரணியைத் தங்களுக்குக் காணிக்கையாக்கக் காத்திருக்கிறேம். தங்களை அவமதித்த கிழவேந்தனின் வீழ்ச்சிக்குப் பின் தஞ்சையின் பிரதிநிதியாக...' எனப் பல்லெல்லாம் வெளித்தெரிய பரக்க விழித்தான். வரும்போது மனதில் பேசிப் பேசித் திட்டமிட்டுக்கொண்டு வந்த செய்திகளை மென்றும் விழுங்கியும் உமிழ்ந்தான்.

அந்த உளரல் தளபதியின் கண்களைத் தணலாக மின்ன வைத்தது. 'கள்ளத்தனம், நயவஞ்சகம், சூது, சூழ்ச்சி ஆகியவற்றிற்குத் தஞ்சைத் தளபதியார் அகராதியில் தூது என்று பெயர் போலும்" என எள்ளி நகைத்து, "எங்கள் வாளிலும் தோளிலும் நம்பிக்கை கொண்டுதான் களம் காண வந்தோம். அல்லாமல் துரோகக் கும்பலின் துணை கிடைக்குமென எதிர் பார்த்து வரவில்லை. இன்று சொந்த அரசைக்கவிழ்த்து

எங்களை வரவேற்கும் எத்தர்கட்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் நாளை எங்களை மற்றொருருத்தனுக்குக் காட்டிக் கொடுக்க? மானுபிமானமற்ற அந்த மாமிச மலைகள் இந்த மண்ணிலேயே வாழத்தகுதியற்றவர்கள்... அந்தத் துரோகிகளின் பட்டியலைச் சொல். நீ சூதாக வந்த சுரங்க வழியைக் காட்டு'' என உறுமினான். அதற்குள் பாண்டி மறவர்கள் வந்துவிட்டனர், தளபதியின் கட்டளையை எதிர்பார்த்து.

"இந்தக் கொடியவனை விலங்கிட்டுகொண்டு நிறுத்துங்கள், குலப்பெருமைப் பேசிய அந்தக் கூன் கிழவன் முன்னால்'' என வெகுண்டுரைத்தான்.

அதன்படியே இருப்பாரம் ரங்கப்பனின் கரங்களையும் கால்களையும் சேர்த்து இணைத்து அலங்கரித்தது. இழுத்துச்சென்றனர் தஞ்சைக்கு. தஞ்சைக்கோட்டை யடைக்கப்பட்டு பல நாட்களாயிருந்தது. முதலில் எப்படி உள்ளே செல்வதெனத் திகைத்தனர், பின்னர் ரங்கப்பனை மிரட்டியே சுரங்க வழிகாட்டச் செய்து விட்டனர்.

அந்நேரத்தில் அரசனும் வெங்கண்ணாவும் அரண்மனையில் ஒருசேர இருந்தனர். ரங்கப்பன் இந்தக் கோலத்தில் கொண்டு நிறுத்தப்பட்டான். இந்தக் காட்சி வேந்தனைத் திடுக்கிடவைத்தது தூதுவர்கள் நிலைமையை விளக்கினர். வேந்தன் சீறினான்—சித்திர வதை செய்யத் துடித்தான்...ஒரு தரணியின் தளபதி சதிகாரனாக நிற்கக்கண்டு ஊர் சிரித்தது உலகம் காரி உமிழ்ந்தது. அத்தனையையும் பொறுத்துக்கொண்டு ஊமையாகி நின்ற உன்மத்தன், அப்பொழுது அங்கிருந்து மெள்ள நழுவிக் கொண்டிருந்த வெங்கண்ணா

ளைப்பார்த்து, "வேதியரே! இத்தனையிலும் உமக்குப் பங்குண்டல்லவா?" என சிரித்துவிட்டான்.

அந்த கேலிச் சிரிப்பு!—அவையிலிருந்த அத்தனை பேருடைய பார்வையையும் வெங்கண்ணுவின் பக்கம் திருப்பிவிட்டது. மெள்ள நழுவிக் கொண்டிருந்த அந்த விஷவிரியனை வழிமறித்தான் ஒரு வாலிபவீரன். அவனுடைய முகம் கறுத்தது—மூச்சு சீறிற்று—முப்புரியை உருவினான்—பார்வை விஷத்தை கக்கிற்று, "ரங்கநாதர் மேலாணை என்னை நெருங்காதே" என்ற சாபம் அங்கேகூடிநின்ற அனைவரையும் நடுங்கவைத்து விட்டது. வீரர்கள் வேந்தனின் முகத்தைப் பார்த்தனர். வேதனைத்தீயில் வெந்து கொண்டிருந்த மன்னன் விரக்தியோடு மௌனியானான். அப்பொழுது வஞ்சகம் புன்னகை செய்ய வெளியேறிவிட்டான் வெங்கண்ணு!

"அரசே! சென்றதைக்குறித்து இனி சிந்தித்துப் பயனில்லை. நயவஞ்சகர்கள் தேடிவைத்த நாசம் நம்மை விழுங்கிக் கொண்டிருக்கிறது. விசாரம் அந்த வீழ்ச்சியைத்தடுத்துவிடாது. நினைத்தால், நிலைமையை செப்பனிட்டுக் கொள்ள இன்னமும் நேரமிருக்கிறது. நிபந்தனையில்லை நிர்பந்தமில்லை நேச உறவை கோருகிறோம். என மதுரைத் தூவர்கள் முறையிட்டுக் கொண்டு விடைபெற்றனர்.

வீம்பும் வீழ்ச்சியும் வேந்தனின் மனத்திரையில் நிழலாடின. அந்த நெருக்கடியான கட்டத்தில் ஆறுதல் சொல்ல, ஆலோசனை கூற, ஆபத்தைச் சமாளிக்க நம்பிக்கைக்கு உரியமனிதன் தேவைப்பட்டான். அந்த நல்ல உதவி எப்படி கிடைக்க முடியும்,தஞ்சை தர்பாரி

லிருந்து? அங்கே கொலுவீற்றிருந்த அத்தனைபேரும் வெங்கண்ணாவின் விசிறிகள். சர்க்காரின் முக்கியப் பொறுப்புகளிலெல்லாம் சாணக்கிய பரம்பரைதான் சாவியாக இருந்தது. இந்தப் பூதேவப்புரையோட்டம் களத்தில் காத்திருந்த சொக்கநாதனின் போராட்டத்தைவிட பயங்கரமாக தெரிந்தது அவனுக்கு.

அதன்பிறகு பக்தியிலும் பஜனையிலும் அவன் நெஞ்சம் நிலைகொள்ளவில்லை! நிலைமையை எப்படி சமாளிப்பது என்ற நினைவு மகன் மன்னாருவின்பால் இழுத்துச் சென்றது. ஆனால் "அவன் கூண்டில் அடைபட்ட குற்றவாளி! மீண்டும் அவனைவேளியே கொண்டு வருவது முன்னால்வழங்கிய நீதியைக் கொல்வதாகும். அது நேர்மையல்ல!" என மனச்சான்று மறுத்தது மற்றோர் உள்ளம் சொந்தமகனை துச்சமென மதித்து நீதியை நிலைநிறுத்தினாய்! அதேநேரத்தில் சூதுக்காரர்களுக்கும் ஆதிக்கம் கொடுத்து நாட்டுக்குச் செய்த அநீதியை நினைத்துப்பார்? உறுத்திற்று. பெருக்கெடுத்து நடக்கப் போகும் ரத்தக்கால்வாய்! அந்தவெள்ளத்திலே மிதக்கப்போகும் பிணங்கள்! பற்றிப்படரும் தீச்சுழல்— அதிலே எரிந்துகரிந்து சிதறும் எழும்புத் துண்டுகள்! இடிந்து சரிந்து தகர்ந்து சரியும் கோட்டை! அதனால் ஏற்படும் இருண்ட வாழ்வு! ஆகிய பயங்கரத்தோற்றங்கள் மனத்திரையைக் கிழித்தன. 'இத்தனை கோரங்களையும் எப்படி சகிப்பது? மண ஓலையைக் கொடுத்து மரண ஓலையை மாற்றிவிடலாம்', என்ற எண்ணம் எழுந்தது. உடனே 'கொலை வாள் ஏந்திய கொடியவனிடம் குலமகளை ஒப்புவிப்பதா? கல்லறை எப்படி கல்யாண மண்டபமாகும்? மாற்றானுக்கு மகளைக் கொடுப்பது மானக்குறைவு?' என்ற மறுப்புணர்ச்சி

மேலோங்கிவிட்டது. இப்படி எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி இதயம் பூகம்பமாயிற்று. இவற்றிற்கிடையிடையே மகன் மன்னரு முன்வந்து, "மரணத்தின் எல்லேக் கோட்டிற்கு வந்துவிட்டோம்! இப்பொழுதாவது மன்னித்தருளுங்கள். என் மகத்தான வீரத்தை இழக்காதீர்கள்" என்று மன்ருடுவதுபோல் தோன்றிக் கொண்டிருந்தது. அதனல் பல ஆண்டுகட்கு முன்னுல் பட்டுப்போன அவனுள்ளத்தில் மீண்டும் பாசம் தலே தூக்கிற்று.

அன்று நள்ளிரவுக்குப் பின், மன்னரு அடைக்கப் பட்டிருந்த அறையில் மன்னன் காணப்பட்டான். அவன் கையில் பிடித்திருந்த தீப்பந்தம்அவன் தனிமையில் வந்திருக்கிருன் என்பதைத் தெரிவித்தது. இப்படி இரவுக்கிரவே எவருக்கும் தெரியாமல் தந்தையை சந்திக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்படுமென மன்னரு எதிர்பார்த்தவனல்ல, ஆதலின் வழக்கம்போல் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தான்.

தென்றலும் நிலவும் சேர்ந்து தவழும் மாளிகையில், குமரிகளின் நடையில் நடனத்தைக் கண்டு, குரலில் கீதத்தைக்கேட்டு குதூகலித்து, மஞ்சத்தில்கொஞ்சிக்கிடக்க வேண்டிய மகன். மாற்ருனிடம் தோற்ற கைதிபோல், இருட்டறையில், புழுக்கத்தில், உறுத்தும் கயிற்றுப் பாயில் உருண்டுகிடந்த காட்சி அவனுள்ளத்தை உலுக்கிற்று. ஓடிக்கொண்டிருந்த ரத்தம் உறைந்து உணர்வற்ற சிலேயாக்கிற்று சிறிது நேரம். அந்தக் கடுந்தண்டனையை அவன் காண சகிக்கவில்லே என்பதனல் கண்கள் குளமாகிப் பார்வை திரையிடப்பட்டது.

பிறகு ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு மகனை எழுப்ப நினைத்து 'மன்னுரு' என்று வாய் நிறைய அழைததான் ஆனுல் வாஞ்சைதொண்டையை கப்பிக்கொண்டது. வார்த்தை உதடுகளின் ஓசை யற்ற துடிப்பாக ஓய்ந்தது. கையிலிருந்த பந்தத்தை கதவிடுக்கில் செறுகினுன். மீண்டும் மகனின் அருகே வந்து ஆர்வம் ததும்ப வைத்தகண் வாங்காது அவனை அள்ளி விழுங்கினுன். அப்பொழுது அவன் கண்கள் பொலபொலவென கண்ணீர்த்துளிகளை யுதிர்த்தன. மன்னுருவாரிச்சுருட்டி எழுந்தான்; தன்மேல் தெரித்த வெந்நீர் முத்துக்களின் வெது வெதுப்பால். அவன் கண்களைஅவனுல் நம்பமுடியவில்லை. ஆயினும்'அப்பா' என்ற அலறல் அங்கேநிலவிய அமைதியைக் கலைத்தது. தள்ளாமையால் தடதடத்து சோகத்தால் சோபையி ழந்துதவிர்க்க முடியாத பாசத்தால் தவித்துக்கொண்டி ருந்த கிழவன் 'மன்னுரு' 'மன்னுரு' என்று விக்கினுன். 'அப்பா! அப்பா! என்னை மன்னித்துவிட்டீர்களா?' என மனங்கசிந்து கேட்டான்.

"மன்னிப்புக்கேட்க வந்திருக்கிறேனடா மகனே! என மகனை மார்போடு தழுவினுன். பொறுமலும் தேம்பலும் அவர்களுக்கிடையில் புகுந்தது. தந்தை என்ன சொல்லுகிருர் என்ன நடந்துவிட்டது என்பது புரியவில்லை யாயினும் ஏதோ! ஆபத்து என்பது மட் டும் விளங்கியது.

'வாழ வேண்டிய உன்னை இந்த வளையில் அடைத்து வைத்தேன்...வாஞ்சைக்கு இடம் கொடுக்க வில்லை. வருங்காலத்தைக் கருதவில்லை—அரசுக்குரிய ஒரே வாரீசு என்பதையும் அலட்சியம் செய்தேன்.

"நீதிக்காக"

"அந்த நீதி என்னைப் பார்த்து சிரிக்கிறதடா மன்னு! நான் கெட்டதற்காகக் கவலைப்படவில்லை. நாட்டையே கெடுத்துவிட்டேன். நயவஞ்சகர்களின் ஆதிக்கம் நாடெங்கும் வேரோடியிருக்கிறது. கோயில்—குளம்—குருக்கள்—மதம என்று குள்ள நரிக்கூட்டம் தஞ்சைத்தரணி முழுவதையும அடகுபிடித்துவிட்டது நமது அரசியல அந்த விஷக்கிருமிகளால் அழுகிப் புழுத்து நாறுகிறது. எந்த நேரத்திலும் கள்ளச் சந்தையில நாட்டையே விலை கூறிவிடுவார்கள். அவர்களுடைய சூதாட்டத்தின் சொக்கட்டானுக உருண்டுவிட்டேன் இத்தனை நாளும். இதோ மதுரை சொக்கன் நம் கோட்டையை முற்றுகையிட்டிருக்கிருன், முதலில், அவன் உறவாடத்தான் வந்தான்! அவனைப் படுகளத்தில் சந்திக்க வைத்தது யாரென்று உனக்கு தெரியாது! நம்தளபதி ரங்கப்பன் சூரனுகவாழ்ந்தான் அவனும் துரோகியானுன் ஏன் தெரியுமா?—பயங்கரப் பார்ப்பனீயம் வேதிய வெங்கண்ணுவாக உருவெடுத்து நம்மை உருக்குலைத்து விட்டது. மானத்தோடு மாள்வதன்றி இனி மீறவழியில்லை" என வேதனையைக் கொட்டினுன்.

"தந்தையே சஞ்சலப்படாதீர்கள். அந்த வஞ்சக ஆரியத்தை சுட்டுப்பொசுக்குவிடுகிறேன்."

"மகனே! ஆரியம் ஆபத்தான அரக்கு மாளிகை. அதைக்கோட்டையென நம்பிக் குடியேறிவிட்டேன். அதற்குத் தீவைத்தால் முதலில் பொசுங்குவது நாமாகத்தானிருக்கும்."

"அப்படியென்ருல் இப்பொழுது என்னசெய்ய வேண்டும்?

"முற்றுகையை முறியடிப்பதுதான் நமக்குள்ள முதல்வேலை."

'சமரசத்திற்கு வழியில்லையா?

"அதற்குச் சந்தர்ப்பம் தவறிவிட்டது. அவன் போர் போர் என்று வந்துவிட்டான். இனி பொறு என்று சொல்வதற்கில்லை. மாப்பிள்ளையாக விரும்பி ஞன் மறுத்துவிட்டோம். இனி மகளைக் கொடுப்பது மகத்தான வீழ்ச்சியாகும். ஆதலின் நீ விரைந்து வெளி யேறு...! என அவனை சுரங்கப் பாதை வழியாக தப் பிச் செல்லவைத்தான்.

தஞ்சைத்தரணியில் ஓரே தத்தளிப்பு! அரசாங்கத் தையும் மக்களையும் இணைத்துக்கொண்டிருந்த நிர்வா கச் சங்கிலி அறுந்துவிட்டது போர் முனைப்பில்! தடி யெடுத்தவன் தண்டல்காரன்—நாக்கு நீண்டவன்நாட் டாண்மைக்காரன் என்ற நிலைமை வளர்ந்துகொண்டிருந் தது. அதனால் ஆள் விழுங்கிகளின் ஆதிக்கத்திற்கு முன் மக்கள் மண்டியிட்டுக்கிடந்தனர்! இந்நிலையில் அந்தச் சுரங்கப்பாதை இளவரசன் மன்னருவை வெளி யுலகிற்குக் கொண்டு வந்து சேர்த்தது.

கோட்டைக்கு வெளியே குப்பங்கள், வாளமர் கோட்டை,—சூரர் கோட்டை—உள்ளிக்கோட்டை— இடங்கா கோட்டை எனப்பலப்பல இருந்தன. இன் றும் உண்டு கிராமங்களாக. ஆங்கொல்லாம் இந்நாளில் 'மண்வெட்டிக் கூலி தின்ன லாச்சே எங்கள் வாள் வலியும் வேல் வலியும் போச்சே நாங்கள் போர் செய்த காலமெல்லாம் பண்டு' என்ற கவிதைக்கிலக் கியமான பரம்பரை வாழ்கிறது. ஆனால் மன்னரு வெளிவந்த நேரத்தில் அந்த முன்னோர்கள் வாளேருழ

வர்கள் தான். இளவரசனை இதயபூர்வமாக வரவேற்றனர். வீட்டுக்கொரு மகன் வேங்கையெனக் கிளம்பினன் நாடுகாக்க.

சுற்று வட்டாரத்தில் படை திரளுகிறது என்ற செய்தி மதுரைப் படையை துரிதப்படுத்திற்று. விரைவில் கோட்டையைத் தகர்க்கவேண்டும். குமரியை கொள்ளையிடவேண்டும் என்ற துடி துடிப்பில் சொக்கநாதனும் களத்திற்கு வந்துவிட்டான். வெடி மருந்து இடி முழக்கமிட்டது. தீப்பந்துகள் தாவிப் பறந்தன ஆனாலும் தஞ்சை மறவர்கள் தளராது கோட்டையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர், உள்ளேயிருந்தபடி.

இந்த ஆபத்தான கட்டத்தில் ஆள் திரட்டவோ, ஆயுதம் சேகரிக்கவோ போதிய அவகாசமெடுத்துக் கொள்ள வாய்ப்பேது மன்னருக்கு? சின்னதொரு படையை அணிவகுத்துக் கொண்டு களத்திற்கு வந்து சேர்ந்தான். ஈசுவர மூர்த்தி திடலில் இரு தரப்பினரும் மோதிக் கொண்டனர். இரத்த ஆறு பெருகிற்று. அறுபட்ட சிரங்கள்—முறி பட்ட கரங்கள் நொறுங்கிய எலும்புகள் கிழிந்த தசைகள் சிதறின! அவ்வளவு கோரமும் வீரம் என்ற விருது பெற்றுவிட்டன. ஆனாலும் வெற்றி தோல்வி எவர் பக்கமென நிச்சயிக்க வழியில்லை.

மறுநாள் செங்கதிர் எழுந்தது! வீரர்கள் செந்நீரால் மெழுகினர் நிலத்தை. சொக்கனின் தரப்பில் எண்ணிக்கை குறையாமல் வந்து குவிந்து கொண்டிருந்தது உதவிப்படை. ஆனால் மன்னருக்கு அந்த வசதியில்லை. ஆயினும் எண்ண வலிமையால் எண்ணிக்கையால் பெரிய படையை எதிர்த்துக் சாடிக்

கொண்டிருந்தான். இப்படி எவ்வளவு நாள் தாக்குப் பிடிக்க முடியும்? கோட்டைக்குள் புகுந்துகொண்டு முற்றுகையை சமாளிக்க முயற்சிக்கலாமென திட்டமிட்டான். அதற்கு வழியில்லாமல் எதிரிகள் சுரங்க வழியைத் தூர்த்துவிட்ட காரணத்தால், விஜயராகவனுக்கு இவ்வளவு நிலைமைகளும் தெளிவாகத் தெரிந்தது. மேலும் கோட்டையை அடைத்துக்கொண்டு உள்ளே இருக்கப் போதிய உணவு இல்லை! போராட வேண்டிய கருவிகட்குப் பஞ்சம்! வாளேந்த ஆள் வேறு தேவைப்பட்டது! என் செய்வான்? விரைவில் கோட்டை சரியும்—கூடகோபுரங்கள் குட்டிச் சுவராகும்;குலமகளிர் கடத்தப்படுவர். கொள்ளையோ கொள்ளை!! இந்த கோரத்திலிருந்து தப்புவதற்கில்லை என்பதை யூகித்துக் கொண்டான். புதுப்பானைகளில் வெடிமருந்து நிரப்பி அந்தப்புர மாளிகையின் அடிவாரந்தோறும் புதைத்தான். அக்கினிக்குண்டங்களை வளர்த்தான் அரண்மனைவாசிகளை அழைத்து ஆபத்தை விளக்கி, மாற்றானிடம் பிடிபட்டுமானமிழப்பதைவிட மாள்வதே மகத்தான தியாகம்! என மரண சாசனம் வழங்கினான்.

அரண்மனை வாசிகட்கு தோல்வியின் பயங்கரம் பெரிய துணிச்சலை தந்துகொண்டிருந்தது. அதனால் தீச்சுழலில் சிங்காரவல்லிகள் வலியப்பாய்ந்துவாழ்வை முடித்துக்கொண்டனர். அதற்குத் துணியாத அபலைகட்கு அதிர்ந்து சரிந்த கட்டிடங்கள் கல்லறையாயின. அந்தப் பயங்கர தற்கொலைப் படலம் தஞ்சை அரண்மனையைத் தவிடு பொடியாக்கி விட்டது சில நேரத்திற்கெல்லாம். அதன் பின்னர் எஞ்சிய வீரர்களுடன் இறுதிப் போராட்டத்திற்காக எதிரிகள் பிளக்காத

வாயிலைத் திறந்துகொண்டு வெளிவந்தான். மரணத்திற்கு தங்களை தயாரித்துக் கொண்டதற்கடையாளமாக மஞ்சள் உடுத்தியிருந்தனர் அனைவரும்.

மதுரைப்படை மன்னுருவை வளைத்துக்கொண்டு விட்டது ஒரு பக்கம்! மற்றொரு முனையில் விஜயராகவனும் அவனுடன் சிலருமாக மதுரைப் படையை வெட்டிச் சாய்த்துக் கொண்டு விரைந்து முன்னேறினர். ஆனாலும் இவர்கள் சிலர்! எதிரிகள் மிகப்பலர்! போராட்டம் நெடுநேரம் நீடிக்கவில்லை! விஜயராகவனும் அவனுடன் வேறு இரு நபருமே எஞ்சினர்.

அவர்களின் போர் திறமும் தற்காப்பு சாகசமும் பெரிய விந்தையாக இருந்தது. அந்தக் கடும்போர் அனைவர் கவனத்தையும கவர்ந்து விட்டது. சொக்கநாதன் அவர்களில் 'அச்சுதரங்கம்மாள்' மாறு வேடத்தில் மகத்தான வீரங்காட்டுகிறாள் என்பதைக்கண்டு கொண்டான். தன் படை மறவர்களை ஒதுங்க உத்திரவிட்டான். உயிரோடு அந்த வீரமகளைப் பிடிக்க அரும்பாடுபட்டான். அதனால் அவளுடைய வாள் வீச்சுக்குப் பல நூறு மதுரை மறவர்கள் காவு கொடுக்கப்பட்டனர். இந்த சாடுதல் வளையமிட்டுக் கொண்டபடி மன்னுரு போராடிய முனையோடுஒன்று பட்டது. பின்னும் உக்கிரமாகத்தாக்கினர்!

மன்னுரு கரமிழந்து சாய்ந்தான். விஜயராகவன் மகனைச் சாய்த்த மான்றுன்மீது பாய்ந்து அந்த மரணப் பாய்ச்சலுடன் உயிருக்கோய்வு கொடுத்தனுப்பினான். மிச்சமிருந்தது அச்சுதரங்கம்மாள் தான். ஆனவரையில் எதிரிகளை வீழ்த்தினாள். ஆனால் எதிரிகள் இவளை வீழ்த்தவில்லை. வளைத்து வளைத்துப்பிடிக்கவே

முயன்றனர். அவர்கள் முயற்சி பலிக்கும் தறுவாயில் தன் கைவாளுக்குத் தானே இரையாகித் தரையில் சாய்ந்தாள். அப்பொழுது தஞ்சைக்கோட்டையும் சட சடவென சரிந்து கொண்டிருந்தது. மதுரைப் படையின் வெற்றி முரசு அதிர்ந்தது.

வாகை சூடிய மதுரை மறவர்கள் குலவையிட்டுக் கொக்கரித்த வண்ணம் தஞ்சைக் கோட்டைக்குள் நுழைந்தனர். அரண்மனை— அந்தப்புரம்—அரசாங்க அலுவலகங்கள் ஆகிய இடந்தோறும் அவர்கள்தான்! வேட்டையில் வீழ்ந்துபட்ட யானையைச் செந்நாய் களும் சிறு நரிகளும் மிகச் சுலபமாகப் பிய்த்துப் பிடுங்கித் தின்னுவது போலாயிற்றுத் தஞ்சையின் நிலமை. அகப்பட்டதில் பாதி பங்கு அரசாங்கத்திற்கு, மீதி அவரவர்கட்கு!

மேலும், கொட்டி முழக்கிக் கொண்டு கொடி யேந்திச் சென்றனர். வீதிக்குவீதி, வீட்டுக்கு வீடு குடி மக்கள் காணிக்காசும் நாழி நெல்லும் செலுத்தி கொடி வணக்கம செய்தனர்; அந்தப் புது ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டதற்கு அடையாளமாக. அப்படிச்செய்யத் தவறியவர்கள், வெற்றியை ஒப்புக் கொள்ளாத விரோதிகளாக மதிக்கப்பட்டனர்—வீரர்களின் வெறி யாடலுக்கு அவர்கள் விருந்து! ஆண்களும் பெண் களும் ஆளடிமையாக ஏலம் கூறப்படுவர்—கன்னிப் பெண்கள் கத்திக்கு மாலையிட வேண்டும்! அந்தக் கத்திக்குரியவன் அவளைத் தன் படுக்கையறைப் பது மையாக்கிக் கொள்வான்! மற்ற மற்ற சொத்துக்க ளெல்லாம் யுத்தநஷ்ட ஈட்டிற்காக எடுத்துக் கொள் ளப்படும்—வெற்றிக்குப்பின் இந்தப் போர்க்கொள்ளை யில் தஞ்சை வீழ்ச்சியுற்றது! வீழ்ச்சியுற்றது!!

பின்னர், 'சொக்கநாதன்' தஞ்சைக்கும் மன்னஞகப் பிரகடனப்படுத்தப்பட்டான். தஞ்சைக் கோயில்கள் அனைத்திலும் தீப தூப ஆராதனை அபிஷேகங்கள் அவன் பெயரால் நடத்தி வைக்கப்பட்டன. போரிஞல் விளைந்த பொல்லாங்குகட்குப் பிராயச்சித்தமாக பூசுரர்கட்கு 'துவாதசக் கட்டளை ராமாநுஜக்கூடம், முதலிய புதிய அன்ன சத்திரங்கள் திறக்கப்பட்டன.

தஞ்சை, தனியரசு என்ற நிலைமை மாற்றியமைக்கப்பட்டு மதுரையரசில் ஒரு மண்டிலமாக இணைக்கப்பட்டது. மகத்தான இந்த வெற்றி மன்னன் சொக்கநாதனுக்கு மட்டும் மகிழ்ச்சியைத் தரவில்லை. அவனுடைய அமைதி என்ருே அழிந்துவிட்டது!! களத்தில் அச்சுதரங்கம்மாள் செத்துவிட்டாள்! ஆனல் உள்ளத்தில்......சாகாது நடம்புரிந்து அவனைச் சாக அடித்துக்கொண்டுதானிருந்தாள்! மணக்கோலத்தில் கைப்பிடிக்கவேண்டிய இதயராணி அவள்!—நெருங்க முடியாத நெருப்பாகிப் பொங்கும் ரத்தவெள்ளத்தில் அவிந்த காட்சி, அவன் கண்களை விட்டகலவில்லை. காணுகின்ற பொருளெல்லாம் அவளுடையமரணப் புன்னகை—கேட்கின்ற ஓசையெல்லாம் அவளுடைய வாள் வீச்சின் கிளுகிளிப்பு—உண்ணும் பொருளினெல்லாம் அவள் சிந்திய ரத்த வாடை, என் செய்வான்! அவன் உணர்வு கலங்கிவிட்டது. உள்ளம் உதிரத்தைக்கொட்டிக்கொண்டே யிருந்தது—உன்மத்தஞனன்! முடி அவனுக்கு முள்ளாக உறுத்திற்று—போக போக்கியங்கள் எட்டிக் காயாகிக் கசந்தன. ஆளப்பிறந்த அவன், வாழ முடியாதவஞகிவிட்டான். வேதனைப் புயல், அவனை விரக்தியில் தள்ளிவிட்டது.

தளபதி வேங்கடகிருஷ்ணனை சகல அதிகாரங் களுடனும் மதுரைக்கு அனுப்பிவைத்தான் தர்பார் நடத்த. தம்பி அழகிரியைத் தனக்குப் பிரதிநிதியாக் கித் தஞ்சைத் தரணியை ஒப்புவித்தான். தான், திருச்சிக்குப் புறப்பட்டுவிட்டான், திருவரங்க சேவை யில் ஜென்ம சாபல்யம்பெறலாமென்ற திடநம்பிக்கை யுடன். அங்கே பக்தி—பஜனை—பகவத் சேவை—சத்கதா காலட்சேபம் ஆகியவற்றில் மூழ்கினான் தன்னையே மறந்து.

## V

தஞ்சையில் அழகிரியின் அரசு ஆரம்பமாயிற்று. மக்களின் நல்லெண்ணத்தைப் பெற வேண்டும்—மாற் ருனால் ஆளப்படுகிறேம் என்ற மனேவேதனை அவர் களிடம் அரும்பக்கூடாது. என்ற அடைப்படை யிலேயே தன் அரசியலை வகுத்துக்கொண்டான். யுத் தக் கைதிகளாகப்பிடித்து வைக்கப்பட்டிருந்த தஞ்சை வீரர்கட்கெல்லாம் விடுதலை! போர்க்காலக்கொடுமைக் காளான வட்டாரமெங்கும் வரிவஜா! பறிமுதலான சொத்துக்கள் உரியவரிடம் ஒப்படைப்பு! அனதை யாகிய குடும்பங்களுக்கு ஆதரவு! எனப் பலவாறு யுத் தப் பாழிலிருந்த மக்களுக்கு மீண்டும்வாழ்வளித்தான். அரசாங்க நிர்வாகப் பொறுப்புகட்கெல்லாம் பழைய ஊழியர்களையே தேடிப்பிடித்து நியமித்தான். தஞ்சை தர்பாரின், பழைய, வழக்கமான சடங்கு சம்பிரதாயங் களையே பின்பற்றி, புதிய பரம்பரை தஞ்சையில் காலூன்றியிருக்கிறதென்ற, விகற்பம் தோன்ருதவாறு செய்துவிட்டான். மேலும், மக்களின் கவனத்தி லிருந்து, நடந்து போன கோரங்கள் மறந்து போகக்

கூடிய அளவுக்குத் தேர் திருவிழாக்கள் நாடெங்கும் கொண்டாடச் செய்தான்—இப்படியாகப் பல துறையிலும் பெரும் பொருளைச் செலவிட்டு இழந்த இன்பத்தை மக்களுக்கு மீட்டுக் கொடுத்துவிட்டான். அதனுல் பொக்கிஷம் காலியாகிக் கொண்டுவந்தது. இந்நிலையில் நாட்டைச் செழுமைப் படுத்தும் நல்ல திட்டங்களைத் தீட்டி அமுலுக்குக் கொண்டுவர ஆசைப்பட்டான். அதற்குப் போதிய மூலதனம் அரசாங்கத்தில் இல்லை. அதற்கான புதிய வரிகளை விதிப்பது அதற்குள், ஆகாது! என்ற நினைவுக்கும் நிலைமைக்கும் இடையில் அழகிரியின் அரசியல் திறம்பட நடந்து வந்தது.

இந்நாளில், விஜயராகவன் தர்பாரிலிருந்துஅவனை வீழ்த்திவிட்டு வெளியேறிய வேதிய நரி வெங்கண்ணு, தீர்த்த யாத்திரை வேடதாரியாக வெளியிடங்களில சஞ்சரித்து வந்தான். தஞ்சையின் புதிய நிலமையைக் கேள்விப்பட்ட அவன் நெஞ்சில்; பழைய நினைவுகள் படம் விரித்தன. தான் மீண்டும் தஞ்சை சென்று ஆதிக்கம் பெறுவது, பூசுரர்களின் போகயோக்கியத்திற்கான தனது பிறவிக் கடன எனக் கருதினுன் எப்படி நுழைவது? எவ்வாறு ஆதிக்கம்பெறுவது? என்ற கேள்விகள் அவன் மூளையைக் கிளறிவிட்டன.....பின்னர், சென்ற இடந்தோறும் தஞ்சையின் மறுமலர்ச்சியை! அழகிரியின் பெருமையை! அறிமுகப்படுத்தும் விளம்பரக்காரனுகிவிட்டான். அயலிடங்களில் தன் புகழ் பரவுவதைக் கேட்டு அகமகிழ்ந்தான் அழகிரி. அந்த அந்தஸ்தைத் தேடிக் கொடுத்துக்கொண்டிருப்பவன் அரசனின் கவனத்திற்கு வராமலிருக்க முடியுமா? சில காலத்திற்குப் பின், வெங்கண்ணு எவ்வித அறி

விப்பு மில்லாமல், அழைப்பையும் எதிர்பாராமல் நோக்கி வந்தான், அவனால் வளர்த்து வைக்கப்பட்ட குள்ளநரிக் கூட்டம், குதூகலப்பட்டது! குசலம் விசாரித்தது, கும்பலாகக் கூடி! அத்தனை பரிவாரமும் சூழ, பரமபாகவதனாக நடித்துக் கொண்டு, தஞ்சைக் கோவில்கள் அனைத்திலும் புகுந்து புறப்பட்டு, கடைசியில் அரண்மனைக்குள் நுழைந்தான்! அங்கே அழகிரியின் உபசரிப்புக்கிடையில், அவனடி வீழ்ந்து தொழுதான்! "வேதியரே! இதென்ன விபரீதம்! ஆச்சார்ய பதவிக்குரிய தாங்கள் அரசகுலத்தோன் அடி வீழ்வதா?" எனப் பதறினான் அழகிரி. அதற்கு அரசே! "திருவுடை மன்னரைக் காண்பது திருமாலை காண்பதற்கே ஒப்பு" எனப்புன்னகைபூத்தான் வெங்கண்ணா.

அதிலே புதைந்திருந்த விஷத்தை அழகிரி அப்பொழுது கண்டு கொள்ளவில்லை. ஆர்வம் ததும்ப, மகிழ்ச்சி மிக்கோனாய், மனங்கனிந்துவெங்கண்ணாவை வரவேற்று அரசாங்க விருந்தாளியாகச் சிலநாள் இருக்கவேண்டினான். விரோதியாக வெளியேறிய வெங்கண்ணா, மீண்டும் விருந்தாளியாக அதே அரண்மனையில் அடி எடுத்து வைத்துவிட்டான்.

அழையா விருந்தாக வந்து சேர்ந்த வெங்கண்ணாவுக்கு அவன் எதிர்பார்த்ததைவிட அதிகமான வரவேற்பு—அமோகமான உபசரிப்பு—அரசனின் அன்பு கிடைத்துவிட்டது! அதிலும் அரசாங்க விருந்தாளியாக அரண்மனையிலேயே இடம் பெற்றுவிட்டான். பின் கேட்கவேண்டுமா? அவன் ஒரு பழம்பெருச்சாளி! பதுங்கும் வளைகள் பழக்கமானவைதானே! தஞ்சைத் தர்பாரில் நிலையாக வேரூன்றும் நினைவு அவன் நெஞ்சத்தில் தழைத்தோங்கி, கண்களில் கபடமாக மின்னி,

மூலையில் நரித்தனமாக நர்த்தனம் புரிய ஆரப்பித்து விட்டது.

பூசுரர்கள் ஏற்பாடு செய்தனர், அவனது சுற்றுப் பிரயாண அனுபவங்களை, அன்றுடம் பிரசங்கம் செய்ய. அழகிரியும் அதனை விரும்பினுன்; அயலிடங்களின் நிலவரம் அறிய வாய்ப்பாகும் என்ற அரசியல் நோக்குடன்.

வெங்கண்ணு, திருத்தலங்களின் பெருமைகளைச் சொல்வதுடன், நேற்று—இன்று நாளை, என்பதெல்லாம் நிலையாமைச் சகடத்தின் உருளல். சென்ற நாட்கள் என்பவை நம் ஆயுளில் செல்லாகிப் போனவை, இப்பவோ, பின்னையோ இன்னும் சற்று நேரத்திலோ உடலாகியக் கூண்டைவிட்டு உயிராகியக் கிளி பறந்து விடும். மானிடனே! அதற்குள் பிறவிப் பெருங்கடலை நீந்து!! என்ற மாயவாதங்களைத் தேன் சுரக்கப் பேசி, தானொரு பற்றற்றப் பரமயோகியாக நடித்தான். அழகிரியோடு (தனித்து) அளவளாவும்போது சொல்லுக்குச்சொல் "என் ஆயுளில் பெரும்பகுதி லௌகீகத்தில் கழிந்து விட்டது. எஞ்சியுள்ள நாட்களையாவது பரமார்த்திகத்திற்காகச் செலவிட வேண்டும்" என்ற பகட்டுடன் அழகிரியின் ஆவலைத் தூண்டும்படியாக, பழைய அரசியல் அந்தரங்கங்களை ஆதாரங்களுடன் வெளியிடுவான். அந்தச் செய்திகள் நிகழ்கால நிர்வாகத்திற்கு உதவியாகவும், வருங்கால அரசியலுக்கு ஒரு முன்னறிவிப்பாகவும் கிடைத்த படியால, வெங்கண்ணுவின் தோழமை மிகமிக அவசியமானதென அழகிரி கருதலானுன். ஆனல், வெங்கண்ணு இடையிடையே விடை கேட்டுக் கொண்டு தானிருந்தான்!

இருவருக்குமிடையே வாஞ்சையும், வஞ்சனையும் சேர்ந்து பின்னின. இன்நிலையில், தலைமை யரசுக்குத் தஞ்சை கப்பம் அனுப்பிவைக்க வேண்டிய தவணை குறுக்கிட்டது. என் செய்வான் அழகிரி? தஞ்சையின் வரவு செலவுப்பட்டியல் பற்றுக் குறை கலத்திலேயே இருந்தது—பொக்கிஷத்திலிருந்த பழைய இருப்பும் யுத்த பிற்கால சீரமைப்பில் தீர்ந்து விட்டது. குடி மக்களிடம் 'கப்பக்காணி' வசூலிப்பது தவிர வேறு வழியில்லை. ஆனல் அந்தப் புது வரியானது மக்கள் அரசியல் அந்தஸ்த்தில் அடிமை நிலைமையினர் என்பதற்கே அறிகுறியாகும்! அப்படிப் பட்ட அவமானத் திற்கு அவர்கள் ஆட்படக் கூடாது என்பதற்காகவே அழகிரி அரும்பாடுபட்டு அரசியலைச் செப்பனிட்டான்! அதற்குமாருக எப்படி இந்த நிர்ப்பந்தத்தை வலியப் புகுத்துவான்? இந்த மனப்புயல் அவன் மகிழ்ச்சியை அழிக்க ஆரம்பித்து. சோர்வும், துன்பமும் அவனைத் துவளவைத்தன.

வெங்கண்ணு! இந்த நெருக்கடியை ஒருவாறு யூகித்துக் கொண்டான். ஆனுலும் அதனைப் புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளாமல், அழகிரியின் ஆயாசத்தைக் கண்டு அனுதாபப் பட்டான். 'அப்படி என்ன நேர்ந்து விட்டது? என்னுடல் பொருள் ஆவி அத்தனையும் தத்தம் செய்கிறேன், ஆக வேண்டியதைச் சொல்லுங்கள்' என மன்ருடினன். அரசாங்க ரகசி யத்தை, ஒரு அன்னக்காவடியிடம் எப்படிக் கலந்து பேசுவது? என்ற எண்ணத்தால், தானே யோசித்து ஒரு வழியும் புலப்படாமல் உள்ளம் புழுங்கினன் அழ கிரி. ஆயினும் வெங்கண்ணு வலியத்தானே தலையிட்டு 'நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணுவதால் நெருக்கடி

தீர்ந்து விடாது—முனைந்து முயற்சிக்க வேண்டும்—அதற்கு மூலதனம் தான் தேவையென்பதில்லை—மூளை ஒன்றினாலேயே சாதித்துவிடலாம்!' என ஜாடையாகச் சுட்டிக்காட்டி, மதுரையிலிருந்து ஓலை வருமுன் நாம் முந்திக் கொண்டாலென்ன? என்ற கேள்வியை எழுப்பினான். அந்த யோசனை அழகிரியை சிரிக்க வைத்து. 'வலிய நாமே கப்பமனுப்ப வகையில்லை கருணை செய்யுங்கள் என எந்த முகத்தோடு கையேந்துவது? அதைவிட இந்த அரசப்பிரதி நிதி பொருப்பிற்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டு உம்மோடு ஊர் சுற்றப் புறப்பட்டு விடுவதே மானம்!' என மறுதளித்தான். இந்த விடையை கேட்டு வெங்கண்ணா கொஞ்சம் வெகுட்சியோடு, "அரசே! இவன் சாதாரணதர்ப்பை யேந்தி! இவனுக்குத் தர்பார்- மரியாதை எங்கே தெரியப் போகிறது? தலை கவிழும்படியான யோசனையைச் சொல்லி விட்டான்—என்றுமட்டமாக மதித்து விட்டீர்கள்! நான் அந்தப் பஞ்சப்பாட்டுப் பாடச்சொல்லவில்லை. கெஞ்ச வேண்டிய நிலைமை தங்களுக்கில்லை? தாங்கள் மதுரை மன்னனின் உடன் பிறந்த தம்பி என்பதை மறந்துவிடாதீர்கள்! யுத்தப் பாழிலிருந்து நாட்டை மீட்க. சரிந்த கோட்டையை மீண்டு எழுப்ப-தூர்ந்த அகழியை மீண்டும் தோண்ட வெற்றி கொண்ட மண்டிலத்தில் வேரூன்ற ஆகும் செலவுக்கோர் அளவில்லை! அதனால் அங்கிருந்தும் பெருந்தொகை உடனடியாக வரவேண்டும் எனக்கேளுங்கள்.கப்பம்! கடலிற்கரைந்தஉப்பாகிவிடும்''என்ற ஆணித்தரமான ஆலோசனையை வற்புறுத்தினான்.

இந்த துருப்பு சீட்டையடித்ததும், மதுரையசைந்து விட்டது! "அங்கே உள்ளதைக் கொண்

டே நல்லது செய்துகொள். இங்கும் நிலைமை நெருக்கடிதான், மதுரையை எதிர்பார்க்க வேண்டாம்" என்ற மாற்றம் அங்கிருந்தும் வந்து சேர்ந்தது—ஆதரவான இந்தப் பதிலை அழகிரி எதிர்ப் பார்த்தவனல்ல! தத்தளித்த வேளையில் இப்படியொரு சாதகமான நிலைமையை உருவாக்கிக் கொடுத்த வெங்கண்ணுவை மிகவும் போற்றினன். அந்த மதியூகி தன் அரசியலுக்கு மிகமிக அவசியமானவன் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை வளர்ந்துவிட்டது.

ஆனால், வெங்கண்ணு விடை கேட்பது மட்டும் ஓயவில்லை. அழகிரி அனுமதிக்க முடியாதென சொந்தம் பாராட்டினன். "சோறுகண்ட இடம் சொர்க்கம்! என்னும் சோம்பன் அல்ல நான். உழைக்காமல் உங்கள் உப்பைத் தின்று கொழுக்க ஒப்பமாட்டேன். விருந்தாளியாக வந்தஎன்னை வழியனுப்பி வையுங்கள். நான் செல்லாத திருப்பதிகள்—கல்லாத வேதங்கள்-ஆடாத தீர்த்தங்கள் இன்னும் எத்தனைஎத்தனையோ!'; எனச் சாகசமாடினன். அவனது பெருந்தன்மையைக் கண்டு பிரமித்த வேந்தன், பொறுப்பைச் சுமத்தினல் அறுத்துக்கொண்டு ஓடமாட்டான் என்ற நம்பிக்கையால், அரசாங்கத்தின் "பிரதம ஆலோசகன்" என்ற அந்தஸ்தை வழங்கிவிட்டான்! மக்களின் நன்மையைக் கருதி, மறுக்கமுடியாத நிலையில், அந்த மகத்தான சுமையைச் சுமக்க முன்வருவதாகச் சொல்லிக்கொண்டே நிலையாக ஊன்றிவிட்டான் வெங்கண்ணு தஞ்சைத் தர்பாரில்.

பின்னர், சிலநாட்களுக்கெல்லாம், அழகிரியின் ஆக்கவேலைத்திட்டங்கள் மிகப்பெரிய அளவில் ஆரம்பமாயின. அதற்குத் தேவையான பொருளாதாரத்தை

தஞ்சைத் தரணியில் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்ட போர்ச்சுக்கீசிய, டச்சு வியாபாரிகளின் குத்தகைத்தொகையிலிருந்து எதிர்பார்த்தான். கணிச மான அளவு அவசியப்பட்ட நேரங்களில் அத்தொகை வசூலாவதில்லை. அதனால் அவன் ஆரம்பித்த வேலை கள் பாதிக்கப்பட்டன. அந்த முடையை முன்னிட்டு கடன்வாங்குவதெனக் கருதினான். அதுபற்றி வெங் கண்ணுவிடமும் கலந்து பேசினான். வெங்கண்ணு அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை " காவலன் கடன் படுவதா?" எனக்கவலைப்பட்டான். 'அந்தக் கண்ணி யத்தைக் கருதி காரியம் தடைப்படுவதா ? எடுத்த வேலையை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து நடத்த தொகைக்கு என் செய்வது" என வினவினான் அழகிரி.

மௌனம் அங்கே குடிபுகுந்தது. வெங்கண்ணு சிந்தனையில் ஆழ்ந்தான்—அதற்கடையாளமாக இமை கள் விழிகளை மூடி மறைத்தன. அழகிரி அமைதி யோடும் அலட்சியத்துடனும் அதனைக் கவனித்தபடி தான் இருந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் வெங் கண்ணுவின் புருவங்கள் நெரிந்தன! புன்னகை தவழ்ந் தது! வேந்தே விசாரத்தைவிடுங்கள். வேண்டிய பொருள் தருகிறேன்" எனக் கூவினான். அந்தக் கூச்ச லில் நம்பிக்கைகொள்ளாமல் குறுநகை புரிந்து 'ரசவாத மந்திரம்ஞாபகத்திற்குவந்துவிட்டதா; அல்லது எங்கா வது தங்கச் சுரங்கமிருப்பதாக ஆரூடம் தெரிகிறதா?' எனக்கேலி பேசினான் அழகிரி.

" ஏளனம் புரிகிறீர்களா ? நீங்கள் எதிர்பாராத அளவு - ஏராளமான செல்வம் !! இருக்குமிடத்தைக் காட்டினால் எனக்கென்ன தருவீர்கள்?" எனப் பந்தயம் கேட்டுவிட்டான்!

அழகிரி யோசிக்கவில்லை. "அதற்கென்ன ஆகட்டும், உன் விருப்பம்போல்" என அலட்சியமாகவே உறுதியளித்துவிட்டான். வேடிக்கையும் விநயமும் கலந்த உரையாடலுடன் அவர்களின் அன்றைய ஆலோசனை முடிவுற்றது.

அடுத்த நாள். தஞ்சையரண்மனையின் மேற்குப் பகுதி-தரைமட்டமாகிக் கிடந்த அந்தப்புரம் பிரித்து சோதிக்கப்பட்டது. பாறைகளும், காறைகளும் அப்புறப்படுத்தப்பட்டன. அதன் நடுவே பளிங்குத் தடாகம் ஒன்று பாசிபடர்ந்து பழங்குட்டையாகத் தூர்ந்து கிடந்தது. அதனையும் சுத்தப் படுத்தித் தோண்டச் செய்தான். அஸ்திவாரம் வரையில் கல்லியெடுத்தனர் அதற்கும் கீழே அழகான கட்டிடம் மிகவும் அழுத்தமாக இருந்தது. ஆனால் அதற்குள் நுழைய வழியில்லை! ஏதோ மர்மப் பாதையிருக்குமென யூகித்தனர். எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. முடிவில் வெடி மருந்து வைத்துப் பிளந்தனர்!

உடைத்தெடுத்த மாதுளங்கனிபோல் செம்பும், வைரமும் குலுங்கிச் சரிந்தன. செம்பரிதி தவழும் அந்திவானைப் பெயர்த் தெடுத்து அடுக்கியதுபோல் தங்கப் பாளங்கள்!—திகைப்பும் வியப்பும், அனைவரையும் திணரடித்தன. அழகிரி ஆனந்த வெள்ளத்தில் மிதந்தான். வெங்கண்ணுவை மார்புறத்தழுவி மகிழ்ச்சியில் பங்களித்தான். ஆனால். அந்த வேதியனின் மனம் புதையல்! புதையல்!! எனப் பதைபதைத்தது. ஆசை வெள்ளம் அணைகடந்து விட்டது! "அரசே எனக்களித்த வாக்கை நினைவூட்டுகிறேன்! நிறைவேற்றுங்கள்!" என அவசரப்பட்டான். "வெங்கண்ணு நான் வேறு நீ வேறு! இத்தனையும் நீ தந்த

செல்வமல்லவா! என் இதயத்தில் வைத்து பூஜிக்கும் தேவன் இனி நீதான்! என்னையே அடிமை கொண்டு விட்ட உனக்கு வேறென்னவேண்டும்! என ஆர்வம் ததும்ப வாஞ்சையை வார்த்தைகளாக வடித்தான்' அவைகள் எதுவும் அவன் காதைக் குளிரச் செய்ய வில்லை.

"வேந்தே! வெறும் வார்த்தைகளை வைத்துப் படிக்காதீர்—இந்த புதையலில் சரிபாதி எனக்குச் சேரவேண்டும்!" என விகற்பத்தின் எல்லைக் கோட்டில் நின்று நிபந்தனை விதித்தான். அவன் கண்கள் கொள்ளியைப்போல் பளபளத்தன. ஆசை வெறி, அவன் முகத்தை விகாரப்படுத்தியது! துறு துறு வென குறுக்கும் நெடுக்குமாக ஊங்கார மிட்டபடி உலவிக் கொண்டிருந்தான். இந்த உன்மத்தத்தைக் கண்டு அனைவரும் அருவருத்தனர். அழகிரி 'சந்தேகத்தின் தலைவாசலுக்கு வந்து சேர்ந்து விட்டான்!

வெங்கண்ணு ஆசைத்தீயில் பொசுங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய பொறுமல் பொருட்படுத்தப்படவில்லை, புதையல் முழுதும் அரசாங்கப் பொக்கிஷத்தைப்போய்ச் சேர்ந்துவிட்டது. அதனால் அழகிரி மீது அவனுக்கு அடங்காத ஆத்திரம் பொங்கிற்று. அழகிரிக்கோ அவன் மீது அவநம்பிக்கை வளர்ந்து கொண்டிருந்தது அதே நேரத்தில். அவர்கள் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமாக பழகிக்கொண்டுதானிருந்தனர். ஆயினும் உள்ளத்தால் — உணர்ச்சியால் வெகுதூரம் விலகிவிட்டனர். மயிர் ஊடாடா நட்புப் பொருள் ஊடாடக்கெடும் என்ற பழமொழிக்கு அவர்கள் இருவருமே ஆதாரமாயினர்.

விரைவில் வெங்கண்ணுவை வெளியேற்றி விட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது அழகிரிக்கு. ஆனால் அந்த ஆரிய நரியோ! வேந்தனை வீழ்த்துவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது.

இந்நிலையில் வெங்கண்ணு ஒருநாள் அழகிரியின் வாக்குறுதியைக் கவனப்படுத்தித் தன் ஆயாசத்தைக் காட்டிக்கொண்டான். அப்பொழுது அழகிரி கொஞ்சம் கனிவாகவே "பரமார்த்திகத்திலீடுபட்ட பற்றற்ற யோகியைப், பாழும் பணத்தாசைப் பிடித்தாட்டுவதேன்" எனக் கேட்டுவிட்டான். அந்த உரை, வெங்கண்ணுவை பதறவைத்தது புண்ணில் கொள்ளி பட்டது போல்.

"அப்படிப்பட்ட ஆசை வெறிக்கு நான் அடிமையல்ல கேவலம் இந்தச் சடலத்தைப்பற்றிய கவலையை விட்டே நெடுநாளாயிற்று. பக்தர்களை பராமரிக்கும் பகவத் கைங்கரியத்தை முன்னிட்டே நமக்குப் பணம் தேவைப்பட்டது."

"அதற்குப் பகவான் இருக்கிறார். அந்தப் பாரம் தங்களுக்கேன்?"

"ஆண்டவன் திருத்தூதுவன் நான். அந்தர்யாமியாய் ஐயன் நமக்கிட்ட கட்டளை அது."

"தங்கள் திருக்குலத்தார் அனைவருமே அப்படித் தான் சொல்லிக்கொள்கின்றனர்."

"வேந்தே! தங்கள் விளையாட்டுப் பேச்சு மிஞ்சி விட்டது."

"வேதியரே அதற்கு அவகாசமேது எனக்கு. நினைத்தால் புல்லரிக்கும்படியான பொறுப்புகளுக்கி

டையில் : நசுங்கிக் கொண்டிருக்கும் அபாக்கியவான் நான்!"

"அதனால்தான் நான் செய்த நன்றியையும் நசுக்கிவிட்டீர் போலும்! போகட்டும், முடிவாகக் கேட்கிறேன், பாதிகூடவேண்டாம்! பாதியிலும் பாதி!! என்ன சொல்லுகிறீர்?"

"பங்குக்கேட்கும் பாதகத்தை மன்னிக்கிறேன். இதுவரை பழகிவந்த காரணத்தால், புதையலாகக் கிடைத்த பொருள்கள் பூமியில் விளைந்தவையல்ல. மக்களின் உழைப்பு! ஆறில் ஒன்றாக அரசாங்கத்திற்கு வந்துசேர்ந்தவை!! அதுவும் அவர்களின் பராமரிப்பிற்கான சேமிப்பே! அதனைத் துர்விநியோகம் செய்ய ஒருநாளும் சம்மதியேன்,"

"அப்படியானால் தங்கள் வாக்குறுதி?"

"இன்னதென்று வரையறுக்கப்பட்டதல்ல. அதனால் வாய்க்கு வந்ததைக் கேட்பதற்கில்லை."

"அவமானம்! அவமானம்!! இந்தப்பஞ்சைப்பிராமணனுக்கல்ல. அரசாங்கப் பிரதம ஆலோசகனுக்கு. அழகிரியின் உயிர்த்தோழனுக்கு! பெரும் பதவிகளைத் தாங்க இனி எனக்கு அருகதையில்லை. விடை கொடுங்கள் வேந்தே! இனி அரைக்கணமும் ரத்தக்கறை படிந்த இந்த அரண்மனை நிழலில் கூடநிற்பதற்கில்லை. நான் வருகிறேன்!"

"தாராளமாக சாஸ்திரியாரே!"

இந்தப் பேச்சுக்குப் பின் பெருமூச்சுத்தான் இழைந்தது இருவரிடையே. மௌனம் சலனமற்ற சிலையாக்கிற்று அவர்களை. வெங்கண்ணாவின் வைர நெஞ்சமும் துணுக்குற்று விட்டது இந்தத் திடீர்

இந்தப்பேச்சுக்குப்பின் பெருமூச்சுத்தான் இழைந்தது இருவருக்குமிடையே. மௌனம் சலனமற்ற சிலையாக்கிற்று அவர்களை. வெங்கண்ணுவின் வைர நெஞ்சமும் துணுக்குற்றுவிட்டது இந்த திடீர் அதிர்ச்சியினால். வேதனை, வெட்கம், விரக்தியாகிய உணர்ச்சிப் போராட்டத்தில் உன்மத்தம் பிடித்துவிடும்போலிருந்தது அவனுக்கு. தலை கவிழ்ந்து வெளியேறினான்.

## VI

அந்நாளில் மராட்டிய மாவீரன் ஷாஜி பீஜப்பூரின் பிரதம தளகர்த்தனாகி வெற்றி கொண்டிருந்தான் தெற்கே தொண்டமண்டிலம் வரையிலும். தென் திசையில் பெங்களூரும், செஞ்சியும் அவன் ராணுவ முகாம்கள்.

அவனது இளையராணியும், சோதரியும் ராமேசுவர யாத்திரைக்குப் புறப்பட்டிருந்தனர் ஒருசமயம். அவர்களுக்குப் பரிவாரமாகவும், பாதுகாப்பாகவும் ஒரு நூறு வீரர்கள் ஆயுதம் ஏந்தி உடன்வந்து கொண்டிருந்தனர். அந்த யாத்திரைக் கூட்டம் திருவையாற்றைக் கடந்து தஞ்சையை நெருங்கிக்கொண்டிருந்தது; ராமேசுவரம் பாட்டை தஞ்சை வழியாக அமைந்திருந்தபடியால். வழியில் அவர்கள் ஆற்காட்டுத் துறையில் மறித்து நிறுத்தப்பட்டனர். அங்கேதான் வெங்கண்ணாற்றுக்கு ஓடத்துறை. அந்த காலத்தில் ஆயுதமேந்திய அணிவகுப்பு தஞ்சைநாட்டு வழியாகச் செல்வதை அன்றைய சட்டம் அனுமதிக்கவில்லை, ஆதலின் யாத்ரீகர்கள் தடுக்கப்பட்டனர், ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் அவர்களின் முதன்மையானவர்கள் தர்பாருக்குச் சென்று முறையிட்டுக்

கொள்ளவும், அங்கீகாரம் பெற்றுவரவும் அனுமதிக் கப்பட்டனர்.

அந்த நியதியால் மராட்டிய யாத்ரீகர்களின் பிர யாணம் ஒருநாள் தாமதமாயிற்று. அவர்கள் வெண் ணாற்றுப் படுக்கையில் முகாமிட்டிருக்க நேர்ந்தது. அந்தத்தடை அவர்களுக்குப் புதிய அனுபவம், அதி லும் மாவீரன் ஷாஜியின் குடும்பப் பெருமைக்குக் குறைவு நேர்ந்து விட்டதெனக் கருதி வருந்திக் கொண்டிருந்தனர்.

அந்நேரத்திற்கு, வெங்கண்ணு மடிசஞ்சியுடன் வடதிசைநோக்கிப் பிரயாணமாகிக்கொண்டிருந்தான். வழியில் ஓடக்காரன் மூலம் புதிதாக முகாமிட்டிருப் பவர்களைப் பற்றித் தெரிந்துகொண்டான். அவன் மூளை சுறுசுறுப்பாகவே வேலைசெய்தது. அவசர அவசரமாகக் கிராமத்திற்குள் நுழைந்தான். குடி யானவர்களைக் கூவியழைத்து வெள்ளரிப் பழமும் இளநீரும் குலைவாழைத்தாரும் கொண்டுவரச் சொன் ஞன். கேட்பவன் வேதியன்; அதிலும் வெங்கண்ணு! ஆதலின் ஏன்? ஏதற்கு? என்ற கேள்விக்கு அங்கு இடமேயில்லை. வந்து குவிந்தது ஏராளமாக. அவற் றுடன் சென்று யாத்ரீகர்களை உபசரித்தான். அவர் களுக்கு நேர்ந்துவிட்ட இந்த நெருக்கடிக்காக நீலிக் கண்ணீர் வடித்தான்; ஆறுதல் கூறினுன். "இந்த அநியாய அரசுக்கு ஆண்டவன் கூலி கொடுப்பான்" என்ற சாபமும் கொடுத்தான். மேற்கொண்டு அவர் களுடைய யாத்திரை நல்லவிதமாகவே முடியவேண்டு மென ஆண்டவனையும் பிரார்த்தித்தான். அவர்களும் இந்த ஆஷாடபூதியை நம்பிவிட்டனர். மெள்ள மெள்ளத் தஞ்சையரசைத் தாறுமாருகச் சொல்லிப்

பயங்கரத்தையும், சந்தேகத்தையும் அவர்களுக்கு ஊட்டினுன். அதோடுகூட உடனடியாக, செஞ்சிக்குச் சேதி அனுப்பி, அங்கிருந்தும் ராஜரீகமான உத்திரவாதம் கேட்டு, தாக்கீது வரவேண்டும் தஞ்சைக்கு. அவ்விதத் தற்காப்பான ஏற்பாடில்லாமல் மேற்கொண்டு யாத்திரையைத் தொடங்குவது நல்லதல்ல வெனத் தூண்டிவிட்டான். உத்திரவுப் பெற்றுவருவதற்காகத் தஞ்சைத் தர்பாருக்குச் சென்றிருந்த முதன்மையாளர்கள் திருப்புவதற்குள் உத்திரவாதம் கேட்கத்தூண்டும் ஓலை செஞ்சிக்கு அனுப்பப்பட்டு விட்டது.

மறுநாள் யாத்திரை தொடர்ந்தது. வெங்கண்ணுவும் அவர்களில் ஒருவன் ஆனுன்; பிரயாண அலுப்பைத் தவிர்க்கும் பௌராணிகப் பொறுப்பை வலிய எடுத்துக்கொண்டு தஞ்சையைக்கடந்து ஒரத்தநாடு வழியாகப் பட்டுக்கோட்டையை அடைந்தனர். அங்கிருந்த கோட்டை யதிகாரி தஞ்சை உத்திரவைப் பார்த்துவிட்டு எவ்விதச் சோதனையையும் புரியாமல் கண்ணியமாகவே அனுமதித்துவிட்டான். ஆனுல் வெங்கண்ணு அவனைத் தனியே சந்தித்தான். "யாத்திரைக் கோலத்தில் மராட்டிய ஒற்றர்கள் தஞ்சை நாட்டில் சஞ்சரிக்கின்றனர். அந்தத் துப்பினைக் கண்டு பிடிப்பதற்காகவே யாத்ரீகனுய் அவர்களுடன் உறவாடி வருகிறேன். அவர்களுடைய மர்ம நடவடிக்கை விபரங்கள், அவர்கள் இங்கே சேகரித்த செய்திகள், அவர்களுக்கு வந்த தகவல்கள் யாவும், பெண்கள் வரும் மூடு பல்லக்குகளில் ரகசியமாக வைத்திருப்பதாக யூகிக்கிறேன்" எனத் தூபமிட்டு வழக்கமான கிழறுப்பினைச் செய்து வைத்தான். தஞ்சைத் தர்பார்

உத்திரவுடன் வந்திருப்பவர்களைப் பகிரங்கமாகச் சோதனையிட வாய்ப்பில்லையே என சோகித்தான், அந்த அதிகாரி. அதற்கும் ஒரு சூழ்ச்சியை ரகசியமாகச் சொல்லிக்கொடுத்தான் வெங்கண்ணு. இவனது வெளியேற்றம் வேந்தனுக்குத் தெரியும். ஆனால் வெளியுலகத்திற்கு அதுவரை எட்டாத செய்தியது. ஆதலின் அதிகாரியும், அவன் சூழ்ச்சிக்கு உடந்தையாக நேர்ந்துவிட்டது.

யாத்திரைக் கூட்டம் அன்றைய மாலையே கோட்டையை விட்டுக் கிளம்பியது. ஆனால் வழியில் அக்னியாற்றில் காட்டுவெள்ளம் கரைபுரண்டு கொண்டிருந்தது. அதனைக் கடப்பதற்குப் பாலமும் இல்லை, அதில் ஓடமும் செல்லாது. வெள்ளம் வடிந்த பிறகுதான் அக்கரை சேரமுடியும். சில சமயங்களில் நாழிகைக் கணக்கில் வற்றினாலும் வற்றும், நாட்கணக்காயினும் ஆகும். இந்தக் கோளாறினால் அன்றிரவை அங்கேயே கழிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது அவர்களுக்கு.

நள்ளிரவு — அனைவரும் நல்ல தூக்கத்திலிருந்தனர், பாராக்காரர்களைத்தவிர. திடீரென பெரியதொரு கொள்ளைக்கூட்டம் வந்து தாக்கிற்று. அந்தக் கலவரத்தில் மராட்டிய வீரர்கள் பலர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். பண்டங்கள் ஆற்று வெள்ளத்தில் இழுத்துவிடப்பட்டன. மாதர்கள் ஏறிவந்த பல்லக்குகள் உடைத்து சோதிக்கப்பட்டன. அவர்களுடைய அணிபணிப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன. ஒரே அல்லகோலம்—மாதர்கள் வேதனைத்தீயில் வெந்தனர். மாவீரன் வெங்காஜியைப்பெற்ற வீரமாது புண்பட்ட

புலியாக உறுத்து நின்றாள். இவ்வளவும் எதிர்பாராத கொள்ளைக் கூட்டத்தின் கொடுமை என்றே மற்றவர் கருதினர். ஆனால், வெங்கண்ணா அங்கே முறிந்து கிடந்த வாளை எடுத்துக் காட்டினான். அதிலே தஞ்சையரசாங்கச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. ஆச்சரியம்—ஆத்திரம்—அருவருப்பு—ஆகிய உணர்ச்சிகள் அனைவரிடமும் பிரதிபலித்தன! அவன் எதிர்பார்த்த படி ஒரு புதுப்பகை முளைத்துவிட்டது அழகிரிக்கு! ஆனால், அந்தக் கோரத்தை விளைவித்த குள்ளநரி வெங்கண்ணாதான் என்பது அந்த அனுதாபத்திற்குரிய யாத்ரீகர்களுக்குத் தெரிய வழியேது?

அன்று, அவர்கள் அனுபவித்த வேதனையானது யாத்திரையை அத்தோடு நிறுத்திக்கொண்டு உடனே ஊருக்குத் திரும்பத்தூண்டிற்று. ஆனால் அப்படி பிரார்த்தனை முறிவு நேருவது அபசகுனமாகும், அவர்கள் குடும்பத்துக்கு ஆகாது— என்னும்படியான குருட்டு நம்பிக்கைகள் அவர்களைப் பெரிதும் குழம்ப வைத்தன. இந்நிலையில், அந்தக் கொள்ளையைப்பற்றிய வதந்தி அறந்தாங்கி அதிபனுக்கு எட்டியது. இரக்கப்பட்டான். துன்பத்துக்காளான அவர்கள் தனது நிர்வாக எல்லையில் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள் என்பதற்காக பாதுகாப்பும், உதவிகளும் அனுப்பி வைத்தான் நல்லெண்ணத்தோடு. ஆனால், வெங்கண்ணாவின் ஆலோசனை அந்த உதவியை நிராகரிக்க வைத்தது, அறந்தாங்கி அதிபன் தஞ்சை யரசுக்குட்பட்டவன் என்ற அருவருப்பினால்.

வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அவர்களுக்கு அந்நேரத்தில் ஆறுதலும், பேருதவியுமாக இருந்தவன் வெங்கண்ணா! அவனது செல்வாக்கையும் காட்டிக்

கொள்ள அதுநல்லசந்தர்ப்பமாயிற்று! இராமனுதபுரம் சேதுபதிக்கு செய்தி அனுப்பினுன். மராட்டியர்கள் எதிர்பாராத அளவுக்கு உதவியும் பாதுகாப்பும் அங்கிருந்து பறந்து வந்தன. அதனுல் மிகவும் எளிதாக விரைவில், கட்டுமாவடி மீம்புசல் மார்க்கமாக இராமனுதபுரம் போய்ச் சேரமுடிந்தது. அங்கே கிடைத்த மரியாதையும் உபசரணையும்: தமிழர்கள் மேல் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த தப்பான எண்ணத்தை மாற்றியது! ஆனுல் அழகிரி மீது தீராத ஆத்திரத்தை வளர்த்தது! மேற்கொண்டு யாத்திரையைப் பற்றிய தன்னம்பிக்கையும் பக்தியும் அவர்களிடம் உரம் பெற்றுவிட்டன. வெங்கண்ணு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான், அவசரமான அரசியல் பொறுப்புகள் நேர்ந்து விட்டதாகச் சொல்லிக்கொண்டு. அதோடு அவர்களைத் திரும்புங்காலில் திருவரங்க தரிசனத்திற்கு வருமாறும் அழைத்தான். அதற்கு அவர்களும் ஒப்புதலளித்தனர். மீண்டும் தஞ்சை வழியாகச் செல்ல விரும்பாததால்.

பின்னர், சில தினங்கட்கெல்லாம் வெங்கண்ணு தஞ்சையின் சுற்றுவட்டாரத்தில சஞ்சரிக்க ஆரம்பித்தான் தலைமறைவாக.அக்ரகாரவாசிகள் அதற்கு அனுசரணையாக யிருந்தனர். பழைய ராஜகுடும்பத்தாரிடம் ஊழியம்புரிந்தவர்கள், உறவு வைத்துக்கொண்டிருந்தவர்கள் ஆகியவர்களைப்பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அவர்களை ஒன்று திரட்டி அவர்களுடைய ஆழ்ந்தராஜ விசுவாசத்தைத் தூண்டிவிட்டு அழகிரிக்கு எதிராக ஒரு உட்பகையை உருவாக்கும் ஏற்பாடு துரிதமாக நடந்தது. அந்த முயற்சியில் கிடைத்த துப்பு! வெங்கண்ணுவை நாகைக்கு இழுத்துச்சென்

றது. அங்கே தேடிச் சென்ற ஆள் தென்படாததால் பல தினங்கள் வீதி வீதியாகத்திரிய நேர்ந்தது. நாகையில் நடமாடிய ஒவ்வொரு வரையும் அடிமுதல் முடி வரை ஊடுருவிப்பார்த்துப் பார்த்துக் கண்களும் பூத்து விட்டன. அதனால் சோர்ந்துவிடவில்லை. ஒருநாள் நீலாயதாட்சி அம்மன் சன்னதியில் வளையல் வியாபாரி பெரியண்ணன் செட்டியை வெங்கண்ணு பார்த்துவிட்டான். வெற்றி ரேகை அவன் முகத்தில் தவழ்ந்தது. ஆர்வம் ததும்ப வளையல் கடையை நோக்கி நடந்தான் வியாபாரிக்கு வெங்கண்ணுவை புரிந்துவிட்டது! கண்கள் இருண்டன. தலைசுழன்றது. நாடி ஒடுங்கிற்று. திகிலும் திகைப்பும் நெஞ்சத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. அந்த அதிர்ச்சியைக்கண்டு வெங்கண்ணு எச்சரிக்கையாகிவிட்டான். ஆதலின் செட்டியை இன்னாரெனக் கண்டுகொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை; தான் கருதிவந்த காரியத்திற்கு இடையூறுகும் என்பதால். ஒருசாதாரண பக்தனைப்போல் காணிக்கை செலுத்த கருவளையல் வாங்கிக் கொண்டு திரும்பி விட்டான். செட்டிக்கும் சென்ற உயிர் மீண்டது. தன்னை விழுங்க வந்த மலைப்பாம்பிடமிருந்து தப்பிப் பிழைத்த உணர்ச்சியும் உற்சாகமும் பொங்கின. கடையைச் சுருட்டினுன். கால்கள் வீடு நோக்கிப் பறந்தன. கண்கள் நாலாபுரமும் துழாவின, அந்த நய வஞ்சகன் பார்வையில் சிக்கிவிடக் கூடாதென்பதற்காக. ஆனல் அவனுக்குத் தெரியாமல் அவனைத் தொடர்ந்தான் வெங்கண்ணு !

எதிர்பாராத நேரத்தில் வழக்கத்திற்கு விரோதமாகக் கணவன் வீடு திரும்பியது புதிராக இருந்தது பெரியண்ணன் மனைவிக்கு. அதிலும் தூசி விழுந்து

எடுக்கப்பட்ட கண்ணைப்போல கலங்கிய நிலைமையைக் கண்டாள். அவள் கண்கள் கேள்விக் குறியாயின. 'தலைக்குமேல் ஆபத்து!' அழகிரியின் அந்தரங்க ஒற்றன அம்மன் சந்நிதிக்கே வந்துவிட்டான்! நல்ல வேளை அந்த நாசகாலனின் கண்களை அம்பாள் கிருபாகரிதான் மறைத்திருக்கவேண்டும்!'

'பிறகு?'

'அந்த வேட்டைநாய் மோப்பம் பிடித்துவிடுமோ என்று அங்கமெல்லாம் பதறிக்கொண்டிருந்தேன். ஒரு ஆறு காசுக்குக் கருவளையல் வாங்கிக் கொண்டு அப்பால் நகர்ந்தான், அதன் பிறகுதான் எனக்கு உணர்வு வந்தது.'

'அவன் என்ன, விலாசத்தை ஒட்டிக் கொண்டா வந்தான்? அழகிரியின் ஒற்றனுக்கும் ஆறுகாசு வளையலுக்கும் என்ன சம்பந்தம்? உங்கள் அச்சந்தான் உங்களை ஆட்டிப்படைத் திருக்கிறது.

'அவனுடைய கொள்ளிக் கண்ணும், கள்ளச் சிரிப்பும், விஷமூச்சும் அப்பப்பா!! நினைத்தாலே இருதயம் ஓய்ந்து விடும்போலிருக்கிறது. வெங்கண்ணுவுக்கு விலாசம் வேறு தேவையா?

'என்ன வேதிய வெங்கண்ணுவா? நம் தஞ்சையைத் தவிடுபொடியாக்கியச் சண்டாளனு!' என அச்சமும் ஆத்திரமும் வார்த்தைகளாக வெடித்தன. அவள் இதயத்திரையில் நினைந்து நினைந்து தழும்பேறிப் போன பயங்கரக் காட்சிகள் சுழன்றன. அன்று அந்தப்புரத்தில் கொழுந்து விட்டெரிந்த அக்கினி குண்டத்திற்கு முன் 'என் குலத்துக்கொரு பிள்ளை—என் குடும்பம் விளங்கவேண்டும்—தஞ்சையரசு இன்றோடு வார்

சற்றுவிடக்கூடாது. நீதான் 'விளக்கேற்றி' வைக்க வேண்டும் என அழுத கண்ணீரும் தொழுத கையுமாக மன்னருவின் மனைவி கெஞ்சி நின்ற சோகக் காட்சி அவளை மீண்டும் ஒருமுறை துடிதுடிக்க வைத்துவிட்டது. 'இனி இங்கிருப்பது ஆபத்து சீக்கிரமே பயணத்தைக் கட்ட வேண்டும் செங்கமலத்தையிட்டு கொண்டு' என்ற முடிவுக்கு வந்துவிட்டாள். செட்டியும் 'விஜயராகவன் பரம்பரையை வேரோடு கெல்லியெறியத்தான் வெங்கண்ணு இங்கேயும் வந்துவிட்டான்போலிருக்கிறது. நாம் விரைந்து வெளியேறிவிட வேண்டும்' என அந்த எண்ணத்தையே பிரதிபலித்தான். கொஞ்சமும் நேரத்தை வீணுக்காது பள்ளிக கூடத்தை நோக்கி நடந்தான் பையனை இட்டுக் கொண்டுவர.

இவ்வளவு பரபரப்பையும் துடிதுடிப்பையும் ஒட்டுக் கேட்டுவிட்டான் வெங்கண்ணு! இனி, நேரடியாக அணுகுவது தனக்கு அனுகூலமாகாதென்பதும் தெளிவாகிவிட்டது. அவனுக்கென்ன யுக்திக்குப் பஞ்சமா? உஞ்சவிருத்திக் கோலத்தில், 'பவதி பிட்சாந்தேகி! அன்னபூரணி தாயே!' என்றுஓலமிட்டான், செட்டி வீட்டு வாயிலில். அந்த அம்மாள் ஆழாக்கில் அரிசியெடுத்து வந்தாள் புண்ணியத்தை அளந்து கொண்டுபோக.

'தாயே! தருமதேவதை போலிருக்கிறுய். உனக்கு சஞ்சலம் ஏனம்மா? திருவரங்கப்பெருமானின் அருளிருக்கும்போது உன் அடைக்கலப் பொருளிற்கு ஒரு ஆபத்துமில்லை அஞ்சேல்! என வரங்கொடுத்தான் ஆரூடத்தோடு. இந்தப் பேச்சு அவளைத் திகைக்க

வைத்தது. ஏற இறங்கப் பார்த்தாள். 'என்னம்மா, இந்த ஏழைப் பிராமணனை எரித்து விடுவதுபோலப் பார்க்கிறாய்? செங்கமலம்! பெட்டியடியில் உட்கார வேண்டிய செட்டி மகனல்ல. சிம்மாசனத்திற்குரிய செல்வக்குமரன் என்பதை ஊரார் அறியாமலிருக்கலாம், உனது எதிரிகளும் கண்டுகொள்ளாமலிருக்கலாம். ஆனால், எங்கும் நிறைந்த பரம்பொருளையுமா ஏமாற்றிவிட முடியும்' என அலட்சியமாய்ச்சிரித்தான்.

அச்சமும் மரியாதையும் அவளைப் பதறவைத்தன அவள் பார்வையில் பக்தி இழைந்தது. 'ஐயா! தாங்கள்'...என விக்கி விழுங்கினாள் வார்த்தைகளை. அதற்கு 'நான் யாராயிருந்தாலென்ன. செங்கமலத்தின் குல தெய்வம் திருவரங்கப்பெருமாள். அவன் சன்னதிக்குச் சென்றுவிடு. எவ்வித ஆபத்தும் அண்டாது! முடியும் அவனைத் தேடிவரும்' என ஆசீர்வதித்து விட்டு விரைந்து மறைந்துவிட்டான். அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அரங்கநாதப்பெருமான்தான் ஐயர் கோலத்தில் வந்தருளியிருக்கவேண்டுமென கற்பனை செய்துகொண்டாள். அனைத்தையும் செட்டியிடம் கொட்டியளந்தாள். அவன் நம்பவில்லை. அவ்வளவும் மனப்பிராந்தி!என மறுத்தான். ஆனாலும் வெங்கண்ணுவின் நினைவு தோன்றித்தோன்றி மருட்டிக்கொண்டேயிருந்தது. ஆதலின் இரவுக்கிரவே எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் நாகையைவிட்டு பிரயாணமாயினர் வெட்டாற்றங்கரை வழியே. அந்த காலத்தில் பெரும்பாலும் ஆற்றங்கரைகளையே பாட்டைகளாகப் பயன்படுத்தினர். ஆதலின் நாகையிலிருந்து திருவரங்கத்திற்கு வரவேண்டிய நேர்வழி இதுவாகத்தான் இருந்தது.

வெங்கண்ணு தான் நினைத்ததை ஒருவாறு சாதித்துக்கொண்டு திருவரங்கத்திற்கு வ ந் து சேர்ந்தான். மருட்டிய யாத்ரீகர்களை எதிர்பார்த்து; அவர்களும் வந்து சேர்ந்தனர், அபிடேக ஆராதனை கைங்கரியங்களெல்லாம் மிகப்பெரிய அளவில் நடத்தி வைக்கப்பட்டன. இதற்கிடையில் பெரியண்ணன் செட்டியும் திருவரங்கத்திற்கு வந்துதன் வளையல் கடையை விரித்து விட்டான். செங்கமலமும் பட்டைநாமத்தில் திருவரங்கத்து யானையோடுபோட்டியிட்டுக்கொண்டு செட்டிக்குதவியாக வளையல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான்.

வெங்கண்ணு, ம ரு ட் டி ய பெண்மணிகளுக்கு வளையலைப்பற்றிய கவனத்தை மூட்டினான். அதிலும் திருவரங்கத்து வளை யலுக்கு அதிக மகிமை கற்பித்தான். பின்னர் கேட்க வேண்டுமா? அங்கிருந்த வளையல் கடைகளெல்லாம் அவர்கள் முகாமில்தான்! பெரியண்ணஞ் செட்டியும் சரியான வியாபாரம சிக்கியதாக சிந்தைகுளிர்ந்து செங்கமலத்தோடும்;சென்றிருந்தான்

அங்கே, எ வ ரு ம் எதிர்பாராத நிலையில் வெங்கண்ணு, " அப்பா செங்கமலம் ! ஆளப்பிறந்தவனே! அரசிளங் குமரனே! உனக்கிந்த கதியா வர வேண்டும், என அலறித்துடித்தான். அவனை ஆரத் தழுவி விம்மினான். செங்கமலம் ஏதும் புரியாமல் திகைத்து நின்றான் மருட்டியப்பிரமுகர்கள், வெங்கண்ணுவைத் தேற்றி விபரங் கேட்டனர்.

" அழகிரியின் ஆதிக்கம் அரசுக்குறிய பிள்ளையை இப்படி ஆண்டியாக்கிவிட்டது. விஜயராகவன் பரம்பரைக்கு இவன்தான் விழுது! வளையல் செட்டியின்

வளர்ப்பாக வாழ்கிறுன், என வருத்தப்பட்டுக் கொண்டான்.

வெங்கண்ணுவின் கபட நடிப்பைப் புரிந்தவண் செட்டி ஒருவன தான். அவனுக்கு ரகசியம் வெளியாகி விட்டதென்ற திகில்? வெங்கண்ணு! அவனுடைய ராஜ விசுவாசத்தையும வானளாவ உயர்த்தி வாயாரப் புகழ்ந்தான். வாழ்த்தினுன். அந்த சொல் வலையில் சொக்கி ஊமை ஆகிவிட்டான் அவனும்.

மருட்டியர்களுக்கு செங்கமலத்தினிடம் இயற்கையாகப் பச்சாத்தாபம் ஏற்பட்டது. அதோடு வெங்கண்ணுவுக்காகவும் கடமைப்பட்டிருந்தார்கள். இவற்ருேடு கூட அழகிரியே அவர்கள் பகைமைக்குரியவன்! அவர்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பமும் சரியான காரணமும் கிடைத்துவிட்டது அவர்களுக்கு. எப்படியும் செங்கமலத்தைத் தஞ்சை சிம்மாசனத்திலேற்றி வைப்பதாக வாக்களித்து செஞ்சிக்கு இட்டுச்சென்ருர்கள், செங்கமலம் வெங்கண்ணு பெரியண்ணன் ஆகியவர்களையும்!

தஞ்சையில், அழகிரியின் அரசு நடந்து கொண்டிருந்த அதே நாளில், செஞ்சிக் கோட்டையின் ஆதிக்கம் சிவாஜியின் சிற்றன்னை மகன் வெங்காஜி வசத்திலிருந்தது. அதனுல், யாத்திரைக்குப்பின் அங்கு சென்றடைந்த மராட்டியர்களுக்கு, மகத்தான வரவேற்பும் உபசரிப்பும் கிடைத்தது. அவர்களுடைய தென்னுடு அனுபவங்களைக் கேட்டுக் கேட்டு ரசித்தனர்; திருத்தலங்கள் தோறும் அவர்கள் தேடிச் சென்ற புண்ணியத்தில், தாங்களும் கொஞ்சம் பகிர்ந்து கொண்டு பரவசமடைந்தனர். ஆனுலும், தஞ்சைநாட்டில் அவர்

களுக்கு நேர்ந்த அவமானத்திற்காகக் கோதித்தனர்; பழிவாங்கும் வெறியுணர்ச்சி மிஞ்சிற்று. அழகிரியின் பால் முகாந்திரம் கேட்பது - நஷ்ட யீடு கோருவது என்ற முடிவுக்கு வந்தான் வெங்காஜி. அந்நிலையில், அபயம் அளித்து இட்டுச் சென்ற செங்கமலத்தைக் கவனப்படுத்தினுன் வெங்கண்ணு! அழகிரியின்மீதேற் பட்டிருந்த ஆத்திரம் செங்கமலத்தின்பால் அதிகப் படியான அனுதாபத்தை ஏற்படுத்தியது.

சொந்த விருப்பு வெறுப்புகட்காக எதிரியிடம் பகைமை காட்டுவதை விட, ஏதோ பரோபகாரத்தை முன்வைத்துப் பகை முடித்துக் கொள்வதே மிகவும் சாதுரியமாகத் தெரிந்தது. மராட்டிய அரசியல் நிபுணர்களுக்கு. ஆனல், அந்நிலையில் அவர்களாக அயலரசுகட்கு உட்பட்ட விவகாரங்களில் தலையிட அவர்கட்டு அதிகாரமேதும் கிடையாது. ஆதிக்கம் மராட்டிய வீரர் வசத்திலிருந்தாலும், தெற்குப்பிராந் திய ராணுவத்தலைமை ஷாஜிக்கே உரியதாஞலும், அன்றைய அரசியலில் அவர்களுடைய அதிகார எல்லை வரையறுக்கப்பட்டதாக இருந்தது, எது நடந்தாலும் நடத்தினுலும், அனைத்தும், சுல்தானின் பெயரால் தான்; அந்தப் பெருமையைப் பீஜப்பூர் வகித்தது! அதனல் அரசியல் ரீதியாக ராணுவ பலத்தோடு செங்கமலத்திற்கு ஏதும் உதவ வேண்டுமானல், பீஜப்பூரின் அனுமதி வேண்டியிருந்தது. அதைப் பெறுவதற்கான ஏற்பாடுகளுடன் வெங்காஜி வெங் கண்ணுவையும் செங்கமலத்தையும் பீஜப்பூருக் கனுப்பி வைத்தான். அங்கே, ஷாஜி சமயமறிந்து சுல்தானிடம் செங்கமலத்திற்காக சிபார்சு செய்தான்

தலைமை தளகர்த்தனின் வேண்டுகோளுக்குப் பின் வேறென்ன வேண்டியிருக்கிறது! செங்கமலம், சுல்தானின் பேரன்புக்கும் தயவுக்கும் பாத்திரமானுன்; வெங்கண்ணுவின் ராஜ விசுவாசம் அங்கே மெச்சப் பெற்றது. உடனடியாக செங்கமலத்தைச் சிம்மாசனத்தில் ஏற்றிவைக்க வேண்டிய கடுமையான கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எதை எதிர்பார்த்து வெங்காஜி காத்திருந்தானே அந்தகட்டளை பிறந்ததும் கேட்க வேண்டுமா?

செஞ்சியில் மூகாமிட்டிருந்த மராட்டிய ராணுவம் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டு விட்டது. இப்படி யொரு புதுப்பகையும் திடீர்த்தாக்குதலையும் எதிர்பாராத அழகிரி, திகைத்தே போனுன், அதுகாறும் அவன் தன் அரசியல் நிர்வாகம், ஆக்கத்துறையிலேயே யிருந்து விட்டதனுல், அழிவுப் போராட்டத்தைச் சமாளிக்கப் போதிய தயாரிப்பில்லாதவனுகத் திண்டாடினுன். இருந்தாலும் கடமையுணர்ச்சியோடு களத்தில் மராட்டியரைச் சந்திக்க வேண்டிய பொறுப்பு அவனைப் பிடர்பிடித்துந்தியது. நாட்டுக் காவலுக்கிருந்த சிறுபடையைத் திரட்டிக் கொண்டு மராட்டியப் படையைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தஞ்சையைவிட்டுக் கிளம்பினுன். இங்கே இவன் தற்காப்பு ஆயத்தங்களை செய்து முடித்துப் புறப்படுவதற்குள், மராட்டியப்படை மிகவும் விரைந்து வந்து கொண்டிருந்தது. ஆனுல் இடையில் கொள்ளிடம் வழிமறித்துக் கிடந்தது. அழகிரியின்படை மற்றவர்கள் கொள்ளிடத்தின் தென்கரையில் அணிவகுத்து நின்றனர். திருவையாற்றுக்கு வடபாலுள்ள விளாங்

குடித்துறையில், வடகரைக்குவந்துசேர்ந்தமராட்டியர் ஆற்றைக் கடப்பதற்கான முயற்சியை மேற்கொண்டனர். போதிய படகு வசதி செய்து கொள்ளமுடியவில்லை—குதிரைகளை நீந்தவிட்டுப்பார்த்தனர். ஆனல், குறிதவருது சாடிய கவண்கல் வீச்சுக்கு முன் அலைகளால் நிலை கொள்ள முடிய வில்லை. காவிரியின் வெள்ளப் பெருக்குமுற்றும் கொள்ளிடத்தில் திருப்பி விடப்பட்டது. இத்தற்காப்பிற்காக. இந்நிலையில், இரு கரையிலும் காத்துக் கிடந்தனர் இரு தரப்பினரும்.

விளாங்குடித்துறைக்கு நேர் எதிர்க்கரை திருமானூராகும். அங்கே முகாமிட்டிருப்பதுபோல் போக்குக் காட்டிக் கொண்டே மராட்டியப் படையில் ஒரு பகுதி கொள்ளிடத்தின் இருளடர்ந்த மரப்புதர்களுக்குப்பின் பதுங்கிப் பதுங்கிக் கிழக்கு நோக்கிச் சென்றது. எதிர்பாராத நிலையில், இரவுக்கிரவே இந்தச் சூழ்ச்சியைக் கையாண்ட இந்த மராட்டியப்படை, மறுநாள் பொழுது புலருமுன் கொள்ளிடத்தைக் கடக்கும் அறிய முயற்சியைக் கணபதி அக்கிரகாரத்தை யொட்டி இடத்தில் செய்தது. எதிரிகள் ஆற்றைக் கடக்கின்றனர் என்ற ஆத்திரம் அங்கே ஏற்படவில்லை அந்தக் கள்ளத்தனம் அழகிரிக்கு எட்டாமலே செய்து விட்டனர், எதிர்முகாமில் வெங்கண்ணு இருக்கிருன்; அவனுடைய ஏற்பாட்டிற்கு எதிர்ப்பாக எந்த ஆரிய அணுவும் இயங்காது என்பதை மெய்ப்பித்து விட்டனர். அதனுல் மராட்டியப் படை தஞ்சையில் நுழைந்துவிட்டது இந்நிலையில் கொள்ளிடத்திலும் வெள்ளப் பெருக்குக்குறைந்து விட்டது. அழகிரியின் நிலைமை மிகவும் அவலமாயிற்று. ஆற்றைக்கடந்து விட்ட

மராட்டியப் படையை எதிர்ப்பதற்காகச் சென்றால் எதிரி அணிவகுத்து நிற்கும் மற்றொரு பகுதி இக் கரைக்கு வந்து விடும். இங்கே காத்திருந்தால், கணபதி அக்கிரகாரத்தின் வழியாக வருகிற வீரர்கள் தஞ்சையைச் சூழ்ந்து விடுவார்கள்; என்செய்வான்! அவனுக்கிருந்த ஒரே வழி படையுடன் பின் வாங்கிச் சென்று கோட்டையுட் புகுந்து கொள்வது தான். அந்தக் கோழைத்தனத்தை அவன் வெறுத்தான்; மானமுள்ள மாவீரனாகப் போராடவே விரும்பினான். ஒரு பகுதியை விளாங்குடியில நிறுத்திவிட்டு, தஞ்சையை நோக்கி முன்னேறும் மராட்டியரை வழிமறிப்பதற்காக விரைந்து சென்றான். இருதரப்பினரும் ஐயம்பேட்டையில் சந்தித்தனர். அங்கே குடமுருட்டி ஆற்றங்கரை களமாயிற்று, மாவீரர்கள் பிணமாயினர் -தஞ்சை மறவர்களின் பேராற்றலுக்கு முன், மராட்டியர்கள் சின்னாபின்னமாயினர். அன்றையப் பகலில் வெற்றி, அழகிரியின் பக்கந்தான்; மராட்டிய வெங்காஜி மனமுடைந்து கிடந்தான் பாசறையில். ஆனால், எதிர்பாராத நிலையில விளாங்குடித் துறையில மராட்டியர் முன்னேறிவிட்டனர். அழகிரியின் அணிவகுப்பு சிதைந்துவிட்டதென்ற செய்தி ஐயம்பேட்டைக்கு எட்டியது. அதனால், மராட்டியர்கட்கு மீண்டும் நம்பிக்கை பிறந்தது. ஆனால், அழகிரிக்கு அது தலையிடியாயிற்று. தஞ்சைக் கோட்டை சட, சடவென்று சரிகின்ற கோரம் அவன் நெஞ்சில் சுழன்று, நெஞ்சை உறுத்திற்று, அமைதியாக நடந்த அரசு, அலங்கோலமாகும் வேதனைக்காட்சிகள். அவன் எண்ணத்தில் மின்னலிட்டன. நிலைமை மீறிவிட்டது; இனி தன் மானத்திற்கான போராட்டத்தில், தஞ்சை மக்கள்

அழியப்போகின்றனர் என்பதை உணர்ந்தான்; அமைதியும வாழ்வும் நிலைபெற அரும்பாடுபட்ட அவனுக்கு அந்த வீழ்ச்சியை சகித்துக்கொள்ள முடியவில்லை. சரணடைந்தால், அதனையும தவிர்க்கலாம் என்பதும் தெரியும்; ஆனாலும், அந்தத் தலையிறக்கத்தினை அவன் தஞ்சைக்கு உண்டாக்கவில்லை. தான், தனியனாய் படையைக் கலைத்துவிட்டுத் தலைமறைவானான், மாரட்டியப் படை பெருந்திரளாய் தென் கரைக்கு முன்னேறிக்கொண்டிருந்த நேரததில், வெற்றுளாய், வீரமும் விவேகமும் வேண்டாத உளார்வாக்கிவிட்டு, அரியலூராக காட்டிற்குள் ஓடி ஒளிந்தான அழகிரி.

## VII

"குடை நிழலிருந்து குஞ்சாரம் ஊர்ந்தோர், நடை மெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர்" என்ற கருத்துரைக்கு அழகிரியே சான்று. முதல் நாள் வரை அவன்தான் தஞ்சைத் தனியரசுக்கு முடிமன்னன்! ஐயம்பேட்டைச் சாவடிக்களத்தில், மராட்டியரை வெற்றிகண்ட மாவீரன்! ஆனல், அன்றைக்கு மறு தினத்தில் அந்த வாழ்வு அவனைப்பிரித்துவிட்டது. தானுண்ட நாடு—தான் வாழ்ந்த அரண்மனை—தான் அனுபவித்த போக போக்கியங்கள்—தன்னருமைக் குடும்பத்தினர், அத்துணையும் அவனலே மறக்கப்பட்டன. யாவற்றையும் இழந்து, காடுமேடுகளுக்கப்பால் கொடி வழிகளில், திக்குத்திசை தெரியாமல் சென்று கொண்டிருந்தான்.

அழகிரி, அரியலூர் வட்டாரத்தில் திரிந்துகொண்டிருந்த அதே நேரத்தில், மராட்டியப்படை, அணி

அணியாகத் தஞ்சையை நோக்கி முன்னேறிற்று தடுப் பாரற்ற நிலையில். சொந்த அரசு தோற்றுவிடடது. அந்நியப்படை ஆக்ரமிக்க வருகிறதென்ற அச்சமோ ஆயாசமோ நாட்டு மக்களிடத்தில் காணப்படவில்லை. வருகின்றபடைக்கு வழி நெடுக வசதிகளும், உபசரிப்பு களும் செய்து கொடுப்பதில் ஈடுபட்டனர், வேதிய குலத்தினா பூரணகும்பமேந்தி, லாலி பாடினர். இந்தச் சூழ்நிலையை மிகச்சுலபமாக, செங்கமலத்தைக் கொண்டு உருவாக்கி விட்டான் வெங்கண்ணு! பழைய ராஜபரம்பரை வழியற்றுப் போகவில்லை; விஜயராக வன் குலம் உயிர் பெற்று விட்டது! ஆளப்பிறந்தவன் வருகிறுன் என்ற ஆர்வப்பெருக்கில் மக்கள் மூழ்கினர்.

மராட்டியத்தளபதி வெங்காஜிக்கு எக்களிப்பு! செங்கமலத்திற்குச் சிம்மாசனம் தேடிக் கொடுத்த பெருமையைவிட தனது பகைவன், தன்குடும்பத்திற் குத்தீங்கிழைத்த எதிரி அழகிரியின் வீழ்ச்சி, அவனுக்கு அதிக பூரிப்பைத் தந்துகொண்டிருந்தது. வெங் கண்ணுவின் ஏற்பாடுகளால் கிடைத்தமரியாதைகள், அவனை மலைக்கச்செய்தன...புகழுரைகளில் சொக்கி விட்டான்...தஞ்சை வளநாட்டில், ஒரு ஏழை உழ வனுக வாழ்வதேமேல் என்று எண்ணும்படியான, உணர்ச்சி வசப்பட்டான்...காவிரியின்வளம், அவன் கருத்தைக்கவர்ந்தது. தளபதி என்ற அந்தஸ்தை விட.

கடமை, அவனை இங்கே அதிககாலம் தாழ்த்த அனுமதிக்கவில்லை...ஆதலின், வெகு விரைவில் அரசி யல் நிர்வாகங்களை ஒழுங்குபடுத்தி, செங்கமலத்தின் பேரால், தஞ்சை அரசியலை புதுப்பித்தான்...முறைப் படி, முடிசூட்டும் நடந்து விட்டது...விடைபெற்றுச்

செல்லவேண்டியவன்; அரசாங்க விருந்தினராக அவனையும், அவனது படையையும், மேலும் சில தினங்கள் தங்கிப்போகவற்புறுத்தினான் வெங்கண்ணா. அதனால், குடந்தையை யடுத்த ஆரியப்படையூர், பம்பைப்படையூர், நடுப்படையூர் என்ற பகுதிகளில் முகாமிட்டிருந்தனர் மராட்டியர்.

செங்கமலம் போதிய வயது வராத இளைஞன். அவன் முடிசூட்டினாலும், அரசியல்பீடியை, அவனிடத்தில் அதற்குள் ஒப்புவிக்தலாகாது என்ற கருத்து வெங்கண்ணாவுக்கு. அவனுககும, அரசுக்கும் ஒரு பாதுகாப்பாளன் ஏற்படுத்த வேண்டும. அந்தப் பொறுப்புக்குத் தஞ்சையரசில், தகுதிமிக்கவன் தான் ஒருவனே என்ற எண்ணததோடிருந்தான். அந்த ஏற்பாட்டை முன்னிட்டே மராட்டியப்படையை மேலும் தங்கவைத்தான்.

வெங்கண்ணாவின் அந்த நைப்பாசை செங்கமலத்திற்குப் புரியவில்லை. "தனக்கு வாழ்வு தேடிக் கொடுத்த கருணாமூர்த்தி! கைமாறு செய்து அந்த நன்றிக்கடனைத் தீர்க்கமுடியாது-கூடாது; குலகுருவாகக் கொள்வதே முறை" யென்ற முடிவைச் செய்து கொண்டான். ஆதலின், அரசியல் காரியங்களில் தனக்கு உதவியாக, அமைச்சு பூணும் பொறுப்பைத் தன்னைத் தலை மறவாகவைத்து வளர்த்து ஆளாக்கிய பெரியண்ணஞ் செட்டியிடம் ஒப்புவித்தான். அந்த ஏற்பாடு வெங்கண்ணாவுக்கு உறுத்தலாக இருந்தது. "செங்கமலம்! உன்செய்கைசிறுபிள்ளைத்தனமானது" எனச் சீறினான் வெங்கண்ணா. நம்பிக்கைக்கு உரியவர், ஆபத்துகளுக்கு இடையில் என்னை ஆளாக்

கியவர் அவருக்கு இந்தப் பெருமை கொடுத்ததில் எந்த விதத்தவறுமில்லை'' என மறுத்தான் செங்கமலம் ''நானொருவன் உடனிருப்பதை மறந்து விட்டாய்! சராசரி குடிமக்களில் ஒருவனாய் ஒளிந்து வாழ்ந்த உனக்கு உல்லாசங்களைத் தேடிக்கொடுத்தேன், உனது பாட்டன் பறிகொடுத்த நாட்டை, மீட்டுவைத்தேன் உலகம் தெரியாத சின்னஞ்சிறுவனாகிய உன்னை மன்னனாக்கி வைததேன்-இவ்வளவையும் கருதவில்லை... பெருமை செய்யவேண்டிய என்னை மறந்துவிட்டாய்! வளையற் செட்டிக்கு மந்திரி யந்தஸ்து? அது எனக்குச் செய்த துரோகம்! என்னைச் செய்த அவமானம்! என ஆத்திரபபட்டான. செங்கமலத்திற்கு இன்னது செய்வதென்று புரியவில்லை.

'' அமைச்சர்பதவி, அரசுக்கு ஊழியம்! ஆனல், உங்களுக்கு நான் அடியவன்; அரசகுருவாக உங்களைப் போற்றுகிறேன். நீங்கள் காட்டுகிறவழியில் செல்லக் கடமைபட்டிருக்கிறேன்'' என்று கெஞ்சினான். வெங்கண்ணாவுக்கு விட்டுக் கொடுக்க மனமில்லை. செங்கமலத்தின் உள்ளன்பைச் சந்தேகித்தான். பெரியண்ணனுக்கு வழங்கிய அமைச்சர் பதவியை ரத்து செய்தேயாக வேண்டும்-என்ற கடுமையான முடிவை வற்புறுத்தினான் வெங்கண்ணா.

என்ன செய்வான் செங்கமலம்! செய்த ஏற்பாட்டை மாற்ற, அவன் மனச்சான்று ஒப்பவில்லை அதிலும், அவனைவளர்த்து ஆளாக்கிய பெருமைக்குரியவனுக்குக் கொடுத்த மரியாதையை, அவனே குலைப்பதென்றால்......? எவ்வாறு முடியும் ........? கொடுத்த பொறுப்பை வகிக்க அருகதையற்றவனும்

அல்லவே ..? இந்நிலையில், வெங்கண்ணவை எப்படித் திருப்தி செய்யமுடியும்..? வளர்கப்பட்டபாசம் வேறு குறுக்கிட்டுவிட்டது. முடிவாக,நடந்து போனவற்றை விட்டு விட்டுப் புதிய ஏற்பாடு எது கூறினலும் நிறைவேற்றுகிறேன் என்ற உறுதி யளித்தான்.

ஒரு சின்னஞ்சிறுவன், தன்சொல்லை அவமதித்து விட்டான் என்ற வெட்கமும், வேதனையும் வெங்கண்ணவை வாட்டியெடுத்தன. அதிலும் தான் பார்த்து அரசுரிமை தேடித்தரப்பட்டவன், தன்னையே அலட்சியம் செய்து விட்டான் என்ற ஆங்காரத்தால், மிதிபட்ட நாகமானன்...அவிழ்ந்த குடுமியை கட்ட கூடப் பொறுமையில்லை. அவனது ஆத்திரத்திற்கு முன் அழிந்துபட்ட விஜயராகவன், அழகிரி- ஆகியோர் கள் நினைவுக்கு வந்தனர். செங்கமலம், சிறு துரும் பாகத் தெரிந்தான். தீய்த்துவிட முடிவுகட்டினன். அதற்கான திட்டத்தை உருவாக்கியவண்ணம், அரண் மனையைவிட்டு அவனது ஆஸ்ரமத்திற்குச்சென்றுன்.

மராட்டியத் தளபதி வெங்காஜிக்கு, செங்கமலத் தின் பேரால் அழைப்புச் சென்றது. விருந்துக்கு ஐயாற்றில், ஆற்றோர மாளிகையில், அரச விருந்து. அதில் தலைமை விருநதாளி, தளபதி வெங்காஜி! பெருமைக்குரிய இந்த அழைப்பை ஏற்றுக்கொண் டான் வெங்காஜி...குறிப்பிட்ட நாளில், தனது குழாத் துடன் திருவையாறு வந்துசேர்ந்தான் வெங்காஜி! அங்கே, ஏனென்று கேட்பாருமில்லை; எவ்வித ஏற் பாட்டையும் காணவில்லை. 'விருந்துக்கழைத்து, வெறும் பட்டினியாத் திரும்பச்செய்துவிட்டான்' என்ற அவமானத்தை அவனல் தாங்க முடியவில்லை. நேரே தஞ்சைக்குச் சென்று நிலைமையைத் தெரிந்து

செல்வதென்ற வேகத்தோடு தஞ்சையை நோக்கினர், குதிரைகளின் குளம்படி கிளப்பிய புழுதிப் படலம் வானத்தை மண்டலமிட்டது......பெரும்படை முற்றுகைக்கு வருவது போன்ற தோற்றம். தொலைதூரத்தினரை நடுங்கவைத்தது. வெங்காஜிக்கு செங்கமலத்தின் பேரில் சீற்றமுண்டாக்க வேண்டுமென்பதற்காகவே வெங்கண்ணு இந்தச் சதிபுரிந்தான். இதனுல், என்னென்ன நிலைமைகள் ஏற்படும் என்பதும், அவனது யூகத்திற்கு அப்பாற்பட்டவையல்ல, ஆதலின், அரண்மனை நோக்கி, தனது வர்க்கத்தினரை, அலறிப் புடைத்துக் கொண்டு ஓடவிட்டான். செங்கமலம் திகைப்புற்ருன். 'படைவருகிறது, படைவருகிறது' என்ற வதந்தி, நகரில் ஒரே பரபரப்பாயிற்று. வெங்கண்ணு, பெரியண்ணனை யழைத்து 'செங்கமலத்தைக் காப்பாற்ற வேறு வழியில்லை; மாறு வேடத்துடன், சுரங்கப் பாதை வழியாக வெளியேறு!, பிறகு, நான் பார்த்துக்கொள்கிறேன்'' என நயமாகச் சொன்ஞன்.

இருந்த நிலைமை, ஏற்பட்ட பரபரப்பு, இத்தனை காலம் வளர்த்த பிள்ளைக்கு ஏதும் நேர்ந்துவிட்டால் என்னசெய்வது—என்ற கவலை, யாவும் ஒரே குழப்பமாயிற்று. அவனறிவு வேலைசெய்யவில்லை. வேதியநரி விரீத்த வலையில் விழுந்து விட்டான். அதனுல், செங்கமலத்தைக் கேட்காமலே, இழுத்துக்கொண்டோடினுன், காப்பாற்றுவதாக நினைத்து. அரசமுடியும், அரசியற் பிடியும், வெங்கண்ணுவின் அடியில் உருண்டுகிடந்தன.

ஆத்திரத்தோடு வெங்காஜியுட்பட, அவனது பரிவாரத்தையும், தர்பாருக்கு இட்டுச்சென்ருன் வெங்

கண்ணு. அங்கே, அரியணை காலியாக இருந்தது. "செங்கமலம் எங்கே?" என்று சீறினன் வெங்காஜி. "இதோ!" எனத் தன் கையிலிருந்த 'முடி'யைக்காட்டிச் சிறுநகைபுரிந்தான் வெங்கண்ணு. அவனுடைய சீடர்கள் மங்களம் பாடினர். தஞ்சையின் முடி, வெங்காஜியின் தலையில் ஏறிற்று. இந்த வாய்ப்பை, வெங்காஜி எதிர்பார்க்கவில்லை. பீஜப்பூர் சுல்தானின் உத்திரவுக்கும் அப்பாற்பட்டதாயிற்றே என்று அஞ்சினன். அனைத்திற்கும், "தானுண்டு, சாணக்கிய சாகசமுண்டு" என்பதைச் சொல்லாமற் சொல்லி, தஞ்சையில புதிய—மராட்டிய—பரம்பரையைத் தோற்றுவித்தான வெங்கண்ணு!

## VIII

இப்படியாக தஞ்சையின் சரித்திரம் அழித்தழித்து எழுதப்பட்டது. விஜயராகவன், அழகிரி, செங்கமலம் ஆகிய முடி மன்னர்கள் மூவரும் ஒருவர் பின் ஒருவராய் வெங்கண்ணுவின் விஷமப் புன்னகையில பொசுங்கிப் போனர்கள். அரசு கலகலத்தது. மக்கள் அமைதி அழிந்தனர். அவன் ஒருவனுடைய அரசியல் சூதாட்டத்தினல்......!

தஞ்சைக்கு முதல் மராட்டிய மன்னனை வெங்காஜியும் அவனை நம்பினன். அரசியல் காரியங்களில் வெங்கண்ணுவின் செல்வாக்கு முன்போலவே தலைவிரித்தாடிற்று. வெங்காஜி தனது அந்தப்புறத்தில் அழகிகளின் சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொண்டிருந்தான். வேல்விழி மாதர்கள் அவன்மேல் மையல் பார்வைகளைச் சொரிந்தனர். அவர் தம் கொவ்வை

இதழ்கள் அவனுக்கு அமுதக் கிண்ணங்களாயின. தளிர்நிற மேனியர் அவனைத் தழுவிப்புரண்டு கொண்டிருந்தனர். பார்த்த இடமெல்லாம் பஞ்சணைகள். அவற்றில பூத்துக் குலுங்குகின்ற புதுமலர்ப் பாவையர்கள். வெங்காஜி சொக்கி விட்டான். விடிந்தாலும் சரி பொழுது விழுந்தாலும் சரி பெண் பெண் பெண...!! மது, மங்கை.. ! அந்த மயக்கத்திலே மண்டலாதிபதி மதியிழந்து கிடந்தான். அதைத் தான் வெங்கண்ணாவும் எதிர்பார்த்தான. அரச காரியங்கள் அவன் காலடியில் கிடந்தன. அவன சொன்னதே வாக்கு, வைத்ததே சட்டம என்ருகிவிட்டது.

இந்நிலையில் வெங்காஜியின் நலத்தில் அக்கரை கொண்ட ரகுநாத அனுமந்தையா என்ற மகாராஷ்டிர ராஜதந்திரி தஞ்சைக்கு வந்து சேர்ந்தான். ஆட்சி கிடந்த அலங்கோல நிலை அவன் அறிவுக் கண்களை உறுத்திற்று என்ன இழுக்கான நிலைமை! மண்ணாளும் மன்னன் மங்கையரின் கைப்பாவை! மற்றவனின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் வேதிய வெங்கண்ணாவோ ஆட்சிக்கோலின் சூத்ரதாரி! அரசன் அழகிகளின் சிறைக்கைதி. அந்தணன் ஆட்சியின் சர்வாதிகாரி !! சிங்க ஏறு சிவாஜிச் செம்மலின் சகோதரன இந்த நிலையில் கிடக்கிறன் ? அரி 'இருந்த ஆசனத்தில் நரி இருந்துநாடாள்வதா...?

அனுமந்தையா சிந்தித்தான். அவனுடைய அறிவு தஞ்சையின் கடந்த கால வரலாற்றைச் சோதித்தது. மூன்று தலைமுறையின் முன்னேடுகள் வெறும் புகழ்ச்சி படலமாகவே இருந்தன. அந்த அழிவுக் கதைகளில் காட்சிக்குக் காட்சி வெங்கண்

ணுவே அங்கம் வகித்து நடத்தியிருக்கக் கண்டான். தமிழ் அரசின் மறம் செறிந்த மூன்று தலைமுறைகளை மடமடவென்று சரித்தவன் வெங்கண்ணு! விஜயராகவனின் வீரம் வீழ்ச்சியடைந்தது யாரால்? அழகிரியின் ஆற்றல் அழிந்தது எவரால்? செங்கமலம் சீரழிக்கப்பட்டது எந்தச் சூழ்ச்சிக் கரத்தால்? .....அந்தக் கேள்விகளின் பின்னல் வெங்கண்ணுவின் நயவஞ்சகநரிப் பார்வையும், விஷமப் புன்னகையுமே தோன்றின. பாராண்ட மன்னர்களைப் பகடைக் காய்களாக உருட்டிவிட்ட அந்தப் பாதகன் பயங்கர மனிதன் மீண்டும் தஞ்சை தர்பாரில் ஆதிக்கம்புரிவதை அவன் ஒப்பவில்லை. வெங்கண்ணு விரித்த வலையிலே வெங்காஜி விழுந்துவிடாமல் காப்பாற்ற நினைத்தான். வெங்காஜியோ வெங்கண்ணுவுக்கு உடந்தையாக இருந்தான். ஆனல் வெளிப்படையாக அனுமந்தையாவை எதிர்க்கவோ, புறக்கணிக்கவோ துணிவு கிடையாது. அந்த அளவுக்கு சிவாஜியின் அபிமானத்தைப் பெற்றிருந்தார் அனுமந்தையா. ஆயினும் என்ன? அவருடைய ஆலோசனைகள் செவிடன் காதில் ஊதிய சங்காயின. வெங்காஜி திருந்தியபாடில்லை. வேறு வழியின்றி தஞ்சையில் நடந்துவந்த நடைமுறையைப் பற்றியும் வெங்கண்ணு விளைவித்திருந்த விபரீதங்களையும் குறித்து சிவாஜிக்கு நிருபம் விடுத்தார்.

சிவாஜியும் வெங்காஜியை வழிப்படுத்த விரும்பினர். ராமேசுவரம் யாத்திரைக்கு ஏற்பாடு செய்து கொண்டு தென்னுடு முழுதும் திக்விஜயம் செய்யத் திட்டமிட்டுக்கொண்டார். நாற்பதாயிரம் மராட்டியப் படையும் உடன் புறப்பட்டது.

இந்த செய்தி வெங்காஜிக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. இவ்வளவும் அனுமந்தரின் ஏற்பாடு என்பதும் புரிந்துவிட்டது. திகைத்துத் தடுமாறிச் சிந்தை குழம்பினான். ஆனால் வெங்கண்ணு அனுமந்தரின் அறிவு பெரிதா தனது அரசியல் தந்திரம் பெரிதா என்ற போட்டியை நடத்திப் பார்த்துவிட முனைந்தான். எது எப்படியானாலும் நஷ்டம் அடைவது அவன் அல்லவே?

வெங்கண்ணுவின் குன்னமதி குயுக்திப் பாதையிலே குறுநடை போட்டது. அவருடைய அந்தரங்க சீடர்கள் யாரும் அறியாமல் அடுத்துள்ள மதுரைக்கும் மைசூருக்கும் தூது நடந்தனர். சூழ்ச்சி வலை விரிந்தது. சூதறியாத மன்னனும், முன்னால் முகமலர்ந்து பின்னால் புறங்குத்தும் எத்தறியாத அனுமந்தரும் வாளாவிருந்தனர்.

மதுரை, மைசூர் மன்னர்கள் கர்நாடகத்தைக் காப்பதாகக் கருதிக் கச்சை கட்டினார்கள். வெங்காஜிக்கு தைரியத்தை ஊட்டி வீராப்போடு எதிர்த்து நிற்கத் தூண்டினார்கள். வெங்காஜியோ, திகைப்பு ஒருபக்கம், தீரம் ஒருபக்கம்...வியப்பு ஒருபக்கம்... வீறுப்பு ஒருபக்கம், மயக்கம் ஒருபக்கம், மண்டைக் கிறுக்கு ஒருபக்கமாகத் திண்டாடிக்கொண்டிருந்தான்.

இந்த முஸ்தீப்புகளுக்கிடையே வெங்கண்ணு தலைமறைவானான். வெங்காஜியும் அனுமந்தரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டதாக மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான்.

சிவாஜி மல்லிகார்ச்சுனம் வரை வந்துவிட்டார். மகாராஷ்டிரப்படை வெற்றி நடைபோட்டது. வருகின்ற வழியெல்லாம் அவர் வசமாயிற்று. தலைநகரம் தஞ்சையில் சிவாஜியின் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார் அனுமந்தர். ஆனால் மல்லிகார்ச்சுனம் தாண்டி மகாராஷ்டிரப் படைகள் அடி எடுத்து வைக்கவில்லை. சிவாஜி அங்கேயே சில தினங்கள் தாமதித்தார் முடிவில் அங்கிருந்தபடியே திரும்பிவிடவும் நிச்சயித்துவிட்டார். படையோடு வந்த சிவாஜி பாதி வழியில் திரும்புகிறார் என்ற செய்தி வெங்காஜிக்குத் தித்திப்பானது. ஆனால் அனுமந்தருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. விரைந்து மல்லிகார்ச்சுனம் சேர்ந்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது.

சாம்பராணி புகையின் நடுவிலே, சன்மார்க்க ஞானிகளின் சூழலிலே, தெய்வத் திருவுருவங்களின் முன்னிலையில் தீரர் சிவாஜி பச்சைக் குழந்தைபோல் காட்சி அளித்தார். 'வீர சிவாஜி' வேதாந்த விசாரணையில் மூழ்கிக்கிடந்தார். முடிவற்ற மாயா வாத தத்துவங்கள் அவர் மனதைக் குழப்பியிருந்தன. மல்லிகார்ச்சுனருக்கு லட்சார்ச்சனை அதி விமரிசையாய் நடந்துகொண்டிருந்தது. 'இன்றிருந்து நாளை மறையும் இக வாழ்வைச் சதமென நினைந்து சென்றிருந்த காலமெல்லாம் சிவன் கடைத்தேறும் மார்க்கத்தைச் சிந்தியாது போர் என்றும் படையென்றும் புவி என்றும் வாழ்வென்றும் வாழ் நாளை வீணாகக் கழித்து விட்டேனே,' என்று புலம்பிக்கொண்டிருந்தார் சிவாஜி

அவர் அனுமந்தருக்கும் கூட ஆத்மார்த்த ஆலோசனைகள் கூறினர். அந்த அளவுக்கு மன்னனுடைய மனம் கெடுக்கப்பட்டிருந்தது. என்னே விந்தை! வெங்காஜிக்கு மது, மங்கை!! சிவாஜிக்கு மதம்!!! இத்தனை பெரிய மாறுதல் எதனுல் நேர்ந்திருக்கக்கூடும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தார் அனுமந்தர்.

மல்லிகார்சுனத்தில் நடத்தப்பட்ட விழா—மன்னனுக்குச் செய்யப்பட்ட உபசாரம்—உபதேசம்—அனைத்துக்கும் பின்னுல் வெங்கண்ணுவின் நரித்தனம் பதுங்கியிருப்பது புரிந்துவிட்டது. திரைக்குப் பின்னுல் அவனும் அங்கேயே தன் திட்டம் வெற்றி பெற்றுவிட்டதென்ற செருக்கோடிருந்து கொண்டிருந்தான். அனுமந்தர் துடித்தார். அற்பனின் சூழ்ச்சிகளை அரசன் முன் அம்பலப்படுத்துவதெப்படி என்ற ஆலோசனையில் ஈடுபட்டார்.

சிவாஜியை ஏமாற்றிவிட்டோம். அவர் நாடு திரும்பிவிடுவார். வெங்காஜியைக் கைப்பாவையாக வைத்துத் தஞ்சையில் தன் தர்பாரை தங்கு தடையின்றி நடத்திக் கொண்டிருக்கலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான் வெங்கண்ணு. அதிகாரப் பித்தம் அவன் தலைக்கேறியிருந்தது. ஆட்சிக் கொள்கையில் அக்ரஹாரத்தை வளப்படுத்தும் கலையிலே புதிய அத்யாயங்களைப் படைக்கும் திட்டங்கள் அவன் மூளையில் உருவாகிக் கொண்டிருந்தன. அனுமந்தையாவின் அரசியல் அறிவைத் தந்திரத்தால் தரைமட்டமாக்கிவிட்டோம் என்ற இறுமாப்பில் சற்று எக்காளத்துட

னேயே நடந்துகொண்டான். ஆனால் எத்தர்களின் ஏற்றம் எத்தனை நாள்? சற்றும் எதிர்பாராத நிலையிலே அனுமந்தர் அவனுடைய முகமூடியைக் கிழித்தெறிந்தார். வெங்கண்ணு கபட சந்யாசி என்பது வெட்ட வெளிச்சமாக்கப்பட்டது. வெளியிலே வேதாந்த விசாரம். உள்ளே பதவிப் பித்தம். சுற்றிலும் அடியார்கள் கூட்டம். சூழ்ச்சியில் ஆட்சிமேல் நாட்டம். சொல்வது, பரமனின் பாதம் சேர்வதே குறி என்று. சிந்தையில் மாருத அதிகார வெறி! சிவாஜிக்கு எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

சிவாஜி சீறி எழுந்தார். கோபக்கனலிலே அவர் கண்கள் இரத்தப் பழங்களாயின. "பரலோகம் எனக்கு இகலோகம் உனக்கா.. ...? மண்ணாசை மன்னனுக்குத் தேவை இல்லை; அது முற்றும் துறந்தவர்களுக்கு மட்டும்தான் வேண்டுவதா...?" வார்த்தைதள் சுடச் சுட அவர் வாயிலிருந்து வெளிக்கிளம்பின. வெங்கண்ணு நடுநடுங்கினான். அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. 'எல்லாம் போயின உயிர் தான் மிஞ்சுமோ?' என்றஞ்சினான். ஆயினும்.. இடுப்பின் கீழ் எல்லாம் நடுநடுங்கிக் கொண்டிருந்தபோதிலும் நாட்டம் எனக்கு நரகதிமேல்தான் என்று பொய்ச் சத்தியம் வைத்தான் நயவஞ்சகன்.

சிவாஜியின் சீற்றத்தின் முன் வெங்கண்ணு பொடிப் பொடியாகியிருப்பான், ஆனால் அவன் மார்பிலே புரண்ட முப்புரி அவனைக் காப்பாற்றியது. நாட்டிலே பரவிக்கிடந்த ஆரியசெல்வாக்கு அவன் உயிருக்கு வல்லரண் ஆயிற்று. மத மாயையிலே மயங்கிக்கிடந்த

மக்களின் பகையைத் தேடிக்கொள்ள மன்னர் மன்ன னும் விரும்பவில்லை. சிவாஜி சிந்தித்தார். மேலும் அரசியல் சதிகளிலே ஈடுபடவொட்டாமல் அவனைத் தடுத்து நிறுத்திவிட்டாலே போதும் என்று கருதினர். தனக்கு போதித்த வேதாந்த விசாரணையிலேயே அவன் காலம் கடத்திவிட வேண்டும். அரசியல் காரியங் களிலே தலையிடக் கூடாது என்ற நிபந்தனையின் மேல் விடப்பட்டான். வெங்கண்ணு......

ருசி கண்ட பூனை சும்மா இருக்குமா? அதிகாரப் பித்தம் அத்தனை விரைவில் தெளிந்து விடுவதா என்ன? வெங்கண்ணு மீண்டும் சதி வேலைகளிலே ஈடுபட் டால்...? சிவாஜி அதற்குச் சரியான ஏற்பாடு செய்தார். தன் கைதேர்ந்த ஒற்றர்களையே அவனுக்குச் சேடர்களா கப் போகும்படி அவனுடைய நடத்தைகள் பற்றி அடிக்கடி தகவல் அனுப்பும்படியும் ஏற்பாடுகள் செய் தார்.

பசையில் விழுந்த ஈப்போல் வேதாந்த சிந்தனை யிலேயே விழுந்துக் கிடக்க வேண்டியவன் ஆனன் வெங்கண்ணு. அவனுக்கு அரசியல் துறவு தானுக வந்துவிடவில்லை. அவன் தலைமேல் கொண்டு வந்து சுமத்தி வைக்கப்பட்டது. ஆன்மார்த்திக விசாரத்தை அவன் சீவன் முக்திக்காகத் தேடிக்கொண்டு போக வில்லை. அந்த சீவனைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவன் போட்டுக்கொண்ட அதே வேஷத்தில் நிலையாக நடிக்கவேண்டி வந்தது. நடிப்பு அவனுக்கு நாடக மேடை அளவோடு போய்விடவில்லை. வாழ்க்கையாக வுமே அமைந்துவிட்டது. தத்துவார்த்தக் கூண்டிலே

அவன் தடுமாறும் புலியானான். இவ்வாறாக அவன் அரசியல் சதி நாடகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது.

அந்நிலையில் மொகலாயப் படை தக்காணத்தை நோக்கி வருவதறிந்து சிவாஜி வடக்கே திரும்ப நேர்ந் தது. ஆனால் கொண்டு வந்த படையில் ஒருபகுதி அனு மந்தரின் தலைமையிலேயே தஞ்சைக்கு அனுப்பி வைக் கப்பட்டது, வெங்காஜிக்கு துணை நிற்க.

மைசூர், மதுரை மன்னர்கள் நஷ்ட ஈடு கொடுத்து ஒதுங்கிக் கொண்டனர். என்செய்வான் வெங்காஜி? வேறு வழியின்றிச் சரணடைந்தான்.

அந்த அளவில் அனுமந்தையாவின் தலையீட்டால் தஞ்சையில் மகாராஷ்டிரர் ஆட்சி தற்காலிகமாக நிலை நிறுத்தப்பட்டது. ஆனால் தமிழர் ஆட்சி ..? தஞ்சை யிலே தமிழன் தாழ்வுற்று வீழ்ச்சி அடைந்ததன் கார ணம் காலப் பொன்னேட்டிலே மறைக்கமுடியாத சரித் திரச் சான்றாக அதன் சரிந்த கோட்டையிலே, இடிந்த மதில்களிலே, தூர்ந்த அகழிகளிலே இடம் பெற்றுக் கிடக்கின்றன. தாழ்ந்த தமிழகம் மீண்டும் வாழ்வை அடைய வேண்டுமானால் அந்தப் பழமை அடிச்சுவடு களைத் திரும்பப் பார்க்கவேண்டியது மிகவும் அவசியம்.

முடிந்தது

காமராசர் பல்கலைக்கழகம்
அல்லை

# சிறந்த நூல்கள்

## ஆசைத்தம்பி எழுதிய

| | |
|---|---|
| அன்பழகன் ஆட்சி | 1—4—0 |
| விந்திய வீரன் | 1—[illegible]—0 |
| இரவில் வந்தவள் | 1—0—0 |
| இரத்தக்கல்யாணம் | 1—0—0 |
| டாக்டர் | 1—0—0 |
| திராவிடர் இயக்கம் ஏன்? | 0—8—0 |
| அறிவுரைகள் | 0—6—0 |
| சென்னையில் ஆசைத்தம்பி | 0—4—0 |
| அறைகூவல் | 0—3—0 |

## ரா. தணலன் எழுதிய

| | |
|---|---|
| நரகவாசலில் | 1—8—0 |
| பைத்தியக்காரன் நாட்குறிப்பு | 1—0—0 |
| வாழும் உரிமை | 0—3—0 |

## இளங்கீரன் எழுதிய

| | |
|---|---|
| காதல் உலகிலே | 1—8—0 |
| கலாராணி | 1—8—0 |
| அழகு ரோஜா | 1—0—0 |

## இதர நூல்கள்

| | |
|---|---|
| செவ்வானம் (கோரநாதன்) | 1—8—0 |
| விதவையின் காதல் | 1—0—0 |
| சூழ்ச்சி | 1—0—0 |

—:தேவைக்கு எழுதுங்கள்:—

**எரிமலைப் பதிப்பகம், துறையூர்.**

திருச்சி மாவட்டம்.

மறக்க முடியாத தத்துவங்களை
மணி மணியாக உதிர்த்தான்
அந்த நாடோடி நல்லிளைஞன்........!

மீள முடியாத காதலிலே
அவனுக்காக அவள் தன்னுடைய
எல்லாவற்றையும் தியாகம் செய்தாள்....!

சமுதாயம் நம்மை வஞ்சித்து நமது
வாழ்வைச் சின்ன பின்ன மாக்கிவிட்டது.

அது,

# நரகவாசலில்

நிற்கிறது என்றான் அவன்.

என் ?

★

உலக இலக்கியங்களின் வரிசையிலே
அழியாத இடம்பெறத்தக்க அந்த அற்புத
மான நவீனத்தைப் படித்துப் பாருங்கள்.

**ரா. தணலன்** எழுதியது. விலை ரூ. **1-8-0**

இது ஒரு

## எரிமலை வெளியீடு

Jacket printed at Shanti Press, Madras-1